**پالا** (pālā) *n.m.* உறைவு, குளிர்விக்கும் ஆற்றல்.

**پامردی** (pāmardi) *n.f.* பெருஞ்செயல் வீரம், பேராண்மை.

**پانا** (pānā) *v.* கண்டுபிடி, தேடி எடு, முயன்றுகாண், கண்டுணர்.

**پانی** (pāni) *n.m.* நீர்.

**پپوٹا** (papoṭā) *n.m.* கண்ணிமை.

**پتا** (patā) *n.m.* அடையாளம், அடையாளக்குறிப்பு, மேல் விலாசம்.

**پتّا** (pat-tā) *n.m.* அட்டை, சுவடித்தாள், தாளின் இரண்டு பக்கங்கள்.

**پتّا** (pit-tā) *n.m.* கோபம், கடுஞ்சினம், சீற்றம், எரிச்சல், பித்தப்பை.

**پتلا** (patlā) *adj.* மெலிந்த, மெல்லிய, மெலிவான, மெலிதான, கொழுத்திராத.

**پتلا** (putlā) *n.m.* வழிபாட்டுக்குரிய தெய்வஉருவம், பொய்த்தெய்வம், பொம்மை, பாவை.

**پتنگ** (pa-tang) *n.m.* பட்டம், காற்றடி.

**پته** (path) *n.m.* பெருஞ்சாலை, வழி, காலடிப்பாதை, நடைப்பாதை.

**پختری** (pukhtari) *n.m.* பிசைந்து வேகவைத்தமாவு, அப்பவகை.

**پدید** (pa-did) *adj.* வெளிப்படையான, தெளிவான.

**پذیره** (pazira) *adj.* ஏற்றுக்கொள்ளத்தக்க, விரும்பத்தக்க.

**پر** (par) *conj.* ஆனால், எனினும், மாறாக, அவ்வாறன்றி, எதிராக.

**پر** (par) *n.m.* இறகு, சிறகு.

**پرانا** (purā-nā) *adj.* பழைய, பண்டைய, தொன்மையான, நெடுநீள் மரபுடைய.

**پربت** (par-bat) *n.m.* குன்று, சிறுமலை, மலை.

**پرتو** (paratu) *n.m.* படரொளி, ஒளிக்கதிர்.

**پرچ** (pirch) *n.f.* ஏந்துதட்டு.

**پرچا** (parchā) *n.m.* ஒட்டை உடைசல், தாள்துண்டு.

**پرده** (par-dah) *n.m.* திரை, திரைச்சீலை.

**پرزه** (pur-zah) *n.m.* துண்டு, கூறு, பகுதி.

**پرس** (purs) *n.f.* விசாரணை, கேள்வி, ஆராய்தல்.

**پرسال** (par-sāl) *adv.* கடந்த ஆண்டில், சென்ற ஆண்டில்.

**پرشاد** (pra-shād) *n.m.* நட்பாதரவு, நல்லெண்ணம், தயவு, கருணை, அன்பா தரவு, பிரசாதம்.

**پرکاله** (parkālah) *n.m.* தீப்பொறி, மின் விசைப்பொறி.

**پرنانا** (par-nānā) *n.m.* முப்பாட்டன்.

**پروار** (pari-vār) *n.m.* குடும்பம், உறவு, உறவினர்.

**پرواز** (par-vāz) *n.f.* பறத்தல், வானிற்பறத்தல்.

**پروان** (par-vān) *adj.* நடத்தை வகையில் நேர்மையான, முறை தவறாத, அனுகூலமான.

**پروانجات** (par-vānjat) *n.m.* உரிமம், ஆணை.

**پروانگی** (par-vāngi) *n.f.* அனுமதி, இசைவாணை.

**پرواه** (par-vāh) *n.m.* அக்கறை, கவனம், நினைப்பு, விழிப்பு, எச்சரிக்கை.

**پری** (pari) *n.m.* எழில் மடமாது.

**پریت** (prit) *n.f.* அன்பு, பற்று, பற்றார்வம், பாசம், நேசம், நட்பு, காதல்.

**پریشان** (pare-shān) *adj.* குழப்பமான, மலைப்புற்ற.

**پڑنا** (paṛnā) *v.* படு, கிடக்கை கொள், படுக்கை நிலைகொள்.

**پڑھنا** (paṛhnā) *v.* படி, பார்த்து அறி, வாசி, மனப்பாடமாக ஓது.

**پزاوه** (pazāvah) *n.f.* செங்கற் சூளை, செங்கற் காள்வாய்.

پسانا (pisānā) *v.* அரை, அரைத்து மாவாக்கு, பொடி செய்.

پسین (pasin) *adj.* தற்காலத்திய, அண்மைக் காலத்துக்குரிய, புது நாகரிகப் பண்பாடு வாய்ந்த, புதுப்பாணியில் அமைந்த.

پیشاب (pishāb) *n.m.* சிறுநீர், மூத்திரம்.

پشتی (pushti) *n.f.* துணை, உதவி, பக்கவலிமை.

پکار (pukār) *n.f.* கூக்குரல், கூப்பாடு, கூச்சல், குறை கூறுதல்.

پکانا (pakā-nā) *v.* உணவு சமை, சமையல் செய், வேகவைத்து சுடு, வறட்டு, பழுக்கவை.

پکنا (paknā) *v.* சமையல் செய்யப் பெறு, பழுக்கச்செய்.

پگاہ (pagāh) *n.f.* காலைநேரம், முற்பகல்.

پل (pal) *n.m.* கணம், விநாடி, கண்ணிமைப்பு.

پل (pul) *n.m.* பாலம்.

پلانا (pilā-nā) *v.* குடிக்கச்செய், பருகச்செய்.

پلک (palak) *n.f.* கண்ணிமையின் மயிர் வரிசை.

پلندا (pulan-dā) *n.m.* சிப்பம், கட்டு.

پلی (pali) *n.f.* அகப்பை.

پلید (palid) *adj.* தூய்மையற்ற, ஒழுக்கக்கேடான.

پناہ (panah) *n.f.* பாதுகாப்பு, ஆதரவு.

پنجرا (pinjrā) *n.m.* கூடு, கூண்டு.

پنچھی (panchhi) *n.m.* பறவை.

پند (pand) *n.m.* கலந்தாய்வு, கலந்து பேசுதல், அறிவுரை, கருத்துரை.

پنگوڑا (pingu-ṛā) *n.m.* தொட்டில்.

پوتا (potā) *n.m.* பேரன்.

پورا (pūrā) *adj.* நிரம்பிய, நிறைந்த, நிரம்பப்பெற்ற, முழுமையான, குறையாத, முழு அளவான.

پورا (pūrā) *v.* முடித்துவிடு, நிறைவேற்று, நிரப்பு, பூர்த்தி செய்.

پولی (poli) *n.m.* தேனடை, தேன் கூடு, பொறுமை, குழி.

پونجی (pūnji) *n.f.* முதலீடு, செல்வவளம், பொருள்வளம், நிலைமுதல், மூலதனம், கைம் முதல்.

پوا (pau-vā) *n.m.* கால், காற் பங்கு, 25 சதம்.

پہاڑا (pahā-ṛā) *n.m.* பெருக்கல் விளக்க அட்டவணை.

پھر (phir) *adv.* மறுபடியும், மீண்டும், திரும்பவும், மேலும்.

پھرنا (phirnā) *v.* நட, நடந்து செல், அலை, திரி, திரும்பு.

پھسانا (pha-sānā) *v.* சிக்கவை, அகப்படுத்து.

پہنچ (pa-hunch) *n.f.* நுழைவு, எட்டுதல், அடைதல், சேருதல்.

پھوپھا (phu-phā) *n.m.* அத்தையின் கணவர்.

پھوپھی (phu-phi) *n.f.* தந்தையின் தமக்கை, அத்தை.

پھوڑنا (phoṛnā) *v.* உடை, தகர், துண்டு துண்டாக்கு.

پھول (phūl) *n.m.* பூ, மலர்.

پھونکنا (phūnknā) *v.* ஊது.

پھیرا (pherā) *n.m.* சுற்றுப் பயணம், சுற்றுலா, சுற்றிப் பார்வையிடுதல், காட்சிப்பயணம், காட்சியுலா.

پیار (piyār) *n.m.* பற்றாசை, பாசம், உள்ளன்பு, நேசம், விருப்பம்.

پیارا (piyāra) *adj.* (ஆண்) மிகவும் நேசிக்கிற, அருமையான, அன்புள்ள.

پیاری (piyāri) *adj.* (பெண்) மிகவும் நேசிக்கிற, அருமையான, அன்புள்ள.

پیاز (piyāz) *n.f.* வெங்காயம்.

پیازی رنگ (piyāzi rang) *n.m.* செந்நிறம், சிறிது நீலங்கலந்த திண் சிவப்பு நிறம்.

پیاس (piyās) *n.f.* மிகு விருப்பம், அடக்கமுடியாத ஆசை, நீர் வேட்கை, தாகம்.

پیام (payām) *n.m.* செய்தி, தகவல்.

پیامبر (payām-bar) *n.m.* நபி, வருவதுரைப்பவர், தீர்க்கதரிசி.

پیٹنا (piṭnā) *v.* அடி, புடை, தட்டு, அறை, குத்து, கருவி கொண்டு தாக்கு.

پیچش (pechish) *n.f.* வயிற்றுக் கடுப்பு, சீதபேதி.

پیچھے (pichhe) *adv.* பின்னால், பின்பக்கமாக, பின்னோக்கி, பின்பு.

پیخانہ (pai-khānā) *n.m.* அருவருப்பான அழுக்கு, மலசலம் கழிப்பிடம், கால் கழுவுமிடம்.

پیداکرنا (paidā karnā) *v.* உற்பத்தி செய், உருவாக்கு, தோற்றுவி, பிறப்பி.

پیدائش (paidā'ish) *n.f.* பிறப்பு, பிறவி, உறிபத்தி, வருமானம்.

پیدائش (paidā'ish) *adj.* பிறந்த.

پیرو (pai-rau) *adj.* சீடர், பின்பற்றுபவர், பின்பற்றி நடப்பவர்.

پیروی (pai-ravi) *n.f.* நாட்டம், குறிக்கோள், ஈடுபாடு.

پیری (piri) *n.f.* முதுமை.

پیشانی (pe-shāni) *n.f.* நெற்றி, ஊழாற்றல், விதி.

پیش کار (pesh-kār) *n.m.* பிரதிநிதி, முகவர்.

پیک (paik) *n.m.* தூதர், தகவலாளர்.

**پیلا** (pilā) *adj.* மஞ்சள் நிற.

**پیمان** (paimān) *n.m.* ஒப்பந்தம், உறுதிமொழி, வாக்குறுதி.

**پیمائش** (paimā'ish) *n.f.* அளவை, மதிப்பீடு, எல்லையளவை.

**پینا** (pinā) *v.* குடி, பருகு, புகை பிடி, புகைவிடு.

**پیندا** (pendā) *n.m.* அடி, அடிப் புறம், அடிப்பரப்பு.

## ت

**تا** (tā) *adv.* முன்னாக, அதன் பின்னாக, இதற்கு முன்னாக, வரையில்.

**تابستان** (tā-bistān) *n.m.* கோடைக் காலம்.

**تابش** (tā-bish) *n.f.* கூரொளி, கூரறிவு, வெப்பம், சூடு.

**تابوت** (tā-būt) *n.m.* பாடை, சவப் பெட்டி, இறந்தவர் உடலை வைத்தடக்கம் செய்ய வழங்கப் படும் பேழை.

**تاثر** (tāsur) *n.m.* அச்சிலிருந்து அழுத்தி எடுக்கும் பிரதி, பதிப்பு.

**تاثیر** (tā-sir) *n.m.* விளைவு, தனியியல்பு, விளைபயன், இயக்க விளைவு, பண்பு, குணம், தொனி, நயம், உள்ளார்ந்த தனிக்கூறு.

**تاج** (tāj) *n.m.* அணிமுடி, மகுடம்.

**تاجر** (tā-jir) *n.m.* வாணிகம், செய்பவர்.

**تاخیر** (tā-khir) *n.f.* காலங் கடத்துதல், தள்ளி வைக்குஞ் செயல்.

**تادیب** (tā-dib) *n.f.* திருத்துதல், திருத்தம், கற்பித்தல், அறிவுறுத்துதல், அறிவூட்டல், போதனை, கட்டுப்பாடு, ஒழுங்குமுறை, கண்டிப்பு.

**تار** (tār) *n.m.* கம்பி, தந்திக்கம்பி, தந்தி, தந்திச்செய்தி, மென்கம்பியிழை.

**تارا** (tārā) *n.m.* நட்சத்திரம் விண்மீன், வான்வெள்ளி, வான் வெளிக்கோளம்.

**تارکی** (tāriki) *n.f.* இருட்டு, இரவு.

**تاریخ** (tārikh) *n.m.* சரித்திரம், வரலாறு, தேதி, ஆண்டு.

**تاڑنا** (tāṛnā) *v.* ஊகி, உய்த்துணர், குத்துமதிப்பாக கருது, நேரடியாக அறியாமலே மதித்துணர்.

**تازہ** (tāzha) *adj.* புதுமை குன்றாத, வாடாத, புது மலர்ச்சி வாய்ந்த, மங்காத, பசுமையான.

**تاکید** (tākid) *n.f.* நிலைநாட்டுதல், வலுப்படுத்தல், உறுதிப்பாடு, வலியுறுத்தும் சான்று, சான்று கொண்டு மெய்ப்பித்தல்.

**تالاب** (tālāb) *n.m.* ஏரி, குளம்.

**تالا** (tālā) *n.m.* பூட்டு.

تالالگانا (tālā lagānā) *v.* பூட்டு, தாழிடு, கதவு, பெட்டி முதலியவற்றை இறுக்கி மூடிப்பூட்டு.

تانا (tānā) *n.m.* பாவுநூல், நீட்டுவாட்டான நெசவிழை.

تانبا (tānba) *n.m.* செம்பு, தாமிரம்.

تاننا (tānnā) *v.* பரப்பு, நீட்டு, நீள்வுறுத்து, விரிவாக்கு, விரியச் செய்.

تانی (tāni) *n.f.* காலதாமதம், காலங்கடத்தல், செயல் நீட்டிப்பு, சுணக்கம், தடங்கல்.

تباہی (tabāhi) *n.f.* அழிவு, கேடு, பொருளழிவு, அழிபாடு.

تبسم (ta-bassum) *n.m.* முறுவல், மென்சிரிப்பு.

تپانا (ta-pānā) *v.* சூடாக்கு, சூடாகு, சினமூட்டு, உணர்ச்சி வேகம் உண்டு பண்ணு.

تپش (ta-pish) *n.m.* வெப்பம், சூடு,

تتلی (titli) *n.f.* வண்ணத்துப் பூச்சி.

تجدید (tajdid) *n.f.* புதுப்பிப்பு, புதுமுயற்சி, புதிய தொடக்கம்.

تجمل (tajam-mul) *n.m.* உயர்வு, மேன்மை.

تجویز (taj-viz) *n.f.* எண்ணம், புதுக்கருத்துரைத்தல், கருத்துரை.

تحرک (tahar-ruk) *n.m.* கலக்கம், குழப்பம், கிளர்ச்சி, எழுச்சி.

تحریر (tah-rir) *n.f.* பதிவேடு, பத்திரம், ஆவணம், பதிவுக்குறிப்பு, பதிவுக்குறிப் புத்தொகுதி, பதிவுமூலம்.

تحقق (tahaq-quq) *n.m.* உறுதிப்படுத்தல், சான்று.

تحقیر (tah-qir) *n.f.* இகழ்ச்சி, இழிவு, ஏளனம், வெறுப்பு, அவமதிப்பு.

تحقیق (tah-qiq) *n.f.* விசாரணை, ஆய்வாராய்வு.

تحکم (tahak-kum) *n.f.* அதிகாரமுடையவர், இயக்குந்திறன் உடையவர்.

تخالص (takhā-lus) *n.m.* விடுதலை, விடுவிப்பு.

تخصیص (takhisis) *n.f.* தனித்தன்மை, சிறப்பியல்பு, தனிப்பட்ட பண்புக்கூறு.

تخلل (takhal-lul) *n.m.* குழப்பம், கலக்கம், தடுமாற்றம், தடைகள்.

تخلیہ (takh-liyah) *n.m.* தனிமை, அந்தரங்கத்தன்மை, இரகசியம்.

تخمہ (takhma) *n.m.* உணவுச் செரிமான மின்மை, உணவு செரியாநிலை, வயிற்று மந்தம்.

تخویف (takh-vif) *n.f.* அச்சுறுத்தல்.

تداول (tadā-vul) *n.m.* மரபு, செவிவழி மரபுரை, வழிவழிச் செய்தி.

تدفین (tad-fin) *n.f.* புதைத்தல், புதைவினை, மண்ணுக்கடியில் புதைத்தல், இழவு வினை, ஈமச்சடங்கு, பிண ஊர்வலம்.

تذکره (taz-kira) *n.m.* நினைவில் வைத்திருத்தல், நினைவு, நினைவூட்டிக்கொள்ளுதல், நினைவுச் சின்னம்.

تذلیل (taz-lil) *n.f.* இகழ், வெட்கக் கேடு, இகழ் உண்டு பண்ணும் செயல்.

تراب (turāb) *n.m.* நிலவுலகம், நிலத் தளம், தரை, மண், நிலம்.

ترانه (tarā-nah) *n.m.* பாட்டு, இன்னிசை, தாளம்.

تراوش (tarā - vish) *n.f.* வடித் திறக்கல்.

ترائی (tarā'i) *n.m.* சதுப்புத் தாழ் நிலம், நீர்வளமுள்ள தாழ்நிலம்.

تربت (tur-bat) *n.f.* கல்லறை, சமாதி, கல்லறைக்கிடங்கு.

ترتری (tur-turi) *n.f.* இசைக் கொம்பு, ஊதுகொம்பு.

ترجمان (tar-jumān) *n.m.* மொழி பெயர்ப்பாளர்.

ترجمه (tar-juma) *n.m.* மொழி பெயர்ப்பு.

ترحم (tarah-hum) *n.m.* அருள், கருணை, தயவு.

تردد (taradud) *n.m.* தவறென்று எண்பித்தல், மறுப்பு, அக்கறை, பற்றார்வம்.

ترغیب (targhib) *n.f.* மயக்கி வசப் படுத்தல்.

ترغیب دینا (targhib denā) *v.* ஏவு, செயல்தூண்டு, இயக்கிவிடு, ஊக்கு.

ترقی (taraq-qi) *n.f.* மேம்பாடு, முன்னேற்றம், பெருக்கம், கூடுதல், உயர்வு, வளர்ச்சி.

ترکاری (takāri) *n.f.* காய்கறி.

ترکون (trikon) *n.f.* முக்கோணம்.

ترکیب (tarkib) *n.f.* ஏற்பாடு, அமைப்புமுறை, முறை.

تری (tari) *n.f.* ஈரம், கசிவு, நீர் நயப்பு.

تڑاکا (taṛākā) *n.m.* வெடிப்பு, கீறல், தகர்வு.

تزکیه (taz-kiyah) *n.m.* தூய்மைப் பாடு.

تزلزل (tazal-zul) *n.m.* நில அதிர்ச்சி, பூகம்பம், நில நடுக்கம், எழுச்சி.

تساوی (tasā-vi) *n.f.* ஒப்புடைமை, ஒத்த தன்மையுடைமை, ஒரே வகைமை.

تسلط (tasal-lut) *n.m.* ஆணை, அதிகாரம், ஆதிக்கம், கட்டுப் பாடு, கட்டளை.

تسلی (tasalli) *n.f.* மனநிறைவு, திருப்தி.

تسلی دینا (tasalli denā) *v.* உறுதிப் படுத்து, உறுதிகூறு, நம்பிக்கை யளி, ஆறுதல் கூறு.

تشریف (tash-rif) *n.f.* நற்பண்பு, நல்ல நடத்தை.

تشویش (tashvish) *n.f.* பயம், ஏக் கம், கவலை, பற்று, குழப்பம்.

تصحیح (tas-hih) *n.f.* திருத்தம், சீர்மை.

تصویر (tasvir) *n.f.* படம், ஓவியம், கலைப்படம், உருவப்படம்.

تعریف (ta'rif) *n.f.* கை கொட்டி ஆர்ப்பரித்தல், உரக்கத் தெரி விக்கப்பட்ட ஒப்புதல், ஆர வாரப் பாராட்டு, பாராட்டு.

تعزیر (ta'zir) *n.f.* தண்டனை, தண் டத்தொகை, தண்டவரி.

تعلیم (ta'lim) *n.m.* கற்பித்தல், போதனை, தனிப்போதனை.

تعمیر (ta'mir) *n.f.* கட்டுதல், அமைத்தல்.

تغافل (taghā-ful) *n.m.* கவனக் குறைவு, கருத்தின்மை, புறக் கணிப்பு.

تقابل (taqābul) *n.m.* ஒப்புமை காணல், ஒப்பீடு செய்தல், ஒப் பிட்டுணர்ந்த மதிப்பு.

تقابل کرنا (taqābul karnā) *v.* ஒத் துப்பார், ஒப்பிடு.

تقریر (taqrir) *n.f.* சொற்பொழிவு, விரிவுரை, போதனை.

تقصیر (taqsir) *n.f.* தவறு, குற்றம், குற்றச்செயல்.

تکثیف (taksif) *n.f.* சுருக்குதல், சுருக்கம்.

تکرر (takar-rur) *n.m.* செய்ததே செய்தல், சொன்னதே சொல் லுதல், மீண்டும் செய்யப் பெறல்.

تکلیف (taklif) *n.f.* கடுந்துன்பம், வேதனை, வருத்தம், இன்னல், மரண வேதனை.

تکمیل (takmil) *n.f.* முடித்தல், நிறைவேற்றல், முழுநிறைவு, சிறப்புத்திறமை.

تلا (tulā) *n.m.* தராசு, சீரை, துலாத் தட்டு.

تلاش کرنا (talash karnā) *v.* கண்டு பிடி, தேடு, நாடிச்செல், புகுந் தாராய்.

تلافی (talāfi) *n.f.* ஈடு, இழப்பீடு.

تلاؤ (talāu) *n.m.* குளம், நீர்த் தேக்கம், நீர்நிலை.

تلطف (talat-tuf) *n.m.* இரக்கம், அருட் குணம், அன்புச் செயல்.

تلف (talaf) *n.m.* அழித்தல், அழிவு, பாழ், கேடு, பொருளழிவு.

تلفظ (talaf-fuz) *n.m.* உச்சரிப்பு, ஒலிப்பு, சொல்திறம்.

**تلفظاداکرنا** (talaffuz adā karnā) *v.* ஒலி, உச்சரி.

**تلوا** (talvā) *n.m.* குதிகால், குதி, காலடி, பாதம்.

**تلے** (tale) *adv.* கீழே, அடியில், கீழ் நிலையில், கீழ்நோக்கி.

**تم** (tum) *pron.* நீங்கள், நீர், நீ, உம்மை, உன்னை, உங்களை.

**تماچہ** (tamā-cha) *n.m.* அறை, உள்ளங்கை அடி.

**تمغہ** (tamgha) *n.m* பதக்கம்.

**تن** (tan) *n.m.* உடல், உடற் பகுதி.

**تنبول** (tan-bol) *n.m.* வெற்றிலை.

**توا** (tavā) *n.m.* தோசைக்கல்.

**تولیا** (tauliyā) *n.m.* துவாலை, துவட்டுகுட்டை.

**تھام** (thām) *n.m.* தூண், தூபி, ஆதாரக்கால்.

**تھانہ** (thānah) *n.m.* காவல்நிலையம்.

**تھانہدار** (thānah dār) *n.m.* காவல் துறை மேலர்.

**تہمت** (tuhmat) *n.f.* அவதூறு, பழிதூற்றுரை, பொய்க்குற்றச் சாட்டு.

**تہوار** (tahvār) *n.m.* பண்டிகை, திரு விழா, விழாக் கொண்டாட்டம், விருந்து.

**تھوپنا** (thop-nā) *v.* புதை, மண் ணிலிட்டு மூடு, உள்ளிட்டு மூடு.

**تھیلی** (thaili) *n.f.* பை, கைப்பை.

**تیار** (tayār) *adj.* உடனடியாக பயன்படுத்தத்தக்க, முன்னேற் பாடுகள் முடிந்த, ஆயத்த மான,

**تیل** (tel) *n.m.* எண்ணெய்.

## ٹ

**ٹاپو** (ṭāpu) *n.m.* தீவு, நீர் சூழ் நிலம், திட்டு.

**ٹانگ** (ṭāng) *n.f.* கால், விலங்கின் கால்.

**ٹبر** (ṭab-bar) *n.m.* குடும்பம்.

**ٹپ** (ṭap) *n.m.* குதிப்பு, துள்ளல், எழும்புதல், தாவல், தாண்டு தல், துளி, நீர் - கண்ணீர்- வியர்வை - குருதி - மழை - பனி போன்ற நீர்மங்களின் ஒரு சொட்டு.

**ٹھٹ** (ṭhaṭ) *n.m.* மக்கள்திரள், கூட் டம், கும்பல், பொது மக்கள் தொகுதி.

**ٹھڈی** (ṭhuḍḍi) *n.m.* முகவாய்க் கட்டை.

**ٹھرانا** (ṭharānā) *v.* நிறுத்து, தடுத்து நிறுத்து, தடு, நிலைகொள்.

**ٹھلنا** (ṭehalnā) *v.* கால் இழுத்த வாக்கில் நடந்து செல், உலாவு, சுற்றித்திரி.

**ٹھمرا** (ṭhumrā) *adj.* சிறிய, உருவில் பெரிதல்லாத, சிற்றளவான அளவில் குறைந்த.

ٹھنڈ (ṭhanḍ) *n.f.* மிகுகுளிர்ச்சி, கடுங்குளிர், கடுங்குளிர் நிலை, தணுப்பு.

ٹھنکنا (ṭhinaknā) *v.* மணி ஒலி செய், மணிஅடி.

ٹھور (ṭhaur) *n.m.* உறையுள், உறைவிடம், குடியிருத்தல், குடியிருப்பாகக் கொள்ளல்.

ٹھوکر (ṭhokar) *n.f.* உதை, அடி, தட்டு, தடுக்கிவீழ்வு.

ٹھیٹھ (ṭheṭh) *adj.* மெய்யான, போலியல்லாத, கலப்படமில்லாத.

ٹھیک (ṭhik) *adj.* உண்மையான, சரியான, பிழைபடாத, திருத்தமான.

ٹھیلا (ṭhelā) *n.m.* தள்ளு, தள்ளுகை.

ٹھیلنا (ṭhelnā) *v.* தள்ளு, தள்ளிக்கொண்டு போ.

ٹیڑہا (ṭeṛhā) *n.m.* பக்கவாட்டுப் பார்வை உள்ளவர்.

ٹیس (ṭis) *n.f.* நோவு, வேதனை.

ٹیک (ṭek) *n.f.* உறுதிமொழி, வாக்குறுதி, சூளுரை.

## ث

ثاقب (sā-qib) *adj.* உயர்வான, சிறப்பு வாய்ந்த, வளமையான, பிரகாசமான.

ثالث (sā-lis) *n.m.* நடுவர்.

ثانی (sāni) *n.m.* ஈடானவர், நிகரானவர், சமமானது, சமவயதினர், சமநிலையாளர் *adj.* இரண்டாவதான, ஒன்றுவிட்டடுத்த, ஒன்றுவிட்ட, மற்றொரு.

ثبوت (sabūt) *n.m.* சான்று, சான்றுறுதி, பிணையுறுதி, அத்தாட்சி.

ثروت (sarvat) *n.f.* செல்வம், செல்வவளம், பொருள்வளம், இன்னலம், நிறைவு.

ثعلب (sa'lab) *n.f.* நரி.

ثقالت (saqā-lat) *n.f.* பளு, எடை, பாரம்.

ثمن (saman) *n.m.* விலை, மதிப்பு, விலைமதிப்பு.

## ج

جاٹ (jāṭ) *n.m.* நாட்டுப்புறத்தார், குடியானவர்.

جاڑا (jāṛa) *n.m.* பனிக்காலம், குளிர்பருவம்.

جاسوس (jā-sūs) *n.m.* ஒற்றர், வேவுபார்ப்போர்.

جاگ (jāg) *n.m.* விழிப்புநிலை, இராவிழிப்பு.

جالا (jālā) *n.m.* ஒட்டடை, சிலந்தி வலை.

جان (jān) *n.f.* உயிர், உயிரியக்கம், உயிர்ப்பு, உயிர்த்துடிப்பு, உயிராற்றல்.

**جان** (jān) *n.f.* அறிவு, அறிவுப் பரப்பு, புற அறிவுத்தொகுதி.

**جانا** (jānā) *v.* போ, செல், இடம் மாறு.

**جانار** (jānār) *adj.* அழகான, கவர்ச்சி வாய்ந்த, வனப்புள்ள.

**جاننا** (jānnā) *v.* அறி, தெரிந்திரு, நன்கு தெரிந்திரு, தகவல் உடையவராயிரு, விவரந்தெரிந்திரு.

**جانور** (jān-var) *n.m.* விலங்கு, பிராணி, இயங்கும் உயிரினம்.

**جاهل** (jāhil) *adj.* எழுத்து வாசிப்பற்ற, எழுதப் படிக்கத் தெரியாத, கல்லாத, அறியாத, தெரியாத, நாகரிகம் அற்ற, காட்டுமிராண்டித்தனமான.

**جائز** (jā'iz) *adj.* சரியான, பிழைபடாத, நேரிய, தகுதியான, இயல் எல்லை வரம்புக்குட்பட்ட, தக்க, உகந்த.

**جتانا** (jatānā) *v.* அறிவி, தெரிவி, கற்பி, காண்பி, காட்டு, எச்சரிக்கை செய், முன்னறிவிப்புச் செய்.

**جٹنا** (juṭnā) *v.* ஒன்றாக்கு, ஒன்றாகச் சேர்த்திணை, ஒற்றுமைப் படுத்து.

**جچّا** (jach-chā) *n.f.* மகப்பேறுற்ற நிலையில் உள்ள பெண்.

**جچا** (jachā) *adj.* நிரூபிக்கப்பட்ட, சோதித்த, முயற்சி செய்த.

**جد** (jid) *n.f.* முயற்சி, பெருமுயற்சி, ஊக்கம், தொடர்ந்த உழைப்பு.

**جدا** (judā) *adj.* துண்டிக்கப்பட்ட, பிரிக்கப்பட்ட, தனிப்பட்ட, தனிவேறான, தனித்தனியான.

**جدال** (jidāl) *n.m.* விவாதம், வாதாடல், கருத்து வேறுபாடு, வாய்ச்சண்டை.

**جديد** (jadid) *adj.* தற்காலத்திய, அண்மைகாலத்துக்குரிய, புதிய, முன்னில்லாத, புதுமை குன்றாத, மங்காத, புதுப் பகட்டான.

**جذام** (jazām) *n.m.* தொழு நோய், குட்டம்.

**جذبه** (jaz-bah) *n.m.* உணர்ச்சி, விருப்பம், ஆசை, ஆர்வ வேட்கை.

**جرس** (jaras) *n.m.* மணி.

**جرگه** (jargah) *n.m.* மோதிரம், வளையம், நடுவர் சங்கம், மத்தியஸ்தர் சபை, மத்தியஸ்தர்.

**جرم** (jurm) *n.m.* குற்றம், பழி, பாவம்.

**جرى** (jari) *adj.* வீரதீரமான, வல்லமை வாய்ந்த, வல்லமையான.

**جزام** (juzām) *n.f.* தொழுநோய், குட்டம்.

**جس** (jas) *n.m.* மதிப்பு, பொது மதிப்பு, நற்பெயர், புகழ், பெருஞ்சிறப்பு.

**جسام** (jisām) *adj.* பருத்த, கொழுத்த.

**جست** (jast) *n.f.* குதிப்பு, பாய்ச்சல், துள்ளுதல்.

**جست** (jast) *n.m.* துத்தநாகம்.

**جسم** (jisam) *n.m.* உடல்.

**جشن** (jashn) *n.m.* விழா, விழா நாள், விழாக்காலம்.

**جشنی** (jashni) *adj.* உயர் இன்ப வாழ்வுடைய, இன்ப வாழ்வுக் குகந்த, ஒய்யாரமான.

**جفا** (jafā) *n.f.* அநீதி, அட்டூழியம், கொடுமை, அடக்கு முறை.

**جفت** (juft) *n.m.* இணை, சோடி, நிகரானது.

**جگت** (jagat) *n.m.* இயலுலகு, பிர பஞ்சம், உலக முழுமை.

**جگت** (jugat) *n.f.* சூழ்ச்சி, தந் திரம், வஞ்சகம்.

**جگہ** (jagah) *n.f.* இடம், அறை.

**جل** (jal) *n.m.* நீர்.

**جلاب** (jul-lāb) *n.m.* பேதி மருந்து, குடல் இளக்க மருந்து.

**جلاد** (jallād) *n.m.* தூக்கிலிடுபவர். *adj.* கொடுமையான, இரக்க மற்ற, துன்புறுத்துகிற.

**جلانا** (jalānā) *v.* எரி, தீப்பற்று, கொளுத்து.

**جلندہر** (jalan-dhar) *n.m.* நீர்க் கோவை.

**جلف** (jalaf) *n.m.* கருமி, கஞ்சன், பிசினாரி.

**جلی** (jali) *adj.* தெளிவான, ஐய மற்ற, தெளிவாகத் தெரிகிற, தெளிவாக உணரப்படத்தக்க.

**جماعت** (jamā'at) *n.f.* சமுதாயம், கூட்டிருக்கை, கூட்டம், சங்கம்.

**جمیل** (jamil) *adj.* இயல்பான அழகுடைய, இயற்கை யான அழகுடைய.

**جن** (jin) *n.m.* பேயுருவம், தீய ஆவி, நரகஆவி, பாவவுரு.

**جناب** (janāb) *n.f.* ஐயா, (நாகரிக விளிப்பு).

**جنتری** (jantri) *n.f.* பஞ்சாங்கம், வருஷபஞ்சாங்கம், திரியாஸ கம்.

**جواب** (ja-vāb) *n.m.* மறுமொழி, பதில், தீர்வு, பிரச்சினைக்கு விடை.

**جواز** (ja-vāz) *n.m.* உடமை, சொத்து, உரிமைப் பொருள்.

**جوان** (ja-vān) *adj.* இளமையான, முதிராத, வாலிபமான.

**جوتا** (jūtā) *n.m.* புதைமிதி.

**جور** (jaur) *n.m.* சட்டம் மீறிய ஆட்சி, கொடுங்கோன்மைச் செயல், கொடுங்கோன்மை, அடக்குமுறை, ஒடுக்கம்.

**جورو** (jorū) *n.f.* மனைவி, பெண்டாட்டி.

**جوشانده** (joshān-dah) *n.m.* கஷாயம், வடிநீர், காய்ச்சி இறக்கப் பட்டது.

**جھگڑا** (jhagṛ ā) *n.m.* சச்சரவு, பூசல்; சண்டை, மனவேறுபாடு, அமளி.

**جھل** (jhal) *n.f.* பொறாமை, கோபம், கடுஞ்சினம், கடு வெறுப்பு, சீற்றம், எரிச்சல்.

**جھنڈا** (jhanḍā) *n.m.* கொடி, விளம்பரக்கொடி.

**جھوٹا** (jūṭa) *adj.* பொய்யான, தவறான, ஆதாரமற்ற, நாணய மற்ற, போலியான, உண்மை யில்லாத, மோசடியான, பாசாங் கான.

**جھیز** (jahez) *n.m.* சீதனம், வரதட் சணை, சீர்வரிசை.

**جھیل** (jhil) *n.f.* ஏரி.

**جھینگر** (jhin - gar) *n.m.* சிள் வண்டு, வெட்டுக் கிளியினப் பூச்சி.

**جیب** (jeb) *n.f.* சட்டைப்பை, ஆடைப்பை.

**جیبھ** (jibh) *n.f.* நா, நாக்கு.

**جیل** (jel) *n.f.* சிறை, காவற் கூடம்.

**جیوتش** (jyotish) *n.m.* சோதிடம், வானியல்.

## چ

**چابنا** (chābnā) *v.* மெல்லு, அதக்கு, பல்லினால் அரை.

**چابی** (chābi) *n.f.* திறவுகோல், சாவி.

**چادر** (chādar) *n.f.* முகத்திரை, முக காடு, விரிப்பு, மேசை விரிப்பு.

**چارا** (chārā) *n.m.* தீவனம், கால் நடைத்தீனி, விலங்குணவு.

**چاق** (chāq) *adj.* விழிப்பான, உன் னிப்பான, செயற்படுத்துகிற, செயல்திறமுடைய, சுறுசுறுப் பான.

**چاقو** (chāqū) *n.m.* கத்தி, பேனாக் கத்தி, குத்து வெட்டுக்குரிய பெருங்கத்தி.

**چاک** (chāk) *n.m.* வெட்டு, கத் தரிப்பு, கத்திக்குத்து.

**چاک کرنا** (chāk karnā) *v.* கிழி, இரண்டாகப்பிள, துண்டு துண்டாகப்பிரி.

**چاکر** (chākar) *n.m* வேலையாள், ஊழியர், ஏவலர், பணியாளர்.

**چاکری** (chākri) *n.f.* கடமை, பணி, வேலை, ஊழியம், பணி நிலை, உத்தியோகம்.

**چالاک** (chā-lāk) *adj.* திறமை யுள்ள, சூழ்ச்சி நயம் வாய்ந்த.

**چاندنی** (chāndni) *n.f.* நிலவொளி.

**چاہنا** (chāhnā) *v.* தேவையுறு, வேண்டிநாடு, தேவைப்படு.

**چائے** (chāe) *n.f.* தேநீர்.

**چبوترا** (cha-būtrā) *n.m.* மேடை, திண்ணை, முகப்பு.

**چپ** (chap) *adj.* இடப்பக்கத்தி லுள்ள.

**چپ** (chup) *n.f.* அரவமின்மை, சந் தடியின்மை.

**چپکا** (chupkā) *adj.* ஓசையற்ற, சந் தடியில்லாத, அரவமற்ற.

**چٹپٹی** (chaṭ-paṭi) *n.f.* அவசரம், விரைவு, பரப்பு, பதற்றம்.

**چٹخنا** (cha-ṭakhnā) *v.* பிள, கீறு, தகர், வகு, பகு, கூறு படுத்து.

**چٹکی** (chiṭki) *n.f.* கதிரவன், ஒளி, ஞாயிற்றொளி.

**چٹھی** (chiṭhi) *n.f.* கடிதம், காசோலை.

**چراگاہ** (charāgāh) *n.f.* பசும்புல் நிலம், மேய்ச்சல் பசும்புல் தரை.

**چرانا** (charānā) *v.* கால்நடைகளை மேயவிடு, கால் நடைகளை மேய்ச்சலுக்குக் கொண்டுபோ.

**چرانا** (chu-rānā) *v.* திருடு, மறை வாக எடு, வஞ்சகமாகக்கவர், எதிர்பாராது சென்றெடுத்துக் கொள்.

**چرب** (charb) *adj.* வழவழப்பான, வழுக்குகிற, எண்ணெய்ப்பசை யுடைய, மிகு கொழுப்பார்ந்த, கொழுப்புப் போன்ற.

**چرخ** (charkh) *n.m.* இன்பஉலகம், வானுலகு, ஊழாற்றல், பேரின் பம், திரிகை.

**چرسا** (charsā) *n.m.* தோல், விலங் கின் தோல்.

**چڑھاوا** (chaṛ-hāvā) *n.m.* படை யல், காணிக்கை, நேர்த்திக் கடன்.

**چست** (chust) *adj.* விரைவான, வேகமான, உடனடியான, விரைந்து செயல்படுகிற, செயல்திறத்தில் துடிப்பு மிக்க, கூரறிவுத்திறம் வாய்ந்த.

**چک** (chak) *n.m.* சொத்து, உடமை.

**چکّا** (chakkā) *n.m.* வட்டம், வட்ட மான பொருள், வளையம், வண்டிச்சக்கரம்.

**چکما** (chakmā) *n.m.* பொறி, சூழ்ச்சி, மோசடி ஏற்பாடு, வஞ் சகச் செயல்.

**چکھنا** (chakhnā) *v.* நுகர்ந்து மகிழ், சுவை நலமுணர்ந்து பார், சுவைபார், சுவைகாண், சுவை மாதிரிகொள்.

**چلبلا** (chulbulā) *adj.* விளையாட் டுத்தனமான, படபடத்துக் கொண்டுள்ள.

**چلان** (chalān) *n.m.* விலைப்பட்டி, விலை விவரங்களுடன் கூடிய சரக்குப்பட்டியல், பண அனுப் பீடு, அனுப்பிய தொகை.

**چلانا** (chalānā) *v.* செலுத்து, இயக்கு, நடத்து, இட்டுச்செல், ஊர்தியினை செலுத்து, காரியம் நிறை வேற்றிக்கொள்.

**چلّانا** (chillānā) *v.* அழு, அதிர் குரல் எழுப்பு, திடீர்க் கூச்சலிடு, அச்சக்கூக்குரலிடு, வேதனைக் குரல் எழுப்பு.

**چلن** (chalan) *n.m.* நடக்கை, ஒழுக்கம், நல்லொழுக்கம், சிறப்பியல்பு, பண்பு, வழக்கம், பாங்கு, பாணி, முறை, நடைப் பாங்கு, வடிவமைதி முறை, நடப்பு வழக்கு.

**چلنا** (chalnā) *v.* நட, நடந்து செல், கால்நடையாகச்செல், முன் னேறு, வழுக்கிச்செல், நழுவிச் செல்.

**چمتکار** (cha-matkār) *n.f.* அதி சயம், வியப்புநிலை, வியப் புணர்ச்சி.

**چمٹنا** (chi-maṭnā) *v.* பிடி, கிள்ளு.

**چمچه** (cham-cha) *n.m.* கரண்டி.

**چمڑا** (chamṛā) *n.m.* தோல், விலங் கின் தோல்.

**چمک** (cha-mak) *n.f.* திடீரொளி, பளபளப்பு, மினு மினுப்பு.

**چمکانا** (cham-kānā) *v.* தேய்த்துப் பளபளப்பாக்கு, வழவழப் பாக்கு, மெருகேற்று, துலக்கு, மினுக்கு.

**چمنی** (chimni) *n.f.* புகைப் போக்கி, மண்ணெண்ணெயில் எரியும் சிறிய விளக்கு.

**چنا** (chanā) *n.m.* கொண்டைக் கடலை, பயற்றினத்தின் வகை.

**چنان** (chu-nān) *adj.* அதே வகை யான, அதே அளவான, அவ் வகைப்பட்ட, அப்படிப்பட்ட, அத்தகைய, அவ்வியல்புடைய, அந்த அளவான, இம்மாதிரி யான, இது போன்ற.

**چند** (chand) *adj.* குறைவான, சில, பலரல்லாத, ஏதோ சில, ஏதோ ஒரு, குறிப்பிட்ட சில.

**چندرما** (chan-darmā) *n.m.* நிலா.

**چندن** (chandan) *n.m.* சந்தன மரம்.

**چنگا** (changā) *adj.* முழுநலம் வாய்ந்த, முழுமையான, உடை யாத, உட்கீறலற்ற.

**چننا** (chunnā) *v* பலவற்றினின்று தேர்ந்தெடு, பொறுக்கியெடு, தெரிந்தெடு, தேர்ந்தெடு.

**چوٹ** (choṭ) *n.f.* ஊறு, காயம், அடி.

**چور** (chor) *n.m* கொள்ளைக் காரன், வலிந்து பறிப்பவன், திருடன், திருடி.

**چوری** (chori) *n.f.* திருட்டு, களவு, திருட்டு நிகழ்ச்சி.

**چوڑا** (chauṛā) *adj.* அகலமான, பரந்தகன்ற, விசாலமான, குறு கலாயிராத, அகல் விரிவான.

**چوڑی** (chūṛi) *n.f.* வளையல், காப்பு.

**چوزه** (chūzah) *n.m.* கோழிக்

குஞ்சு, பறவைக்குஞ்சு, இளஞ் சிறார், குழந்தை.

چوسنا (chūsnā) *v* உறிஞ்சு, ஈர்த் துக்கொள், உறிஞ்சிக் குடி, உட்கொள்.

چوک (chauk) *n.m.* சதுக்கம், அங்காடி, சந்தை, சந்தைக் கூடம், சந்தைக்களம்.

چوک (chūk) *n.f.* விடுபாடு, விட்டு விடுகை, விடுபடல், சேர்க்காது விடுதல்.

چوکنا (chūknā) *v* பெருந் தவறு செய், அரைகுறையாச் செய், தப்பவிடு, தவற விடு, தவிர்.

چوکھٹ (chau-khaṭ) *n.f.* வாயிற் படி, நுழைவாயிற் படிக்கல், நுழைவாயில் முகப்பு.

چوکی (chauki) *n.f.* முக்காலி, நாற்காலி, சாய்விருக்கை, மரத் தினால் (அ) கல்லினால் ஆன நீண்ட இருக்கை.

چوگا (chogā) *n.m* பறவைகளின் தீனி.

چوگان (chau-gān) *n.m* போலோ விளையாட்டு மைதானம், செண் டாட்டம், குதிரைமீது அமர்ந்து கொண்டு ஆடும் பந்தாட்டம்.

چون (chūn) *adj.* அதேபோன்ற, அதேவகையான, ஒத்த.

چوھا (chūhā) *n.m* சுண்டெலி, எலி.

چوھیا (chū-hiyā) *n.f.* சிறிய எலி.

چھاتی (chāti) *n.f.* மார்பு, உள்ளம், உணர்ச்சி, உள்ளுணர்ச்சி.

چھاچھ (chhāch) *n.f.* மோர்.

چھان (chhān) *n.m.* கோமாளி, காட்டான், உமி, வித்துக்களின் புறத்தோடு, புறத்தோல், வீடு, கூரை, கட்டிடம் முதலியவற் றின் மோடு.

چھانا (chhā-nā) *v.* கூரையிடு, கூரையிட்டு மூடு, நிழல் கொடு.

چھان‌بین (chhān-bin) *n.m.* ஆராய்வு.

چھاؤں (chhāoṅ) *n.f.* நிழல், நிழல் மறைப்பு.

چھاؤنی (chhāoni) *n.f.* பாளையம்.

چھایا (chhāyā) *n.f.* இருட்டு, அந்தி மயங்கிருள்.

چھتری (chhatri) *n.f.* குடை

چھٹپن (chhuṭ-pan) *n.m.* குழவிப் பருவம், குழந்தைப்பருவம், பாலப்பருவ நாட்கள்.

چھٹکانا (chhiṭ-kānā) *v.* தெளி, தூவு, சிதற விடு, சிதறு, சிதற லாக வீசு, அங்குமிங்கும் வீசு.

چھٹنا (chhaṭnā) *v.* பிரித்துவை, பிரித்து வேறாக்கு, வகைப் படுத்து.

چھٹنا (chhuṭnā) *v.* தப்பிச் செல், பிழைத்தோடு, இடரிலிருந்து தப்பிப்பிழை.

چھٹی (chhuṭṭi) *n.f.* பருவ விடு முறைக்காலம், நீள் விடுமுறை.

چھدانا (chhi-dānā) *v.* துளையிடு, துளைத்துச் செல், பொத்தல் இடு.

چہرہ (chehra) *n.m.* முகம், முக பாவம், உடன்பாட்டுக் குறிப்பு, முகத்தோற்றம்.

چھری (chhuri) *n.f.* கத்தி.

چھڑا (chhaṛā) *adj.* தனிமை வாய்ந்த, தனித்தொதுங்கி வாழ் கிற, தனித்த ஒத்திணைவற்ற.

چھڑی (chhaṛi) *n.f.* ஊன்றுகோல், கைத்தடி, பிரம்பு.

چھکڑا (chhakṛā) *n.f.* ஊர்தி, வாகனம், வண்டி.

چھلّا (chhallā) *n.m.* வளையல், மெட்டி.

چھلوری (chhi-lori) *n.f.* கொப் புளம், நெருப்புப் புண்.

چھنُ (chhinu) *n.m.* நொடி, கால நுட்பம், உடனடி வேளை, மிகக்குறுகிய, நேரநிலை.

چھو (chho) *n.m.* இரக்கம்.

چھوکرا (chhokrā) *n.m.* சிறுவன், பையன், இளைஞன்.

چھوکری (chhokri) *n.f.* சிறுமி, பெண், இளம் பெண்.

چھونا (chhū-nā) *v.* தொடு, விரலால் தீண்டு, தொட்டிரு, தொட்டுக் கொண்டிரு.

چھیڑ (chheṛ) *n.f.* தொடுகை, தொடு செயல், தொடுநிலை, உறுத்தல், நமைச்சல்.

چھیلنا (chhil-nā) *v.* பழத்தில் தோலுரி, கிழங்கு வகைகளின் தோலை அகற்று, தோலை உரித்தெடு.

چھینک (chhink) *n.f.* தும்மல்.

چھینکنا (chhik-nā) *v.* தும்மு.

چھیننا (chhin-nā) *v.* கைக்கொள், பற்றியெடு, பறித்தெடு, திடீரெ னக்கைப்பற்று, வலிந்து பற்று, கேட்காது எடுத்துக் கொள், பறி, பிடுங்கு.

چیپ (chep) *n.m.* மரப்பிசின், கோந்து.

چیچک (chi-chak) *n.f.* பெரிய அம்மை நோய்.

چیستان (chistān) *n.m.* விடுகதை, புதிர்.

چیلا (chailā) *n.m.* சீடர், மாணக் கர், வழிநிற்பவர், கொள்கை பின்பற்றுபவர்.

چین (chin) *n.f.* மடிப்பு, சுருக்கம்.

چینٹ (chini) *n.f.* கன்றிப்போன காயம், இரத்தம் கட்டிய நோவிடம்.

چینی (chini) *n.f.* சர்க்கரை.

چیونٹی (chi-yonṭi) *n.f.* சிறிய எறும்பு.

## ح

**حاتم** (hātim) *n.m.* நீதிபதி, நடு நிலைத் தீர்ப்பாளர், நலஞ்சீர் தூக்கி மதிப்பவர்.

**حاجب** (hājib) *n.m.* திரை, திரைச் சீலை, துணியாலான மறைப்பு.

**حاجت** (hājat) *n.f.* இன்றியமை யாமை, தவிர்க்க முடியாமை, கட்டாய நிலை, தேவை, தேவைப்படுநிலை.

**حاجی** (hāji) *n.m.* நபிகள் நாயகத் தின் பிறப்பிடம் செல்லும் யாத்திரிகர்.

**حادث** (hādis) *adj.* அணித்தான காலத்திற்குரிய, சிறிது காலத் திற்கு முன்நேர்ந்த, அண்மை யில்தான் தொடங்கப்பட்ட, புத்தம் புதிதான.

**حادثہ** (hādisah) *n.m.* பேரிடர், இடுக்கண், எதிர்பாராத நிகழ்ச்சி, கருதிச் செயல்படாத செயல், நிகழ்ச்சி, சம்பவம், விபத்து.

**حاذق** (hāziq) *adj.* முழுநிறைவான, குறைபாடற்ற, அறிவுத்திறம் வாய்ந்த, அறிவுள்ள, விவேக முள்ள.

**حارج** (hārij) *n.m.* தடங்கல், தடை, இடைஞ்சல், இடையூறு.

**حاسد** (hāsid) *n.m.* எதிராள், போட்டியாளர்.

**حاسد** (hāsid) *adj.* பொறாமை நிறைந்த, பொறாமையுடைய.

**حاضر** (hāzir) *adj.* உடனடியாகப் பயன்படுத்தத்தக்க, ஆயத்த மான, செயல் தகுதி நிலையில் உள்ள.

**حافظ** (hāfiz) *n.m.* காப்பாளர், ஆதரவாளர்.

**حاکم** (hākim) *n.m.* பணி முதல் வர், ஆளுநர்.

**حاکمانہ** (hāki-mānah) *adv.* சட் டப்படி.

**حال** (hāl) *n.m.* மதிப்பு, தகுதி, நிலைமை, நன்நிலை, படி நிலை, நிகழ் வேளை, சூழ் நிலை.

**حاملہ** (hāmi-lah) *adj.* கருவுற்ற, சூலுண்ட.

**حامی** (hāmi) *n.m.* பாதுகாப் பாளர், ஆதரவாளர்.

**حبل** (habl) *n.m.* நூல்கயிறு, கயிறு.

**حبیب** (habib) *n.m.* விருப்பத் துக்கு உகந்தவர், தனிப்பாசத் துக்குரியவர், நண்பர்.

**حج** (haj) *n.m.* நபி நாயகத்தின் பிறப்பிடயாத்திரை, புனித இட யாத்திரை.

**حجاب** (hijāb) *n.m.* நாணம், தன் னடக்கம், பணிவுநயம், முக் காடு, முகத்திரை, வெட்கம், நாணக்கேடு, மானக்கேடு.

**حجام** (haj-jām) *n.m.* அம்பட்டன், முடி ஒப்பனையாளர்.

**حجت** (huj-jat) *n.f.* வாதடல், வாதம், ஆய்வுரை, விவாதம்.

**حدت** (hid-dat) *n.f.* சீற்றம்.

**حدث** (hadas) *n.m.* புதுமை, புதுத் திறம்.

**حديث** (hadis) *n.f.* வரலாறு, நபி யின் சொற்கள், சென்றகால அறிவு, மரபு.

**حذر** (hazar) *n.m.* செயலறிவு, உல கியல்மதி, முன்மதி, எச்சரிக்கை, அச்சம், பயம், கலக்கம், நடுக் கம்.

**حرارت** (harā-rat) *n.f.* லேசான காய்ச்சல், லேசான சுரம், பொறுக்கமுடியா வெப்பம், புழுக்கம்.

**حراج** (hirāj) *n.m.* ஏலம்.

**حراست** (hirā-sat) *n.f.* பாதுகாப்புப் பொறுப்பு, அக்கறை, விழிப்பு நிலை, உன்னிப்பு, கவனிப்பு.

**حرام** (harām) *adj.* தடுக்கப்பட்ட, தடை விதிக்கப்பட்ட, சட்ட விரோதமான.

**حرب** (harb) *n.f.* போர், யுத்தம், சண்டை.

**حرص** (hirs) *n.f.* பேராசை, உயரவா, பேராவல்.

**حرف** (harf) *n.m.* இடைச்சொல், சொல், எழுத்து, குற்றச்சாட்டு.

**حرمان** (hirmān) *n.m.* கிளர்ச்சியற்ற நிலை, உளச்சோர்வு, ஏமாற்றம், நம்பிக்கை குலைவு.

**حريف** (harif) *n.m.* எதிராள், போட்டியாளர், எதிரி.

**حريم** (harim) *n.m.* காபாவை சுற்றி யுள்ள புனித இடம்.

**حزم** (hazm) *n.m.* ஐயநீக்கம், முன்னோக்கு, முன்னறிதிறம், உறுதியாக இருத்தல்.

**حزن** (huzn) *n.m.* மனத்துயரம், கவலை, வருத்தம், துக்கம்.

**حساب** (hisāb) *n.m.* கணக்கு, எண்ணுதல், கணிப்பு.

**حسن** (hasan) *adj.* அழகிய, கண்ணுக்கினிய, வனப்புள்ள, நேர்த்தியான உருவமைந்த.

**حسين** (hasin) *adj.* அழகான, பார்ப்பதற்கு அழகாயுள்ள.

**حسنه** (husna) *n.m.* அறஞ்செயல் விருப்பம், இரக்க மனப் பான்மை, அன்புச் செயல்.

**حشرات** (hashrāt) *n.m.* புழுப் பூச்சியினம், சிற்றுயிர்.

**حشرى** (hashri) *adj.* வலிந்து செய்யப்பட்ட, வன்முறையான, கட்டுமீறிய.

**حصن** (hisn) *n.m.* காப்பரண் மாளிகை, காப்பரண், அரண மைத்தல்.

**حصول** (husūl) *n.m.* முயற்சியால் அடைதல், பேறு.

**حصه** (hissah) *n.m.* கூறு, பகுதி, பங்கு, பாகம், கூறு.

حضرت (hazrat) *n.f.* வீறு, தோற்ற உயர்வு, உண்மையான மதிப்பு, தகுதி, உயர்நிலை, மேன்மை.

حفاظت (hifā-zat) *n.f.* பாதுகாப்பு, ஆதரவு, இடரிலாநிலை, தீங் கின்மை, பொருள்கள் வகை யில் வைத்தாதரிப்பு.

حقانیت (haqqā-niyat) *n.f.* உண்மை, மெய்ம்மை, தெய்வத்தன்மை.

حقیت (haqiyat) *n.f.* உரிமைக் கோரிக்கை, உரிமை.

حقیقت (haqi-qat) *n.f.* மூலப்பண் புக் கூறு, உண்மை, மெய்ம்மை.

حکایت (hikā-yat) *n.f.* நிகழ்ச்சி, கதை, வரலாறு, சென்ற கால அறிவு.

حکم (hukm) *n.m.* உத்தரவு, இசைவு, அனுமதி, ஒப்புதலுறுதி.

حکمی (hukmi) *adj.* கீழ்ப்படி தலுள்ள, பணிவான, இணங்கி நடக்கிற, கடமையில் நாட்ட முடைய, கடமையுணர்ச்சி காட்டுகிற, மகிழ்ந்து பணி செய் கிற.

حکومت (hakumat) *n.f.* ஆட்சி முறை, ஆட்சி, அரசு, அதி காரக்குழு.

حکیم (hakim) *n.m.* மெய்ந்நூல் அறிஞர், தத்துவஞானி, நோய் தீர்ப்பவர், மருத்துவர்.

حل (hal) *n.m.* கரைவு, கரைசல்.

حلال (halāl) *adj.* சட்டத்தின்படி அமைந்த.

حلاوت (halā-vat) *n.f.* அருங்கல வைப் பண்பு, சுவை மணச் சிறப்பு, தனிச்சுவை, உண்ணத் தூண்டும் நறுமணச் சுவை.

حلف (halaf) *n.f.* சூளுறவு, ஆணை, சபதம்.

حماری (himāri) *adj.* மதி கெட்ட, மந்தமான, மதி நுட்பமற்ற.

حماقت (himāqat) *n.f.* அறியாமை, அறிவற்ற நடத்தை, மடமை யான செயல், மூடப்பழக்கம், கவனக் குறைவு.

حمال (ham-māl) *n.m.* சுமைக் காரன்.

حمل (haml) *n.m.* சுமை, பளு, பாரம்.

حمّل (hammal) *n.m.* சூல், கருப்பம்.

حمالہ (hammāla) *adj.* கருவுற்ற சூலுண்ட.

حوا (hav-vā) *n.f.* ஆதாமின் மனைவி.

حواری (havā-ri) *n.m.* தோழன், உடனிருப்பவன், நண்பன், கூட்டாளி.

حوالات (havā-lāt) *n.f.* சிறைக்கூட மனை, சிறைக்கட்டறை, சிறை.

حوالہ (havā-lah) *n.m.* பொறுப்பு, பாதுகாப்பு, கவனிப்பு, பாது காப்புப் பொறுப்பு.

حوت (hūt) *n.f.* மீன், மீன் இறைச்சி.

حوض (hauz) *n.m.* நீர்த்தேக்கம், நீர்த்தேக்கத் தொட்டி.

حول (haul) *n.m.* வலிமை, ஆற்றல், உறுதி.

حیات (hayāt) *n.f.* உயிர், உயிருடனிருத்தல், பிழைப்பு, பிழைத் திருத்தல்.

حیثیت (hai-siyat) *n.f.* சமுதாயப் படிநிலை, உறழ்நிலை, தகுநிலை.

حین (hin) *n.m.* காலம், பொழுது, வேளை, குறித்த நேரம்.

حیوان (hai-vān) *n.m.* விலங்கு, நாற்கால் மிருகம், கால்நடைகள்.

## خ

خاتم (khātim) *n.f.* முடிவு, கடைசி, எல்லை, வரையறை, இறுதி நிலை.

خاتون (khātūn) *n.f.* சீமாட்டி, பெருமாட்டி, இல்லத் தலைவி.

خاد (khād) *n.m.* பருந்து, கருடன்.

خادم (khādim) *n.m.* வேலையாள், ஊழியர், ஏவலர், பணியாளர்.

خازن (khāzin) *n.m.* கருவூலத்தார், பொருளாளர்.

خاشاک (khā-shāk) *n.m.* கழிவு கப்பி, குப்பைக்கூளம், பயனற்ற பொருள்கள்.

خاص (khās) *adj.* தனிவகையான, சிறப்புமுறையான, சிறப்பியல்புடைய.

خاطب (khātib) *n.m.* சமய போதகர், சமய சொற்பொழிவாளர், சொற்பொழிவாளர், விரிவுரையாளர்.

خاکی (khāki) *adj.* காக்கிநிற, தூசியான, துகளடைந்த.

خالص (khālis) *adj.* உள்ளார்ந்த, மனமார்ந்த, நேர்மை வாய்ந்த, வாய்மை தவறாத, உண்மையான.

خالصہ (khā-lisah) *n.m.* அரசு செயலாட்சியின் கீழ் உள்ள நிலம். *adj.* தூய, பரிசுத்தமான, கலப்பற்ற.

خالق (khā-liq) *n.m* கடவுள், இறைவன், படைப்பாளர், ஆண்டவர்.

خالی (khāli) *adj.* பொருளற்ற, வறிதான, வெறுமையான.

خاموش (khāmosh) *adj.* ஓசையற்ற, சந்தடியில்லாத, அரவமற்ற, பேசாத, வாய் விடாத, உரையாடாத.

خامی (khāmi) *n.f.* தவறு, குற்றம், தப்பெண்ணம், தவறான பொருள்கோள்.

خان (khān) *n.m* ஆண்டை, தலைவர், அண்ணல், முதல்வர்.

خاندان (khān-dān) *n.m* பொதுப் பண்புகளைக் கொண்ட தனிச் சிறப்புக்குழு, குடும்பம், இனம்.

خاندانی نام (khāndāni nām) *n.f.* குடிபெயர், குடும்பப்பெயர்,

பட்டப் பெயர், சிறப்புப் பெயர்.

**خانساماں** (khān-sāmāṅ) *n.m.* உணவு மேடைப் பணியாள், தொண்டூழியர், அரசர் அப்ப் பணியாள்.

**خانگی** (khāngi) *adj.* வீட்டுக் குரிய, குடும்பத்தைச் சார்ந்த, தனிமுறையான.

**خانہ** (khāna) *n.m.* வீடு, அறை, தடுத்த தனி, இடம்.

**خائف** (khā'if) *adj.* அஞ்சிய, அச்ச முற்ற, அச்சந்தருகிற, அஞ்சி யஞ்சி நடுங்குகிற, தொல்லை யூட்டுகிற.

**خباثت** (kha-bāsat) *n.m.* தூய்மைக் கேடு, ஒழுக்கக்கேடு.

**خبر** (khabar) *n.f.* தெரிவிப்பு, தகவலறிவிப்பு, தகவல், செய்தி.

**خبرت** (khib-rat) *n.f.* மெய்யறிவு, முன்மதி, விவேகம், மதிநலம், பொது அறிவாழம்.

**خبیث** (khabis) *n.m.* ஈனன், இழி ஞன், கடைகெட்டவன்.

**ختم** (kha-tam) *n.m.* முடிவு செய் தல், முடிவு, தீர்மானம், முடி வுரை, முடிவுப்பகுதி, வாத முடிவு, ஆய்வின்முடிவு.

**ختنہ** (khatnah) *n.m.* சுன்னத்து விழா, விருத்த சேதனம்.

**خجل** (khajil) *adj.* வெட்கமுற்று, குற்றமுணர்ந்து நாணி.

**خدا** (khudā) *n.m.* உடையவர், உடைமையுரிமையாளர், சொந் தக்காரர்.

**خداحافظ** (khudā-hāfiz) *n.m.* பிரியாவிடை வாழ்த்து.

**خدایگان** (khudā-yagān) *n.m.* இறைவன்.

**خدمت** (khidmat) *n.f.* வேலையில் அமர்த்தல், நியமனம், பணி, சேவகம், பணிவிடை.

**خدنگ** (khadang) *n.m.* அம்பு, கணை.

**خر** (khar) *n.m.* கழுதை.

**خراب** (kharāb) *adj.* கெட்ட, தீய, கொடிய, கெடுபண்புடைய, கயமைத்தனமான, கீழ்த்தர மான, நாகரிகமற்ற, துன்பந் தருகிற, தீங்கான, பாதகமான, தொல்லை தருகிற.

**خرابی** (kharābi) *n.m.* கேடு, தீங்கு, அழிவு, கடுமை, இடையூறு, முழுக்கேடு.

**خراج** (kharāj) *n.m* கப்பம், திரை, திறை செலுத்துவதற்குட்பட்ட நிலை, பங்களிப்பு.

**خرافت** (khurā-fat) *n.f.* கட்டுக் கதை, பழங்கதை, புனை கதை, புதினம், நாவல், துஷ்ண வார்த்தைகள்.

**خرام** (khirām) *n.f.* இயலுந்திறம், நடக்கும் பாணி.

خرچ (kharch) *n.m.* செலவு, செல வழிவு, கைச்செலவு, செலவிடு தல், செலவினம்.

خرچه (kharcha) *n.m.* செலவுத் தொகை, செலவு, நடை முறைச் செலவினம்.

خردل (khardal) *n.m.* கடுகு.

خرسنگ (khar-sang) *n.m.* போட்டி யிடுபவர், எதிரி, எதிராளி.

خرطوم (khar-tūm) *n.f.* நீள் மூக்கு, யானைத்தும்பிக்கை.

خرمن (khirman) *n.m.* களஞ்சியம், கதிரறுப்பு, அறுவடை.

خرید (kharid) *n.m.* கொள்வினை, விலையிற் கொள்ளல், விலைக்கு வாங்கிய பொருள்.

خسارت (khisārat) *n.f.* இழப்பு, நட்டம், இழந்த பொருள், இழப்புக் குறைபாடு.

خسرو (khus-rau) *n.m.* அரசன், நாட்டாட்சியாளன், மன்னன்.

خشک (khushk) *adj.* வறண்ட, வற்றிப்போன, ஈரமில்லாத, ஈரம் குறைவான.

خشوع (khushū') *n.f.* பணிவு, தாழ் வுணர்ச்சி, அடக்கம், தாழ்ந்த நிலை.

خصوصاً (khasū-san) *adv.* சிறப் பாக.

خصومت (khusū-mat) *n.f.* பகை, பகைமை, எதிர்ப்பு.

خضاب (khizāb) *n.m.* முடிச்சாயம்.

خط (khat) *n.m.* கடிதம்.

خطر (khatar) *n.m.* இடர், ஆபத்து.

خطبه (khutba) *n.m.* சமய உரை, சமய விளக்கப்பேருரை.

خطه (khit-tah) *n.f.* தடம், வழி, பகுதி.

خفا (khafā) *adj.* கோபமான, சீற்ற முள்ள, சீறுகிற, கடுஞ் சினங் கொண்ட.

خلا (khalā) *n.m.* வெறுமை, காலியாயிருத்தல், வெற்றிடம், வெற்றுவெளி.

خلاص (khalās) *n.m.* விடுதலை, விடுவிப்பு, மீட்பு, விடுபாடு.

خلاق (khal-lāq) *n.m.* கடவுள், படைப்பவர், தோற்றுவிப்பவர், ஆக்குவோர்,

خلال (khi-lāl) *n.m.* பல்லீர்க்கு, தோல்வி, திட்டத்தகர்வு, முயற் சிச்சிதைவு.

خلت (khul-lat) *n.f.* நெருங்கிய உறவுடைய நிலை, உள்ளார்ந்த பழக்கம்.

خلجان (khal-jān) *n.m.* மன உலைவு, உடல் நலமின்மை, மன அமைதியின்மை.

**خلد** (khuld) *n.m.* விண்ணுலகு, சுவர்க்கம், பேரின்ப இடம்.

**خلط** (khilt) *n.m.* இயற்கை, இயலுலகு, இயற்கை மரபு, இயலாற்றல்.

**خلط** (khult) *n.m.* குழப்புதல், குழப்பம், குழம்பியநிலை, மனக் குழப்பம்.

**خلتی** (khala-ti) *n.f.* குறும்பு செய்பவர், நச்சரிப்பு செய்பவர், தொந்தரவு செய்பவர்.

**خلیج** (khalij) *n.f.* விரிகுடா, வளைகுடா.

**خلیفه** (khali-fah) *n.m.* முகம்மது நபியின் பின் தோற்றல், இஸ்லாமிய அரசியல் (அ) சமயத் துறை அதிகாரி.

**خموش** (khamosh) *adj.* ஓசையற்ற, பேசாத, சந்தடியில்லாத, வாய் விடாத, உரையாடாத, செய்தி வெளியிடாத, அமைதியான.

**خنا** (khannā) *n.f.* இறுமாப்பு, போலித்தற்பெருமை, வெற்றாரவாரம், தற்செருக்கு.

**خناس** (khannās) *n.m.* பிசாசு, தீய ஆவி.

**خناق** (khu-nāq) *n.m.* மூச்சுத் திணறல்.

**خندق** (khan-daq) *n.m.* அகழ், குழி, பள்ளம், நீர்வடிகால்.

**خنک** (khu-nak) *adj.* இளங் குளிரான, மட்டமான குளிர்ச்சி வாய்ந்த.

**خنگ** (khing) *n.m.* புரவி, போர்க் குதிரை.

**خواب** (khāb) *n.m.* கனவு, கனவு காணுதல், கனவுக் காட்சி.

**خواہش** (khāhish) *n.f.* விருப்பம், ஆசை, ஆர்வ வேட்கை.

**خورشید** (khur-shid) *n.m.* ஞாயிறு, கதிரவன், சூரியன்.

**خواہش** (khāhish) *n.f.* விருப்பம், ஆசை, ஆர்வவேட்கை.

**خواہشمند** (khāhish mand) *adj.* ஆவலுள்ள, விருப்பமிக்க, அவா நிறைவுடைய.

**خوش** (khush) *adj.* இன்பமான, மன நிறைவுடைய.

**خوشی** (khushi) *n.f.* மகிழ்ச்சி, பெருமகிழ்ச்சி, உவகை, களிப்பு, இன்பம், ஊக்கம்.

**خوض** (khauz) *n.m.* தியானம், சிந்தனை, ஆழந்து நினைத்தல்.

**خوف** (khauf) *n.m.* அச்சம், பயம், நடுக்கம், கலக்கம், திகில், கவலை.

**خون** (khūn) *n.m.* குருதி, இரத்தம், திட்டமிட்ட கொடுங் கொலை, மனமார்ந்த ஆட்கொலை, கொலைக் குற்றச் செயல்.

**خیاط** (khai-yāt) *n.m* தையற் காரர்.

**خیال** (khayāl) *n.m.* கருத்துரை, எண்ணம், மதிப்பீடு.

**خیانت** (khiyā-nat) *n.f.* கையாடல்.

**خیرات** (khai-rāt) *n.f.* நன்கொடை, ஈகை.

## د

**داب** (dāb) *n.m.* அழுத்தம், அமுக்கம்.

**دابنا** (dābnā) *v.* பிழி, கசக்கு, அழுத்திப்பிடி, திணித்து உட் செலுத்து, வலிந்து நுழைவி.

**داتا** (dātā) *n.m.* கொடையாளர், நல்லது செய்தவர், பரவலர். *adj.* பெருந்தகைக்குரிய, பெருந் தன்மை வாய்ந்த, பெரும் போக் கான, தாளார மனப்பான்மை உடைய.

**داتن** (dātan) *n.m.* பற்குச்சி, பற் துாரிகை.

**داتن کرنا** (dātan karnā) *v.* பற்களை சுத்தம் செய்.

**داخلہ** (dākhi-lah) *n.m.* நுழைவு, நுழைவுரிமை, நுழைவுக் கட்ட ணம், புகுவழி, தலைவாயில்.

**داخلی** (dākhili) *adj* உள்ளடங் கலான, உட்கொண்ட, உள் ளான, உட்புறமான, உட்புற முள்ள, உள்ளார்ந்த.

**داد** (dād) *n.m.* படர் தாமரை நோய்.

**دادر** (dādar) *n.m.* தவளை.

**دادنی** (dā-dani) *n.f.* முன்னேற்றம், வளர்ச்சி, அபிவிருத்தி, மேம் பாடு, உயர்வு, ஏற்றம்.

**دادی** (dādi) *n.m.* முறையீட்டாளர், குறை கூறுபவர், வாதி, வழக் காடுபவர்.

**دادی** (dādi) *n.f.* தந்தை வழி பாட்டியார்.

**دار** (dār) *n.f.* மரத்துண்டு, கட்டை.

**دارو** (dārū) *n.f.* நோய்தீர்க்கும் மருந்து, மருந்து, மது.

**داروغہ** (dāro-gha) *n.m.* கண் காணிப்பாளர், காவல் துறை மீமேலர்.

**داستان** (dāstān) *n.f.* கட்டுக் கதை, கற்பனை வருணனை.

**داغ** (dāgh) *n.m.* கறை, அழுக்கு.

**دالان** (dālān) *n.m.* மன்றம், நீண்ட பொது அறை.

**دام** (dām) *n.m.* விலை, மதிப்பு.

**دام** (dām) *n.m.* வலை, கண்ணி, பொறி.

**دامی** (dāmi) *n.m.* போட்டிப் பந் தய ஈடுபாட்டாளர், விளை யாட்டு வீரர்.

**دانت** (dānt) *n.m.* பல்.

**دانتن** (dāntan) *n.m.* பற்குச்சி.

**دانست** (dānist) *n.f.* கருத்து.

**دانہ** (dānah) *n.m.* தானியம், வித்து, முளைவிதை, விதை, பயிர்.

**داور** (dā-var) *n.m.* இறைவன், நீதியாளர்.

داہنا (dāhinā) *adj.* நேரான, நேர் நிலையான, ஒழுக்க நேர்மை யுடைய, பொருத்தமான.

دائرہ (dā'irah) *n.m.* வட்டு, வட்டம், வட்டத்தட்டு, வளையம், உருண்ட, கோளம்.

دایہ (dāya) *n.f.* பேறுகாலப் பணி மகள், மருத்துவச்சி, நோயளி களைப் பேணிக்காப்பவர்.

دبلا (dubalā) *adj.* மெலிந்த, மெல் லிய, கொழுத்திராத.

دبیر (dabir) *n.m.* செயற் பொறுப் பாளர், செயலாளர், எழுத்தர்.

دخان (du-khān) *n.m.* ஆவி, புகை, புகையாவி.

دخل (dakhl) *n.m.* தலையிடுதல், குறுக்கீடு, நுழைவு.

در (dar) *n.m.* கதவு, வாயில், முன் வாயில், முகப்பு.

در (dur) *n.m.* முத்து.

دراز (darāz) *adj.* நீளமான, நெடிய, நெட்டையான, நெடுந்தொலை வான.

دربار (dar-bār) *n.m.* வழக்குமன்றம், வழக்கு மன்றக் கூட்டம்.

درباری (dar-bāri) *n.m.* அரசவை யினர், மன்னர் பரிவாரத்தினர்.

دربند (dar-band) *n.m.* தாழ், தாழ்ப் பாள், தாழ்ப்பாள் கட்டை

درج (darj) *n.m.* எழுதப்பட்ட ஏதாவது ஒன்று.

درخواست (darkhvāst) *n.f.* குறை யிரத்தல், கெஞ்சிக் கேட்டல், பணிவு மனு.

درم (diram) *n.f.* முத்திரை கொண்ட நாணயம்.

درماندگی (dar-māndagi) *n.f.* ஆழ் துயர்நிலை, இடும்பை, இரங் கத்தக்க சூழல்.

درنگ (dirang) *n.m.* தயக்கம், இரு மன நிலை, ஐயப்பாடு கொள் ளல், உறுதியற்ற நிலை.

درود (darūd) *n.f.* திருவருள் பாலிப்பு, வாழ்த்து, வணக்க வுரை கூறுதல், இறையருள் வேண்டுதல்.

دری (dari) *n.f.* விரிப்பு, கம்பளம், சமுக்காளம்.

دریا (daryā) *n.m.* ஆறு, நதி.

دریافت (daryā-fat) *n.f.* தேடல், தேர்வாய்வு, கண்டுபிடித்தல், விசாரணை, கண்டுபிடிப்பு.

دریچہ (dari-chah) *n.m.* பலகணி, பலகணிச் சட்டம்.

دزد (duzd) *n.m.* திருடன்.

دزدی (duzdi) *n.f.* வழிப்பறி, கொள்ளை, சூறை, அச்சுறுத் திப்பறித்தல்.

دستار (dastār) *n.f.* தலைப்பாகை.

دسترخوان (dastar-khān) *n.m.* மேசை விரிப்பு.

دستور (dastūr) *n.m.* முறை, வழக்கம், மரபு.

دستوری (dastūri) *n.m.* தரகு, இசைவு, இணக்கம்.

دستیار (dast-yār) *n.m.* செயலாற்றுப் பணியாளர், உதவியாளர்.

دشت (dasht) *n.m.* பாலைவனம், காடு.

دشمن (dush-man) *n.m.* எதிரி, பகைவர், தீங்கு நினைப்பவர், எதிர்ப்பவர், போரில் எதிராளி.

دشنام (dush-nām) *n.f.* தவறான வகையில் பயன்படுத்துதல், மோசடி.

دشنه (dushna) *n.m.* பட்டாக் கத்தி, குத்துவாள், உடை வாள்.

دعوت (da'vat) *n.m.* விருந்து, பொது விருந்து, பெருவிருந்து, பாராட்டு பேச்சுகளுடன் கூடிய விருந்து.

دفتر (daftar) *n.m.* பதிவு, பதிவுப் புத்தகம், எழுத்துருப்பதிவு, பதிவுக் குறிப்புத் தொகுதி.

دفتردار (daftar-dār) *n.m.* பதிவாளர், அலுவலகப் பதிவீட்டாளர்.

دفن (dafan) *n.m.* மண்ணுக்கடியில் புதைத்தல், புதைவினை, பிணத்தை மண்ணுக்கடியில் புதைத்தல்.

دقت (diq-qat) *n.f.* இடையூறு, இடர்ப்பாடு, முட்டுக்கட்டை, கஷ்டமான.

دقیق (da-qiq) *adj.* இன்பத்தில் இழைகிற, ஆர்வஞ் செறிந்த.

دکھ (dukh) *n.m.* கடுந்துன்பம், வேதனை, வருத்தம், இக்கட்டு, இன்னல், வருத்தந் தருஞ் செய்தி, இடையூறு, இடர்ப் பாடு.

دکھانا (du-khānā) *v.* ஊறுபாடு உண்டுபண்ணு, தீங்கிழை, துன் புறுத்து, வருத்தம் உண்டு பண்ணு, ஊறுசெய்.

دکھانا (di-khānā) *v.* காட்சிக்குரிய தாக்கு, பலர் அறியத் திறந்து காட்டு, வெளிப்படுத்து, தோன் றும்படிசெய், காணவிடு, அம் பலப்படுத்து, பகட்டாகக் காட்டு.

دکھی (dukhi) *adj.* அலக்கணுற்ற, அவப்பட்ட.

دل (dil) *n.m.* உள்ளம், மனம், உள்ளக்கருத்து, கருத்து, எண் ணம், உணர்வு, உணர்வு நிலை.

دل (dal) *n.m.* பெரிய இராணுவம்.

دلار (dulār) *n.m.* அன்பு, பற்று, பாசம், நேசம், பற்றார்வம், காதல், அன்புச்செய்தி, காதல் தொடர்பு.

دلاری (dulāri) *n.f.* அருமைக்குரிய வர், ஆர்வ அன்புக்குரியவர், கண்ணானவர், காதலர்.

راجدلاری (rāj-dulāri) *n.f.* இள வரசி, அரசனின் மகள், அரசனின் பெயர்த்தி.

دلاسا (dilāsā) *n.m.* ஆறுதல், துயராற்றல், ஆறுதலளிக்கும் நிகழ்ச்சி.

دلال (dal-lāl) *n.m.* தரகர், வணிகத் துறை இடையீட்டாளர்.

دلاور (dilā-var) *adj.* வீரஞ்செறிந்த, ஆண்மையுள்ள, துணிவுள்ள, அஞ்சாநெஞ்சுடைய, தீரமிக்க, திண்ணிய உரமுடைய.

دلدر (dalid-dar) *n.m.* வறுமை, ஏழ்மை, இன்மை, பஞ்சம், பற்றாக்குறை, குறைபாடு, குறை பாட்டுநிலை.

دلی (dili) *adj.* உள்ளுணர்ச்சியுடன் கூடிய, ஆர்வமிக்க, அன்பு நிறைந்த, உள்ளங்கனிந்த, உள் ளார்ந்த, கிளர்ச்சியூட்டுகிற, மன மார்ந்த.

دلها (dul-hā) *n.m.* மணமகன்.

دلهن (dul-han) *n.f.* மணமகள்.

دلیل (dalil) *n.f.* வாதாடல், வாதம், சான்று.

دلیل کرنا (dalil karnā) *v.* சொல் லாடு, வாதிடு, மெய்ப்பி, காரணங்காட்டி நிலைநாட்டு.

دم (dam) *n.m.* மூச்சு, உயிர்ப்பு, மூச்சோட்டம்.

دم (dum) *n.f.* முடிவு, கடைசி, வால்.

دماغ (dimāgh) *n.m.* செருக்கு, தற் பெருமை, அகம்பாவம், அறி வாற்றல்.

دمکلا (dam-kalā) *n.m.* தீயணைக் கும் இயந்திரம்.

دن (din) *n.m.* நாள், நேரம், அதிர்ஷ்டம்.

دنبل (dunbal) *n.m.* கொப்புளம், கொப்புள வீக்கம்.

دنی (dini) *adj.* பழைய, காலங் கடந்துவிட்ட.

دنیا (dunyā) *n.f.* உலகு, உலகம், நிலவுலகம், மனித உலகம், வாழுலகு.

دوا (davā) *n.f.* மருந்து.

دوات (davāt) *n.f.* மைக்கூடு, மைக் கூடுதாங்கி, மைக்கூடுகள் வைப் பதற்கான அமைப்புடைய சட் டம்.

دوالا (divā-lā) *n.m.* கடன் தீர்க்க வகையற்றநிலை, பொருளக முறிவு, நொடிப்பு.

دوام (da-vām) *n.m.* நிலை பேறுடைமை, துறக்க வாழ்வு.

دوبدو (du-badu) *adv.* நேருக்கு நேர்.

دود (dud) *n.m.* மூடுபனி.

دوده (dūdh) *n.m.* பால், பழச்சாறு.

دور (dūr) *n.f.* தொலைவு, தொலை விடம்.

دور (daur) *n.m.* காற்றோட்டம்.

دوزخ (do-zakh) *n.m.* நரகம், பழி யாவிகள் தண்டனை நுகரும் உலகம்.

دوست (dost) *n.m.* நண்பர், அன்பர், துணைவர்.

دوسرا (dūsrā) *adj.* அடுத்த, ஒட்டி அருகிலுள்ள, உடனடியாகப் பின் தொடர்கிற, அடுத்து வரு கிற.

دوشمال (dosh-māl) *n.m.* துவாலை, துவட்டு குட்டை.

دولت (davlat) *n.f.* செல்வம், சொத்து, உடமை மிகுதி, செல்வ நிலை.

دونوں (donoṅ) *adj.* இருவரில் இரு வரும், இணைந்த, இரண்டில் இரண்டும் சேர்ந்த, இருசார்பு களும் ஒழுங்கு சார்ந்த.

دها (dahā) *n.m.* முகரம் மாதத்தின் முதல் பத்து நாட்கள்.

دهات (dhāt) *n.f.* உலோகக்கரு, உலோகம், கனிப்பொருள், சுரங் கத்திலிருந்து கிடைக்கும் தாதுப் பொருள்.

دهات (de-hāt) *n.m.* கிராமம், நாட் டுப்புறப்பகுதி.

دهاگا (dhāgā) *n.m.* நூல்.

دهان (dhān) *n.m.* நெல்.

دهاوا (dhā-vā) *n.m.* திடீர் தாக்கு தல், மேற்சென்றெதிர்த்தல், முற் றுகை, மோதுதல்.

دهر (dahr) *adj.* இம்மைக் குரிய, காலஞ்சார்ந்த, காலங்குறிக்கிற.

دهرنا (dharnā) *v.* வை, இடத்தில் அமர்வி.

دهڑ (dhaṛ) *n.m.* முண்டம், உடம் பின் நடுப்பெரும் பகுதி, உடற் பகுதி.

دهقان (dahqān) *n.m.* கிராமத்தார்.

دهلانا (dhu-lānā) *v.* கழுவு, அலம்பு, அலம்பிச்செல்.

دهمک (dha-mak) *n.f.* காலடி ஓசை, லேசான தலைவலி, மனவேதனை.

دهن (dhun) *n.f.* பண்ணிசைப்பு, சுதி, இசை, இராகம்.

دهندا (dhan-dā) *n.m.* வேலை, பணி, அலுவல், ஈடுபட்ட வாணிகம், தொழில், கைத் தொழில்.

دهنک (dha-nak) *n.f.* வில், வானவில்.

دهواں (dhu-vāṅ) *n.m.* புகைப் படலம், புகை, புகை போன்ற பொருள்.

دهوبی (dhobi) *n.m.* சலவை யாளர், வண்ணான்.

دهوپ (dhūp) *n.f.* வெயில், வெயி லொளி, பகலொளி.

دهول (dhūl) *n.f.* துகள், பொடி, தூசி, தூள், மண்.

دھونا (dhonā) *v.* கழுவித் தூய்மை யாக்கு, துப்புரவுப்படுத்து.

دھونا (dhūnā) *n.m.* மரப்பிசின், கோந்து.

دھونس (dhauns) *n.f.* அச்சுறுத்தல், பயமுறுத்தல், மருட்டல், இடர் பின் வருநிலை.

دھیما (dhimā) *adj.* மெதுவான, மந்தமான, தாமதமான, காலந் தாழ்த்துகிற, எழுச்சியில்லாத, விருப்பற்ற.

دیباچہ (dibā-cha) *n.m.* அறிமுகம், முன்னுரை, முகவுரை, தொடக்க நிலையான பகுதி.

دیر (dair) *n.f.* கோயில், வழிபாட்டி டம், இறைவன் உறையும் இடம்.

دیروز (diroz) *n.m.* நேற்று, நேற்றைய நாள்.

دیش (desh) *n.m.* நாடு, தாயகம்.

دیکھنا (dekhnā) *v.* உற்றுப்பார், கூர்ந்துநோக்கு, கவனி, மேற் பார்வை செய்.

دیگر (digar) *adj.* வேறொரு, இன்னும் ஒரு, ஒப்புடைய ஒரு, ஒன்றுவிட்டொன்றான, இரண் டாவதான, இரண்டில் ஒன் றான, மற்ற, ஏனைய, இன்னும் உள்ள, வேறான.

دین (dain) *n.m.* கடன், கடன்பாடு, கடன்கொடுக்க வேண்டிய பொறுப்பு.

دینا (denā) *v.* அளி, கொடு.

دینار (dinār) *n.f.* பழைய அராபிய தங்க நாணயம், ஈராக் நாட்டின் நாணய அளவு, பழம் பொற் காசு, நாணயம்.

دیوالی (divā-li) *n.f.* இந்துக்கள் கொண்டாடும் தீபாவளிப் பண் டிகை.

دیوانگی (divāngi) *n.f.* பித்து, மூளைக்கோளாறு, பைத்தியம்.

دیہاتی (de-hāti) *n.m.* கிராமத்தார்.

## ڈ

ڈاٹ (ḍāṭ) *n.f.* தக்கை, மேல் வளைவு.

ڈانٹنا (ḍānṭ-nā) *v.* அச்சுறுத்து, வன்முறையாகப் பயமுறுத்தல் செய், கண்டி, கடிந்துரை, கண்டித்து ஆணையிடு.

ڈار (ḍār) *n.f.* கிளை, கூறு, பிரிவு, வரிசை, மிருகங்கள் கூட்டம்.

ڈاڑھی (ḍāṛhi) *n.f.* தாடி.

ڈاکو (ḍāku) *n.m.* கொள்ளைக் கூட்டக்காரன்.

ڈالنا (ḍālnā) *v* வை, போடு, இடு, இடத்தில் அமைவி, ஊற்று, பொழி, கொட்டு, சிந்து.

ڈانڈا (ḍān-ḍā) *n.m.* முக்கியமான நிகழ்ச்சி, குறிப்பிடத்தக்க பொருள், அளவுப்பொருள்.

ڈانواڈول (ḍān-vānḍol) *adj.* உறுதியில்லாத, நிலையற்ற, தடுமாறுகிற, உறுதியற்ற.

ڈاہ (ḍāh) *n.f.* பொறாமை.

ڈاین (ḍā-yan) *n.f.* புறக்கணிக்கக் கூடிய பெண், இகழத்தக்கப் பெண்.

ڈب (ḍab) *n.m.* அதிகாரமுடையவர், அதிகாரக் குழு.

ڈبانا (ḍu-bānā) *v.* நீரில் அமிழ்த்து, தோய், தோய்த் தெடு, மூழ்கடி, மூழ் கடித்து மாளச்செய், மூழ் குவி.

ڈر (ḍar) *n.m.* மதிப்பச்சம், வீறச்சம், பயபக்தி, அச்சம்.

ڈسنا (ḍasnā) *v.* கொட்டு, கொடுக்கினால் தாக்கு, கொட்டி காயம் உண்டு பண்ணு, கொட்டி நோவுறுத்து.

ڈف (ḍaf) *n.m.* கஞ்சிரா.

ڈکار (ḍa-kār) *n.m.* ஏப்பம்.

ڈکوری (ḍako-ri) *n.f.* குளவி.

ڈکی (ḍik-ki) *n.f.* தாக்குதல், எதிர்ப்பு.

ڈکیت (ḍa-kait) *n.f.* கடற் கொள்ளைக்காரர்.

ڈگ (ḍag) *n.f.* காலடி, அடிச் சுவடு.

ڈگنا (ḍignā) *v.* சிறுகு, குறுகு, சுருங்கு, சிறிதாய்விடு, உள்ளுக் கிழு, வழுகு, நழுவு, நழுவிச் செல், தப்பிமறை.

ڈلا (ḍalā) *n.m.* பெரிய அளவு, மிகுதியான அளவு, குவியல்.

ڈنڈا (ḍanḍā) *n.m.* பொது நோக்குள்ள, உறுப்பினர்கள டங்கிய கூட்டுக்குழு, தனிக் குழு, கழகம், கும்பல்.

ڈنڈوت (ḍanḍvat) *n.f.* வணக்க வுரை, வணக்க வாழ்த்து, வணக்கமுறை.

ڈنڈی (ḍanḍi) *n.f.* பிடி, கைப்பிடி, காம்பு, உத்தரம், தூலம்.

ڈنک (ḍank) *n.m.* கொடுக்கு, கொட்டும் உறுப்பு முனை, பாம்பின் நச்சுப்பல் முனை, பூச்சி வகையின் கொட்டும் உறுப்பு.

ڈوب (ḍob) *n.m.* மூழ்குதல்.

ڈوڈا (ḍoḍā) *n.m.* உலர்ந்து வெடிக்கும் விதையுறை, வெடிக்கும் விதைப்பை, தோல்.

ڈوریا (ḍor-yā) *n.m.* வார் இழை, இழைவார், நாய்காப்பாளர்.

ڈول (ḍaul) *n.m.* திட்டம், வரைவு, ஒழுங்கமைப்பு, அமைப்புமுறை, பாணி, படிவம்.

ڈول (ḍol) *n.m.* வாளி, நீர் இழுக்கவும் நீர் வைக்கவும் பயன்படும் வாளி.

ڈولنا (ḍolnā) *v.* அசை, நிலைமாறு, குலுக்கு, ஆட்டு, ஆட்டிக்காட்டு, ஊஞ்சலாடு.

ڈونگا (ḍon-gā) *n.m.* கரண்டி.

ڈھارس (ḍhā-ras) *n.m.* ஊக்குதல்.

ڈھال (ḍhāl) *n.f.* கேடயம்.

ڈھالنا (ḍhāl-nā) *v.* மாதிரி அச்சில் வார், அச்சிலிட்டு உருவாக்கு, உருக்கிவார்.

ڈھانا (ḍhānā) *v.* துடைத்தழி, அழி, சிதை, பாழாக்கு.

ڈھب (ḍhab) *n.m.* தோற்றம், முறை, செயல் வகை, நடத்தை, நிலை, மன நிலை, நிலைமை.

ڈھلان (ḍhalān) *n.m.* கீழ்நோக்கிய சரிவு, சாய்வு, சரிவு, சரிவு நிலை, சாய்வளவு.

ڈھلائی (ḍhulā'i) *n.f.* சரக்கேற்றப் போக்குவரத்துக் கட்டணம்.

ڈھلمل (ḍhal-mal) *v.* தள்ளாடு, தடுமாற்றம், தலைசுற்று, தள்ளாடி நட, தளர்நடையிடு.

ڈھنڈورا (ḍhan-ḍorā) *n.m.* பொது அறிவிப்பு, பொது அறிவிப்புச் செய்தி, அரச விளம்பரம்.

ڈھنگ (ḍhang) *n.m.* பாங்கு, பாணி, முறை, செயல் வகை, வழிவகை, நடக்கை.

ڈھور (ḍhor) *n.m.* கால்நடை, கன்றுகாலிகள், ஆடு-மாடு-எருது குதிரைகள்.

ڈھورا (ḍho-rā) *n.m.* புழு, தானியங்களுக்கு தீங்கிழைக்கும் புழு வகை.

ڈھول (ḍhol) *n.m.* பெரிய முரசு.

ڈھولن (ḍho-lan) *n.f.* அன்பிற்குரியர், அருமையானவர், காதலன், கள்ளக்காதலர், தலைவி, குடும்பத்தலைவி.

ڈھولی (ḍholi) *n.f.* வெற்றிலைக் கொத்து.

ڈھونا (ḍhonā) *v.* இடம் பெயர்த்தெடுத்துச் செல், இடம் விட்டு இடம் கொண்டு செல்.

ڈھیر (ḍher) *n.m.* குவியல்.

ڈھیل (ḍhil) *n.f.* இளக்கம், தளர்ச்சி, மந்தம், முனைப்புக் கேடு, சோர்வு, பின்னடைவு.

ڈیرہ (ḍe-rah) *n.m.* தங்குதல், குடியிருத்தல், குடியிருப்பிடம், வீடு.

ڈیوڑی (ḍeoṛi) *n.f.* வாயிற்படி, நுழை வாயிற் படிக்கல், நுழை வாயில் முகப்பு.

# ذ

ذابح (zā-beh) *n.m.* இறைச்சிக் கடைக்காரன்.

ذات (zāt) *n.f.* சாதி, பிறப்படிப் படையான சமுதாயப்பிரிவு, சாதிமுறை, சாதிப்படி.

ذاکر (zā-kir) *adj.* நன்றியுடைய, நன்றியறிதலுள்ள, ஏற்றுக் கொள்ளத்தக்க.

ذاہل (zā-hil) *adj.* மறதியுடைய, மறக்கும் இயல்புடைய, கவன மற்ற.

ذبح (zabah) *n.m.* மாக்கொலை, படுகொலை.

ذبح کرنا (zabah karnā) *v.* கொல்லு, கொலை செய்.

ذخیرہ (zakhi-rah) *n.m.* செல்வம், புதையல், அரும்பொருள்.

ذرا (zarā) *adv.* மிகச்சிறிய அளவில் மட்டுமே, ஒரு சிறிதே, அரிதே, கிட்டத்தட்ட இல்லை என்று சொல்லும் அளவில்.

ذرہ (zar-rah) *n.m.* அணு, பருப் பொருளின் முன்கூறு, அணுக் கூறு.

ذقن (zaqan) *n.m.* கன்னம், முக வாய்க்கட்டை.

ذکا (zakā) *n.m.* மதிநலம், அறிவு நுட்பம், புத்திசாலித்தனம்.

ذکاوت (zakā-vat) *n.f.* புதுப் புனைவுத்திறன், கூர்மதி.

ذکا (zukā) *n.m.* ஞாயிறு, கதிர வன், சூரியன்.

ذکر (zikr) *n.m.* குறிப்பீடு, குறிப்பு, பெயரீடு.

ذکی (zaki) *adj.* கூர்மையான, மதி நுட்பமுடைய.

ذل (zill) *n.m.* நடத்தைக்கேடு, ஒழுக்கச்சீர்கேடு, படுமோச மான இயல்பு.

ذل (zull) *n.m.* கருணை, மென் பண்பு, இயல் எளிமை.

ذلیل کرنا (zilil karnā) *v.* இகழ்ச்சி உண்டுபண்ணு.

ذم (zam) *n.f.* வசைப்பண்பு, பழிக் கூறு, அவதூறு, இகழ்ச்சி, திட்டு, இடித்துரை.

ذمہ (zim-mah) *n.m.* பொறுப்பு, பாதுகாப்பு.

ذنب (zamb) *n.m.* குற்றம், தவறு, பாவம்.

ذوق (zauq) *n.m.* இன்பம், இன்ப நுகர்வு, விருப்பம், மன மகிழ்ச்சி.

ذہب (zahab) *n.m.* செல்வம், செல்வவளம், பொருள்வளம், பொன், தங்கம்.

ذہل (zahl) *n.m.* புறக்கணிப்பு, கவனமின்மை.

ذہن (zehn) *n.m.* நினைவாற்றல், கூர்மதி.

ذی (zi) *n.m.* இறைவன், கடவுள்.

ذیل (zail) *n.m.* பிற்சேர்க்கை, இணைப்பு.

ر

راب (rāb) *n.f.* கூழ்பதநீர், இனிப்பான பாகு போன்ற திரவம்.

رابطہ (rābtah) *n.m.* தொடுதல் மூலம் கொள்ளும் தொடர்பு.

رات (rāt) *n.f.* இரவு.

راتب (rātib) *n.m.* படி, உதவித் தொகை, தீவனம், கால் நடைத் தீனி, உணவு.

راج (rāj) *n.m.* விதி, நடைமுறை விதி, அரசு, ஆட்சிப்பகுதி, மன்னரின் ஆட்சிக்குட்பட்ட பரப்பு.

راچھ (rāchh) *n.m.* கருவி, துணைச் சாதனம்.

راحت (rāhat) *n.f.* இன்பஅமைதி, இயலமைதி, இளைப்பாறுகை, ஓய்வு, அமைதி.

راحلہ (rāhi-lah) *n.m.* கூண்டு வண்டி, மூடப்பட்டுள்ள வண்டி.

راحم (rā-him) *adj.* பரிவிரக்கஞ் சார்ந்த, பரிவிரக்கமுடைய, பரிவிரக்கங்குறித்த, பரிவிரக்கந் தெரிவிக்கிற.

راد (rād) *n.f.* சீழ்.

راڑ (rāṛ) *n.f.* சண்டை, பூசல், நட்பு முறிவு.

راز (rāz) *n.m.* இரகசியம், புரியாத செய்தி, சிலருக்கே தெரிந்த செய்தி,புதை மறைவான செய்தி, புதிர்நிலை.

رازق (rā-ziq) *n.m.* கடவுள், ஆண்டவன், பேணுகிறவன்.

راس (rās) *n.m.* ஏற்பு, ஏற்பிசைவு, கடிவாளம், குதிரையின் கடிவாளவார்.

راست (rāst) *adj.* உண்மையான, சரியான, கொள்கைக்கு ஏற்ற, பிறழாத, உண்மைப்பற்று மிக்க.

راستہ (rāstah) *n.m.* நடை, செல்லும்வழி, காலடிப்பாதை, நடைபாதை, தெரு, வீதி, பெருஞ்சாலை.

راشد (rā-shid) *adj.* கடமை பேணுகிற.

راضی (rāzi) *adj.* தானே ஆர்வந் தெரிவிக்கிற, மன மகிழ்வுடன் முனைகிற.

راغ (rāgh) *n.m.* பசும்புல் நிலம், நீர்வளமுள்ள தாழ்நிலம்.

رافت (rā-fat) *n.f.* இரக்கம், கழிவிரக்கத்துக்குரிய செய்தி, வருந்தத்தக்க செய்தி.

راقب (rāqib) *n.m.* எதிராள், போட்டியாளர், பரிசு வகையில் உடன் போட்டியாளர்.

راقم (rāqim) *n.m.* கடிதம் எழுதுபவர், கடிதத் தொடர்பு கொள்பவர்.

راکب (rākib) *n.m.* குதிரைச் சவாரி செய்பவர், ஊர்தி ஏறிச்செல் பவர், ஏறிச்சவாரி செய்யக் கூடி யவர்.

راکھ (rākh) *n.f.* சாம்பல்.

راگ (rāg) *n.m.* பாடல், பாட்டு, இசைப்பா, இன்னிசை.

رال (rāl) *n.f.* உமிழ்நீர், எச்சில்.

رام (rām) *adj.* கீழ்ப்படிதலுள்ள, பணிவான, இணங்கி நடக்கிற.

ران (rān) *n.f.* தொடை.

رانڈ (rānḍ) *n.f.* கைம்பெண், விதவை.

رانگ (rāng) *n.m.* வெள்ளீயம்.

رانی (rāni) *n.f.* இளவரசி, அரசி, அரசனின் மனைவி.

راوی (rāvi) *n.m.* வரலாற்றாசிரியர்.

راہب (rā-hib) *n.m.* முற்காலக் கிறித் தவத்துறவி, கிறித்தவப் பெண் துறவி, மடத்துறவி.

راحم (rā-him) *n.m.* கருணையுடை யவர்.

رب (rab) *n.m.* கடவுள், இறைவன், படைப்பாளர், ஆண்டவர்.

رب (rub) *n.m.* சாறு.

ربانی (rab-bāni) *adj.* தெய்வத் தன்மை வாய்ந்த.

ربیب (ra-bib) *n.m.* மாற்றுரிமை மகன், கணவனின் மறுமனைவி புதல்வன்.

رت (rut) *n.f.* பருவகாலம், பருவ முறை.

رتبہ (rut-bah) *n.m.* படிநிலை, படி வரிசை, அளவுப்படி வரிசை.

رتو (ritu) *n.f.* வானிலை.

رتھ (rath) *n.f.* தேர், இரதம், நாலு சக்கரமுள்ள அரசாங்க வண்டி.

رٹ (raṭ) *n.f.* செய்ததே செய்தல், சொன்னதே சொல்லுதல், மீண்டும் செய்யப்பெறல், கூறி யது கூறல்.

رجواڑا (raj-vāṛā) *n.m.* ஆட்சிப் பகுதி, நாட்டாட்சி எல்லை, நட்டாட்சிப் பரப்பு, மன்னரின் ஆட்சிக் குட்பட்ட பரப்பு.

رخ (rukh) *n.f.* இலக்கு, போக்கு, முகப்பு செல்லும் பக்கம்

رخت (rakht) *n.m.* தட்டு முட்டுப் பொருள்கள், உடமை, சொத்து, உரிமைப் பொருள்.

رخش (rakhsh) *n.m.* பிறங்கொளி, ஒளி, மினு மினுக்கம், ஒளிர்வு, மின்னுதல்.

رد (rad) *n.m.* மறுப்புரை, கண் டனக் குறிப்பு, தவறென்று நாட்டுதல், வாதிட்டு நிராகரித் தல், மறுத்தொழிப்பு, நீக்கம்.

ردا (ridā) *n.f.* தளர் மேலுடுப்பு, தளர்ச்சியான மேலங்கி, மேற் போர்வை, பெண்களின் தளர்த் தியான கையற்ற மேலாடை.

رذالہ (rizālah) *n.m.* கயவன்,

போக்கிரி, ஒழுக்கமிலி, நாடோடி.

رزم (razam) *n.m.* போர், யுத்தம், சண்டை.

رس (ras) n.m.. செடிப்பால், தாவ ரச்சாறு, சாறு, பிழிவு, இனிமை, இன்மணம்.

رسائن (rasā-yan) *n.m.* கனிப் பொருள், சுரங்கத்திலிருந்து கிடைக்கும் தாதுப் பொருள்.

رستخیز (rasta-khez) *n.m.* தீர்ப்பு நாள்.

رستگاری (rastagāri) *n.f.* விடுதலை, முத்தி, பேரின்பப் பேறு.

رستم (rustam) *n.m.* மல்லன், வீர முதல்வன், வாகையர்.

رسم (rasm) *n.f.* சமயசடங்கு, வினைமுறை, வழக்கம், மரபு.

رسوائی (rusvā'i) *n.f.* அவமானம், மானக்கேடு, அகௌரவம், ஒழுக்கமின்மை.

رسوخ (ra-sūkh) *n.m.* வழி, வாய்ப்பு, உறுதிப்பாடு, வல்லமை.

رسول (ra-sūl) *n.m.* நபி, தீர்க்க தரிசி.

رشتہ (rish-tah) *n.m.* உறவுநிலை, குடும்பஉறவு.

رشد (rashd) *n.m.* அறிவுரை, போதனை.

رشوت (rish-vat) *n.f.* கைக்கூலி, இலஞ்சம்.

رضا (razā) *n.f.* இசைவு, அனுமதி.

رطوبت (rutū-bat) *n.f.* ஈரம், கசிவு, நீர்பயப்பு.

رفاقت (rifā-qat) *n.f.* சங்கம், கழகம்.

رفت (raft) *n.f.* புறப்பாடு, வெளிச் செல்லுதல்.

رفق (rifq) *n.m.* அன்பு, கனிவு, பண்பமைதி.

رفی (rafi) *n.f.* புகையொட்டு, அட் டைக்கரி, புகைக்கரிக்கறை, புகைக்கறி எரு.

رقاص (raqqās) *n.m.* நடனமாடு பவர், ஆடல் தொழிலர்.

رقبہ (raqba) *n.m.* பரப்பு, நிலப் பரப்பு, பரப்பளவு, வெற்றிடம்.

رقص (raqs) *n.m.* நடனம், கூத்து, ஆடல்.

رقیب (raqib) *n.m.* போட்டியிடு பவர், எதிரி, எதிராளி. *adj.* பொறாமையுடைய, பிறர்நலங் காணப்பொறாத.

رکابی (rakā-bi) *n.f.* உணவுத் தட்டு, தட்டு, திண்ணிய தகடு, தகட்டுப்பாளம்.

رکن (rukn) *n.m.* தூண், தூபி, அழகுத்தம்பம்.

رکنا (ruknā) *v.* ஓய்வுகொள், ஓய் வுற்றிரு, இளைப்பாரு, ஓய் வுறு, இடை ஓய்வுகொள், இடையில் தங்கு.

رکھنا (rakhnā) *v.* வை, வைத்திரு, போடு, இடத்தில் அமைவி, இடு, உடமையாகப் பெற்றிரு, உடமையாக்கைக் கொள்.

رکھوالا (rakh-vālā) *n.m.* வைத்திருப்பவர், பேணுபவர், நிறுவனங்களின் உரிமைக்காப்பாளர், பாதுகாப்பவர், காவலர், வாயிற் காவலர்.

رگ (rag) *n.f.* நரம்பு, குருதிக் குழாய்.

رمال (rum-māl) *n.m.* குறிசொல்பவர், சோதிட வல்லுநர்.

رمنا (ramnā) *v.* சுற்றித்திரி, ஒழுங்கின்றி நடந்து செல், திட்டமின்றிப் பயணஞ் செய்.

رنج (ranj) *n.m.* துயரம், கவலை, வருத்தம், ஆழ்ந்த மனத் துன்பம், துயருறுதல்.

رند (rind) *n.m.* குடிகாரர், குடிப் பழக்கமுள்ளவர், போதையேறக் குடிப்பவர்.

رنگ (rang) *n.m.* நிறம், வண்ணம், சாயம், வண்ணப் பொருள்.

رنگت (ran-gat) *n.f.* இயல்நிறம், மேனிவண்ணம்.

رنگین (ran-gin) *adj.* வண்ண வனப்புடைய.

روا (ravā) *adj.* சட்ட உரிமை வாய்ந்த, சரியான, தகுதியான.

رواق (ri-vāq) *n.m.* கட்டிடத்தின் முன்மண்டபம், மாடியின் முன் பாகம், நீண்ட தாழ்வாரம்.

رواں (ra-vāṅ) *adj.* நிகழ்கிற, நடப்பிலுள்ள, நாளது.

روپا (rūpā) *n.m.* வெள்ளி.

روپیہ (rūpiya) *n.m.* இந்திய நாணயம், ரூபாய், நாணயம்.

روٹی (roṭi) *n.f.* ரொட்டி, உணவு.

روح (rūh) *n.f.* ஆத்மா, பிராணன், உயிர்.

روز (roz) *n.m.* நாள். *adj.* நாள் தோறும் வருகிற, ஒவ்வொரு நாளும் நிகழ்கிற.

روزگار (roz-gār) *n.m.* வேலை, தொழில்.

روزہ (roza) *n.m.* நோன்பு, உணவு மறுப்பு, உண்ணா நிலை,

روس (raus) *n.f.* அகன்ற பாதை.

روشن (ro-shan) *adj.* பிரகாசமான, ஒளிபொருந்திய.

روکڑی (rokaṛi) *n.m.* உடனடிப் பணம், ரொக்கம்.

روکنا (roknā) *v.* தடு, மறி, தடுத்து நிறுத்து, இடைஞ்சல் விளை, தடை செய், முன்னேறவொட்டாமற் செய், குறுக்கிட்டுத்தடு, திடீரெனக் குறுக்கீடு.

روکھا (rū-khā) *adj.* வறண்ட, வற்றிப்போன, நீர்ப்பசையற்ற, ஈரமில்லாத, விரும்பாச்சுவையுடைய, முரண் சுவையுடைய/ வழவழப்பற்ற.

رومال (rū-māl) *n.m.* கைக்குட்டை, துவாலை.

رونا (ronā) *v.* அழு, புலம்பு, கதறு, கண்ணீர்விடு, வருந்து.

رونی صورت (roni-surat) *adj.* சோர்வான, துயரார்ந்த, எழுச்சி குன்றிய.

رونق (rau-naq) *n.f.* அழகு, வனப்பு, கண்ணுக்கினிமை, அழகுக்கூறு, முழுநிற வனப்பு.

روئی (rū'i) *n.f.* பருத்திப்பயிர், பஞ்சு.

رویت (rūyat) *n.f.* போன்ற சாயல், புறத்தோற்ற ஒற்றுமை.

رویہ (ravaiya) *n.m.* நடத்தை, ஒழுக்கம், நடத்துமுறை.

رہائی (rahāi') *n.m.* விடுவிப்பு, விடுபாடு, தவிர்ப்பு, கட்டுப்பாட்டு நீக்கம்.

ریا (riyā) *n.m.* பாசாங்கு, போலி நடிப்பு, பாவனை, போலித் தன்மை, மோசடி, ஏமாற்றுதல்.

ریاضی (riyā-zi) *n.f.* கணக்கியல்.

ریت (ret) *n.f.* மணல்.

ریخ (raikh) *adj.* தளர்ந்த, உறுதியற்ற, விறைப்பற்ற, தளர்ச்சி யான.

ریز (rez) *n.m.* ஊற்றுதல், கொட்டுதல், பொழிதல், சிந்துதல்.

ریش (resh) *n.m.* வெம்புண், புண் பட்ட இடம், பிளப்பு, வெட்டுக் காயம்.

ریشم (re-sham) *n.m.* பட்டு, பட்டிழை, செயற்கைப்பட்டு, செயற்கைப் பட்டிழை.

ریغل (righal) *adj.* மெல்லிய, வறண்ட, ஈரமில்லாத.

رین (rain) *n.f.* இரவு, இருள், இருட்டு, இராக்காலம், இராப் பொழுது.

## ز

زار (zār) *n.m.* விருப்பம், விழைவு, தெரிவித்தல், வேண்டுகோள்.

زال (zāl) *adj.* பழைய, பழமைப் பட்டு விட்ட, காலங் கடந்து விட்ட, முற்பட்ட, சாம்பல் நிற முடியுடைய.

زانکہ (zānke) *adv.* காரணத்தினால், நிமித்தமாக என்று கூறும் அளவுக்கு.

زانو (zānu) *n.m.* தொடை.

زاہد (zāhid) *n.m.* கடுந்துறவி, கடு நோன்பாளர், பக்தர், வழிபாட்டாளர்.

زائر (zā'ir) *n.m.* தலந்திரிபவர், யாத்திரிகர்.

زائل (zā'il) *adj.* காட்சியிலிருந்து மறைந்து போகிற, ஆவியாகி

மறைந்து போகிற, அழிந்து போகிற, குறைபாடுடைய.

زبان (za-bān) *n.f.* பேச்சு, பேச்சுத்திறம், நாவன்மை.

زبد (zubd) *n.m.* வெண்ணெய், வெண்ணெய் கலந்த பொருள், பாலேடு, பாலேடு கலந்த பண்ட வகை.

زبر (zabar) *adj.* மேம்பட்ட, மேனிலைச் சார்ந்த, மேல்தகுதியுடைய, உயர்தரமான.

زبون (za-būn) *adj.* கெட்ட, தீய, கொடிய, கெடு பண்புடைய, கீழ்த்தரமான, தீங்கிழைக்கிற.

زراعت (zirā'at) *n.f.* விவசாயம், பயிர் செய்தல், பயிர்த்தொழில், வேளாண்மை.

زرخیز (zarkhais) *adj.* செழிப்பான, வளமான.

زچ (zich) *n.m.* தொந்தரவு செய்தல்.

زچہ (zach-chah) *n.f.* மகப்பேறுற்ற நிலையில் உள்ள பெண், கர்ப்பம் தரித்த பெண்.

زحمت (zah-mat) *n.f.* தொந்தரவு, தொல்லை, மனத்துன்பம், மனத்துயர், வேதனை.

زشت (zisht) *adj.* தோல்வியுற்ற, இரக்கமற்ற, வெறுப்பான.

زعاف (zu'āf) *n.m.* திடீர்மரணம்.

زک (zak) *n.f.* தோல்வி, தயவிழப்பு, நாணக்கேடு, மானக்கேடு, தீங்கு.

زکام (zukām) *n.m.* கபம், சளி, நீர்கோப்பு, மூக்கடைப்பு.

زکاوت (zakā-vat) *n.f.* தூய்மை, ஒழுக்கத் தூய்மை, உடல் துப்புரவு,

زلال (zu-lāl) *adj.* தூய, சுத்தமான, பரிசுத்தமான, தெளிந்த, கலப்பற்ற.

زمرد (zamur-rad) *n.m.* பச்சைக் கல், மரகதம்.

زمزم (zam-zam) *n.m.* மெக்காவில் உள்ள புனித கிணற்றின் பெயர்.

زمستان (zamis-tān) *n.m.* பனிக் காலம், குளிர்பருவம்.

زمین (zamin) *n.f.* நிலவுலகம், பூவுலகின் நிலப்பரப்பு, மண்ணுலகு.

زن (zan) *n.f.* பெண், மனைவி.

زنا (zinā) *n.f.* கூடாஒழுக்கம், பாலுறவு, கலவி, புணர்ச்சி.

زنبیل (zanbil) *n.f.* பை, கூடை, பணப்பை, பணம் வைப்பதற்கான தோற்பை.

زنجیر (zanjir) *n.f.* சிறைக் கட்டு, விலங்கிடு.

زندان (zindāṅ) *n.m.* சிறை, காவற்கூடம்.

زندگانی (zinda-gāni) *n.f.* உயிருடனிருத்தல், வாழ்நாள், வாழ்வு, வாழ்க்கை.

**زندگی** (zindagi) *n.f.* உயிர், தேகம், உடல், உள்ளுயிர்த்தன்மை.

**زندہ** (zindah) *adj.* உயிருள்ள, உயிரோடிருக்கிற, வாழ்நிலையிலிருக்கிற.

**زنگ** (zang) *n.m.* இரும்புத் துரு, உலோகத்துரு.

**زوال** (zavāl) *n.m.* இறக்கச் சரிவு, பிறழ்வு, நலிவு, அழிவு.

**زوج** (zauj) *n.m.* கணவன்.

**زود** (zūd) *adv.* விரைந்து, வேகமாக, குறைந்த நேரத்தில், உடனடியாக, எதிர்பாராமல்.

**زور** (zor) *n.m.* ஆற்றல், வலிமை, சக்தி, செய்திறம்.

**زہد** (zuhd) *n.m.* கடவுட்பற்று, கடமையுணர்ச்சி, தூய்மை, பண்புயர்வு.

**زہر** (zahr) *n.m.* விஷம், நஞ்சு, உயிர் போக்கும் பொருள், உயிரைக் கொல்வது.

**زیادتی** (ziyā-dati) *n.f.* வன்னடத்தை, மிகுதி, நிறைவு, மிகுதிப்பாடு, பெருக்கம்.

**زیادہ** (ziyā-dah) *adj.* அளவுக்கு அதிகமான, விஞ்சி மிகையளவான, எண்ணிக்கையுடைய, இன்னுங் கூடுதலான.

**زیارت** (ziyārat) *n.f.* யாத்திரை, வாழ்க்கைப்பயணம்.

**زیان** (ziyān) *n.m.* இழப்பு, சேதம், அழிபாடு.

**زیب** (zeb) *n.f.* அணிநயம், அணிமணி, நகை, அழகுப் பொருள்.

**زیرک** (zirak) *adj.* அறிவுள்ள, அறிவுத்திறம் வாய்ந்த, கூர்மதியுடைய, விவேகமுள்ள, புத்திசாலித் தனமுடைய, மதிநலமுடைய.

**زین** (zin) *n.m.* சேணம்.

**زینت** (zinat) *n.f.* அணிசெய்தல், ஒப்பனை செய்தல், அணி, ஒப்பனை.

**زینہ** (zinah) *n.m.* ஏணி, படிமரம்.

**زیور** (ze-var) *n.m.* அணிகலன், நகை, மணிக்கற்கள் பதித்த அணி கலன்.

## ژ

**ژاژ** (zāẓ) *n.m.* பயனற்ற பேச்சு, ஒருவிதமான ஒட்டகம்.

**ژاژخا** (ẓā-ẓakhā) *n.m.* விளையாட்டுக்காரர், அற்பச் செய்திகளில் தலையிடுபவர், கேலி கிண்டல் செய்பவர், பொறுப்பற்றவர், குதலைப்பேச்சினர்.

**ژالہ** (ẓāla) *n.m.* உறைவு, பனித்திவலை, கல்மழை, ஆலங்கட்டி மழை.

ژالہباری (ẓālah-bāri) *n.f.* புயற்காற்றோடு கூடிய ஆலங்காட்டி மழை.

ژرف (ẓarf) *adj.* கூர்மையான, மதிநுட்பமுடைய, முனைப்பான.

ژندہ (ẓin-dah) *n.m.* ஒட்டு போடப்பட்ட ஆடை.

ژولیدہ (ẓoli-dah) *adj.* திருக்குமுறுக்கான, கடுஞ்சிக்கலான, மறைபுதிரான, தெளிவற்ற.

ژیان (ẓi-yān) *adj.* அச்சுந்தருகிற, பயங்கரமான, நடுக்கந்தருகிற, திகிலுண்டாக்குகிற.

## س

سا (sā) *adj.* ஒத்தமாதிரியான, போலிருக்கிற, ஒத்த இயல்புடைய.

سابر (sābar) *n.m.* கலைமான், ஆண்மான்.

سابق (sābiq) *adj.* முந்திய, காலத்தால் முற்பட்ட, முன்னதாக உள்ள, முந்திய முதன்மையுடைய.

ساتھ (sāth) *adv.* ஒன்று சேர்த்து, ஒன்றுவித்து, ஒன்றுசேர்ந்து, ஒன்றாய், ஒருங்கே, ஒருசேர, ஒரேநேரத்தில், ஒன்றுடனொன்றாய், கூடி.

ساجن (sājan) *n.m.* காதலர், கள்ளக்காதலர், கணவர்.

ساجھا (sājhā) *n.m.* பங்கு, பங்குரிமை, சரிகூறு, கூட்டாளி.

ساحر (sāhir) *n.m.* செப்பிடு வித்தைக்காரரர், மந்திரவாதி, மயக்குந்திறன் வாய்த்தவர், மந்திரத்தால் மயக்குபவர், சூனியக்காரர், மாயாவி.

ساحل (sāhil) *n.m.* கரை, கடற்கரை, கடற்கரைப் பகுதி,

ساخت (sākht) *n.f.* கட்டுதல், கட்டுமானம், ஆக்கப்பணி, அமைப்பு, ஆக்கத் தொழில்.

سادگی (sādagi) *n.f.* எளிமை, நேர்மை.

سادھو (sādhu) *n.m.* இரவலர், பிச்சைக்காரர். *adj.* நல்லொழுக்கமுடைய, புனிதமான, நற்குணமுடைய, கடமை பேணுகிற.

سارا-ساری (sārā-sāri) *adj.* முழுமையான, குறைவற்ற, நிறைவான.

سارق (sāriq) *n.m.* கொள்ளைக்காரன், திருடன்.

سارنا (sārnā) *v.* முடித்துவிடு, நிறைவேற்று, செய்துமுடி, முடிவுக்குக் கொண்டுவா, செய்துதீர், நிறைவூட்டு.

ساس (sās) *n.f.* மாமியார், கணவனின் தாய், மனைவியின் தாய்.

ساعت (sā'at) *n.f.* கணம், வினாடி

ساق (sāq) *n.f.* கால்.

ساکھ (sākh) *n.f.* புகழ், பொதுமதிப்பு, பொதுக்கருத்து, மதிப்பீடு, நற்பெயர், மதிப்பாண்மை.

**ساگر** (sā-gar) *n.m.* கடல், மாகடல், பெருங்கடல், சமுத்திரம்.

**ساگوان** (sāg-vān) *n.f.* தேக்குமரம்.

**سال** (sāl) *n.m.* ஆண்டு.

**سالا** (sālā) *n.m.* மைத்துனன், மனைவி உடன்பிறந்தான்,

**سالار** (sālār) *n.m.* தலைவர், தலைமைப் பணியாளர், பணி முதல்வர்.

**سالوسی** (sālisi) *n.f.* வஞ்சகம், சூது, ஏமாற்று.

**سالی** (sāli) *n.f.* மைத்துனி, மனைவியின் உடன்பிறந்தாள்.

**سامع** (sā'mi) *n.m.* உற்றுக் கேட்பவர், கேட்பவர்.

**سامنا** (sāmnā) *n.m.* முன்புறம், முன்பகுதி, எதிரீடு, முற்றும் எதிரான நிலை.

**سانپ** (sānp) *n.m.* பாம்பு, பெரிய வகைப் பாம்பினம்.

**سانجه** (sānjh) *n.f.* மாலை, பொழுது சாய்வு முதல்படுக்கை வேளை வரையுள்ளநேரம், பகற்பொழுதின் கடைசிக் கட்டம்.

**سانچ** (sānch) *adj.* உண்மையான, அறிவுக்குப் பொருத்தமான.

**سانحه** (sāniha) *n.m.* நிகழ்ச்சி, முக்கியமான நிகழ்ச்சி, சம்பவம்.

**سانس** (sāns) *n.m.* மூச்சுவிடல், பெருமூச்சொலி, உயிர்ப்பு வினை.

**سایه** (sāya) *n.m.* நிழல், நிழலிடம், நிழற்படிவு, ஒதுக்கிடம்.

**سب** (sab) *adj.* முழுமையான, எல்லாம், அனைத்தும், நிறைவான, குறைபடாத, ஒவ்வொரு, ஒவ்வொன்றாக எல்லாம்.

**سبب** (sa-bab) *n.m.* காரணம், வினைமுதல், நிமித்தம், வழிவகை, வாத ஆதாரம்.

**سبت** (subbat) *n.f.* அவதூறு, பழிமொழி, வசவு.

**سبز** (sabz) *adj.* பழுக்காத, முதிராத, காயான, முழு விளைவுறாத.

**سب سے زیاده** (sabse ziyādah) *adj.* மிக முழுநிறைவான, மிகவும் குறைபாடற்ற.

**سبق** (sa-baq) *n.m.* பாடம், விரிவுரை.

**سپاری** (su-pāri) *n.f.* பாக்கு.

**سپاس** (sipās) *n.f.* புகழ்ச்சி, பாராட்டு, புகழ்தல்.

**سپر** (sipar) *n.f.* கேடயம்.

**سپنا** (supnā) *n.m.* கனவு, கனவுக் காட்சி.

**سپهر** (si-pahr) *n.m.* பிற்பகல், வானம், ஆகாயம்.

**سپید** (suped) *adj.* வெண்ணிறமான.

**ستم** (sitam) *n.m.* கொடுங்கோன்மைச் செயல், அடக்குமுறை, அநீதி, தாங்கொணாத் துன்பநிலை, முறையற்ற செயல், தீங்கிழைப்பு.

**ستھرا** (suthrā) *adj.* நேர்த்தியான, செம்மையான, கறைபடியாத, துப்புரவான, நேரிய, தெளிவான.

**سٹپٹانا** (saṭpa-ṭānā) *v.* மனத்தைக் குழப்பு, மலைப் பூட்டு.

**سجان** (sujān) *adj.* அறிவுக் கூர்மையுடைய, மதிநுட்பமுடைய, விவேகமுள்ள, அறிவுத்திறம் வாய்ந்த, கூர்மதியுடைய.

**سجانا** (sajānā) *v.* ஒப்பனை செய், அழகூட்டு, அணிசெய், அணியலங்காரம் புரி, அழகுபடுத்து.

**سجھانا** (sujhānā) *v.* குறிப்பிட்டுக் காட்டு.

**سحاب** (sahāb) *n.m.* முகில், மேகம்.

**سخن** (su-khan) *n.m.* பேச்சு, சொல்.

**سخی** (sakhi) *adj.* பெருந்தன்மையுள்ள, பரந்த மனப்பான்மையுடைய, பெருந்தகைக்குரிய, பெரும் போக்கான, தாளார மனப்பான்மையுடைய, வாரி வழங்குகிற, வரையா வள்ளன்மையுடைய.

**سدھارنا** (sidhār-nā) *v.* புறப்படு, விட்டுநீங்கு, விடை கொண்டு செல்.

**سدھارنا** (sudhār-nā) *v.* தீமையகற்று, பிழைதிருத்து, திருத்தம் செய், சீர்படுத்து, சீர்திருத்து.

**سدھانا** (sadhā-nā) *v.* பணியவை, பழக்கு, வசப்படுத்து, பழக்கி இணக்குவி.

**سر** (sar) *n.m.* தலை, மேலிடம், முதல்வர்.

**سراسر** (sarā-sar) *adv.* முழுவதும், முழுமையும்.

**سرتابی** (sartābi) *n.f.* பணியாமை, கீழ்ப்படிதலின்மை.

**سرٹیفکٹ** (sārṭifi-kaṭ) *n.m.* சான்றிதழ், நற்சான்றிதழ், நடத்தைச் சான்றுப் பத்திரம்.

**سردار** (sardār) *n.m.* தலைவன், கலகத் தலைவன்.

**سردرد** (sirdarad) *n.m.* தலைவலி.

**سرسری** (sar-sari) *n.f.* சுருக்கம், தொகுப்பு, பொழிப்பு, சுருக்கத் திரட்டு.

**سرشت** (sa-risht) *n.f.* இயல்பு, மனநிலை.

**سرشتہ** (sa-rishta) *n.m.* அலுவலகம், பணியரங்கம்.

**سرفہ** (surfa) *n.m.* இருமல், இருமல் நோய்.

**سرکار** (sarkār) *n.f.* ஆட்சி, அரசு, ஆளுநர்குழு, தலைவர், முதல்வர், கோமான்.

**سرکانا** (sar-kānā) *v.* சிறிதளவு நகர்த்து, இடம் மாற்றிவை, இடம் பெயர்வி, நிலைமாற்று, நீக்கு, விலக்கு, பதவி நீக்கு, வேறிடத்துக்கு மாற்று.

**سرگین** (sargin) *n.m.* மாட்டுச் சாணம்.

**سرناگت** (sarnā-gat) *n.m.* அகதி, சரணடைவோர்.

**سرنام** (sarnām) *adj.* புகழ்பெற்ற பலரறிந்த, குறிப்பிடத்தக்க, முதன்மையான, மிகச்சிறந்த.

**سرنامه** (sar-nāma) *n.m.* முகவரி.

**سرهانه** (sir-hāna) *n.m.* தலை யணை, கட்டிலின் தலைப் பகுதி.

**سڑا** (saṛā) *adj.* அழுகிய, சிதைந்து கெட்ட, நாட்பட்டு மக்கிய.

**سڑنا** (saṛnā) *v.* இயல்பான சிதை வுக்கு உள்ளாகு, கேடுறு, அழி வுறு, தரங்கெடச்செய், எரி, கரி, கருக்கு.

**سزا** (sazā) *n.f.* தண்டனை, தண் டத் தொகை, தண்டவரி.

**سست** (sust) *adj.* சோம்பலான, மந்தமான, சோம்பலுக்கேற்ற, எளிதில் அசையாத, மெதுவாக செல்கிற, உணர்ச்சித் திறங் குன்றிய.

**سستا** (sastā) *adj.* மலிவான, விலை குறைந்த, குறைந்த விலையில் கிடைக்கிற, எளிதாக கிடைக் கிற, சிறு மதிப்புள்ள.

**سسکارنا** (sus-kārnā) *v.* சீறு, வெறுப்புத் தெரிவி.

**سسکنا** (sisak-nā) *v.* கதறி அழு, அழுதரற்று, புலம்பு, நனை, மட்டாக்கு, எழுச்சி தணி, நடுநிலையமைதி யூட்டு.

**سطر** (satar) *n.f.* வரிசை.

**سفارت** (sifārat) *n.m.* அரசியல் தூதுவர் அலுவலகம், அரசியல் தூதுவரின் அலுவல், அரசியல் தூதுவர் வாழுமிடம், தூதுக் குழு, நிலைத் தூதுக்குழு, தூது வப் பேராளர் குழு.

**سفارش** (sifā-rish) *n.f.* பரிந்துரை, சிபாரிசு, மதிப்பு, ஆதரவுப் பண்பு, ஏற்புக்குரிய கூறு.

**سفر** (safar) *n.m.* பயணம், சுற்றுப் பயணம்.

**سفیر** (safīr) *n.m.* தூதர், ஒரு நாட் டின் சார்பாக வேற்று நாட்டு அரசவையில் நிலையாக இருக் கிற பிரதிநிதி.

**سقاوه** (saqā-va) *n.m.* குளிக்கும் அறை.

**سقر** (saq-qar) *n.m.* நரகம், பழி யாவிகள் தண்டனை நுகரும் உலகம்.

**سقط** (saqat) *n.m.* தவறு, பிழை பாடு, தவறுசெய்தல், தவறான செயல்.

**سکات** (sukāt) *n.f.* அரவமின்மை, சந்தடியின்மை, பேசாமை.

**سکتر** (sikat-tar) *n.m.* செயலாளர், செயற்பொறுப்பாளர்.

**سکنا** (saknā) *v.* தகுதி வாய்ந்திரு, தேவையான ஆற்றல் பெற்றிரு, திறமை பெற்றிரு, தெரிந்திரு.

**سکوت** (sakūt) *n.m.* அரவமின்மை, சந்தடியின்மை, பேசாமை.

**سکھانا** (sukhā-nā) *v.* உலர்த்து, வற்று, வாட்டு.

**سکھی** (sukhi) *adj.* ஆறுதலளிக்கக் கூடிய, மகிழ்ச்சி வாய்ந்த, அமைதியான.

**سگ** (sag) *n.m.* நாய், வேட்டைநாய்.

**سگی** (sagi) *adj.* மெய்யான, இயல் பான, போலியல்லாத, செயற் கையல்லாத.

**سلاح** (silāh) *n.f.* போர்க்கவசம், போர்க்கலங்கள்.

**سلام** (salām) *n.m.* வணக்கவுரை, பிரிவுரை, இன்புகழ்ச்சியுரை, ஆசாரமொழி.

**سلامت** (salā-mat) *adj.* முழுநலம் வாய்ந்த, முழுமையான, முழு நிறைவான, தீங்குறாத, சேத மடையாத, பத்திரமான, பாது காப்பளிக்கிற.

**سلانا** (silānā) *v.* தை, தையலிடு, தைத்து மூட்டிடு.

**سلانا** (sulānā) *v.* உறக்கத்தில் ஆழ்த்து, தூங்கச்செய்.

**سلطان** (sultān) *n.m.* பேரரசன், மன்னர்மன்னன்.

**سلطنت** (sal-tanat) *n.f.* பேரரசு, வல்லரசு, பேரரசு ஆணைக் குட்பட்ட நில வெல்லை.

**سلگانا** (sul-gānā) *v.* நெருப்புப் பற்றவை, விளக்கு ஏற்று, ஒளிரச்செய்.

**سلم** (salam) *n.m.* அமைதி, சமா தான நிலை, இடரிலா நிலை.

**سلنا** (salnā) *v.* குத்தி ஊடுருவு, துளைத்து உட்செல்.

**سلوتری** (sa-lotri) *n.m.* கால் நடை மருத்துவர்.

**سلیس** (salis) *adj.* எளிய, கடுமை யற்ற, கடுமுயற்சி தேவைப் படாத, எளிதில் விளங்குகிற.

**سم** (sam) *n.m.* நஞ்சு, உயிர் போக்கும்பொருள்.

**سم** (sum) *n.m.* குளம்பு.

**سما** (samā) *n.m.* பருவகாலம், பரு வம், வேளை, உரிய தறுவாய்.

**سمان** (samān) *adj.* ஒரு நிலைப் பட்ட, ஒருவகைப்பட்ட, பண் பொத்த, உருவொத்த.

**سمجھ** (samajh) *n.f.* கருக் கொள் ளுதல், கருதுதல், கருத்து, கருத்தாற்றல்.

**سمجھانا** (samjhā-nā) *v.* புரியும் படிசொல், விளக்கு, அறி வூட்டு, நுணுக்க விரிவாகத் தெரிவி, எச்சரிக்கைசெய், முன் னறிவிப்புச் செய்.

**سمندر** (samun-der) *n.m.* சமுத் திரம், கடல், பெருங்கடல்.

**سميت** (samet) *adv.* துணையோடு, ஒன்றாய், ஒருங்கே, ஒரு சேர.

**سن** (sin) *n.m.* வயது.

**سن** (sun) *adj.* மரத்துப்போன, விறைத்த, உணர்ச்சியிழந்த.

**سنار** (sunār) *n.m.* பொற்கொல்லர்.

**سنت** (sun-nat) *n.f.* தோல் நுனியிதழ் அகற்றும் வினை, சுன்னத்து விழா, நபியின் வழி முறை செயல்கள்.

**سند** (sanad) *n.f.* சான்றிதழ், பல்கலைக்கழகப்பட்டச் சான்றிதழ், கல்லூரிப்பட்ட சான்றிதழ்.

**سنسان** (sun-sān) *adj.* கவர்ச்சியற்ற, பாழுந்தோற்றமுடைய.

**سنک** (sanak) *n.f.* தற்போக்கெண்ணம், விளையாட்டு மனப்போக்கு, வெறி, மூளைக் கோளாறு, தற்காலிகப் பைத்தியம்.

**سنکنا** (sinaknā) *v.* மூச்சுவிடு, நெடு மூச்சுவிடு.

**سنگار** (singār) *n.m.* அணி செய்தல், ஒப்பனை செய்தல், அணி ஒப்பனை, மேனி ஒப்பனை, சிங்காரிப்பு.

**سنگیت** (sangit) *n.m.* இசை, இன்னிசை, பாடல், நடனம், ஆடல்.

**سواگت** (svā-gat) *n.m.* வரவேற்றல், வரவேற்பு, வரவேற்பளிப்பு.

**سوائے** (siwā'i) *conj.* என்றாலல்லாமல், இல்லாவிடில், ஒழிய.

**سوجن** (sūjan) *n.f.* வீக்கம், வீங்குதல், வீங்கிய நிலை, உப்புதல்.

**سوجھنا** (sūjh-nā) *v.* கண்ணுக்குத் தோன்று, பலர் முன் காட்சியளி, முறைப்படி முன்னிலைப்படு, வெளிப்படு, வெளிப்படையாகப் புலப்படு.

**سوچ** (soch) *n.m.* எண்ணம், கருத்து, சிந்தனை, ஆராய்வு, ஆற்றல், நினைவு.

**سود** (sūd) *n.m.* ஆதாயம், இலாபம், பயன், நன்மை.

**سودا** (saudā) *n.m.* வாணிகச் சரக்கு, விற்பனைப் பொருள்கள், வாணிகத் தொடர்பு, ஈடுபட்ட தொழில், நல்ல கொள்முதல்.

**سور** (sūar) *n.m.* பன்றி.

**سوراخ** (su-rākh) *n.m.* துளை, புழை, குழி.

**سورج** (sūraj) *n.m.* ஞாயிறு, கதிரவன், சூரியன்.

**سورداس** (sūr-dās) *n.m* பார்வையற்ற மனிதன், கண்ணற்ற மனிதன், குருடன்.

**سوکھا** (sūkhā) *adj.* வறண்ட, வற்றிப்போன, ஈரமில்லாத, ஈரம் குறைவான.

**سوم** (sūm) *n.m.* [illegible]ராசை உடையவன், [illegible]

سونا (sonā) *n.m.* பொன், தங்கம், செல்வம்.

سونا (sonā) *v.* உறக்கத்தில் ஆழ்ந்திரு, தூங்கிவிடு, தூங்கிக்கழி.

سونپنا (saunp-nā) *v.* நம்பிக்கையாகவை, வழங்கு, முறைப்படி ஒப்படைத்து விடு, காக்கும் பொறுப்பை ஒப்படை.

سوندھی (sondhi) adj. நறுமணமுள்ள.

سونگھنا (sūn-ghnā) *v.* மோந்து பார், நாற்றம் உணர், மணம் உட்கொள், நறுமணம் உள்ளிழு.

سویرا (save-rā) *n.m.* விடியல், முற்பகல், காலை, காலைநேரம்.

سیاست (siyāsat) *n.m.* ஆட்சி, ஆட்சிமுறை, அரசு.

سیاستدان (siyāsat-dān) *n.m.* அரசியல்வாதி, அரசியல் அறிஞர், அரசியல் வல்லுநர்.

سیب (seb) *n.m.* ஆப்பிள் பழம்.

سیتلا (sitlā) *n.f.* பெரிய அம்மை நோய், வைசூரி.

سیرت (sirat) *n.f.* பண்பு, குணம், தனியியல்பு, பண்புத்தரம், பண்புவகை.

سیف (saif) *n.f.* வாள், குத்துவாள், உடைவாள்.

سیک (sek) *n.m.* ஒற்றடம் கொடுத்தல்.

سیم (sim) *n.m.* வெள்ளி.

سینا (senā) *v.* முட்டை குஞ்சு பொரிக்கவை, அடைகா, குஞ்சு பொரி.

سینگ (sing) *n.m.* விலங்குகளின் கொம்பு.

سینہ (sina) *n.m.* இருதயம், மார்பு.

سیوا (sevā) *n.f.* ஊழியம், சேவை, வழிபாடு.

## ش

شا (shā) *adj.* மனநிறைவோடு கூடிய, மனமகிழ் வோடிருக்கிற, நல்லார்வம் கொண்டுள்ள, எழுச்சிதருகிற, இன்பமாக, விருப்பமுள்ள.

شاب (shāb) *n.m.* இளமை, இளமைப்பருவம்.

شاخ (shākh) *n.f.* கிளை, கூறு, பிரிவு.

شادی (shādi) *n.m.* திருமணம், திருமண நிகழ்ச்சி, விழா.

شادی کرنا (shādi karnā) *v.* மணங்கொள், மணஞ்செய், மணஞ்செய்து கொடு.

شارح (shārih) *n.m.* உரையாசிரியர், உரைவிளக்கம் செய்பவர், கருத்துரையாளர், விளக்கவுரையாளர்.

شارع (shāri') *n.m.* பிரதானசாலை, பெருவழி, நெடுஞ்சாலை.

**شاش** (shā l) *n.m.* சிறுநீர், மூத்திரம்.

**شاشدان** (shāsh-dān) *n.m.* சிறுநீர்க்கலம், சிறுநீர்க்கு ஒதுக்கிடம்.

**شاطر** (shātir) *n.m.* சதுரங்க ஆட்டக்காரர். *adj.* தந்திரமுடைய, சூழ்ச்சித் திறமுடைய, வஞ்சகமான.

**شافع** (shāfe') *n.m.* வழக்கறிஞர், ஆதரித்து வாதாடுபவர்.

**شافى** (shāfi) *adj.* குணமடைய, உடல் நலமடைய.

**شاق** (shāq) *adj.* கடுமைமிக்க, கண்டிப்புமிக்க, கடூரமான, விட்டுக் கொடுப்பற்ற.

**شاكر** (shākir) *adj.* நன்றியுடைய, நன்றியறிதலுள்ள, போதுமென்றமைந்த, ஏற்றுக் கொள்ளத் தக்க மனநிறைவு கொண்ட, மகிழ் வமைதியுடைய.

**شال** (shāl) *n.f.* சால்வை, போர்வை.

**شام** (shām) *n.f.* மாலை, பொழுது சாய்வு முதல் படுக்கை வரையுள்ள நேரம்.

**شامل** (shāmil) *adj.* இணைக்கப்பட்ட, தொடர்பான, பிணைப்புடைய, உறவுத் தொடர்புடைய.

**شاملات** (shāmi-lāt) *n.m.* பொது நிலம், பொதுவெளி.

**شان** (shān) *n.m.* தேன் கூடு.

**شاہد** (shāhid) *n.m.* சான்று, சான்றுரை, சாட்சி, சாட்சியம்.

**شاہنشاہ** (shāhan-shāh) *n.m.* பேரரசன்.

**شاہین** (shā-hin) *n.m.* வல்லூறு, இராசாளி.

**شايد** (shā-yad) *adv.* ஒருவேளை, இயலுமாயின், இயலுமளவில், கூடுமாயின், கூடியவரையில்.

**شائع** (shāi'e') *adj.* வெளியிடப்பட்ட.

**شباب** (sha-bāb) *n.m.* வாழ்வில் மலர்ச்சி, வாழ்வில் முழு நிறைவு.

**شبان** (sha-bān) *n.m.* ஆயன், ஆட்டிடையன்.

**شباہت** (shabā-hat) *n.f.* ஒப்பு, ஒப்புடமை, போன்றிருத்தல், ஒத்திருத்தல், ஒத்ததன்மையுடைய, ஒரே வகைமை.

**شبہ** (shu-bah) *n.m.* ஐயுறவு, அயிர்ப்பு, அரைகுறை நம்பிக்கை, அவநம்பிக்கை, உறுதியற்ற நிலை.

**شتر** (shutur) *n.m.* ஒட்டகம்.

**شتربان** (shutur-bān) *n.m.* ஒட்டகம் ஓட்டுபவர்.

**شجر** (shajar) *n.m.* தாவரம், செடி, மரம்.

**شدت** (shid-dat) *n.f.* கொடுமை, அநீதி, அட்டூழியம், தாங்கொணாத் துன்பநிலை.

**شدنی** (shu-dani) *n.f.* நிகழ்ச்சி, சம்பவம்.

**شدید** (sha-did) *adj.* கரடு முரடான, கடுப்பான, உறுத்தலான, இனிமையற்ற.

**شراب** (sha-rāb) *n.f.* சாராயம், மது.

**شراده** (sha-rādh) *n.f.* ஈமக் கடன், ஈமச்சடங்கு.

**شرارت** (sha-rārat) *n.f.* குறும்பு, குழந்தைகளின் விளையாட்டு நச்சரிப்பு, தொந்தரவு, தொல்லை.

**شرافت** (sha-rāfat) *n.f.* உயர் பண்பு, பெருந்தன்மை, பண்புநயம், பண்பட்ட பழக்க வழக்க முறை.

**شرط** (shart) *n.f.* ஒப்பந்தம், உடன்படிக்கை, ஒப்பந்த விதியின் வரையறைக் கூறு.

**شرم** (sharm) *n.f.* வெட்கம், நாணக்கேடு, மானக்கேடு, இகழ்.

**شروع** (shurū') *n.m.* தொடக்கம், செயலாற்றத் தொடங்குதல்.

**شریعت** (shari'at) *n.f.* நேர்மை, முறைமை, மதச்சட்டம், முஸ்லீம் மதச்சட்டம்.

**شست** (shast) *n.f.* இலக்கு, குறி, நோக்கம், குறிக்கோள்.

**شفاعت** (shafā'at) *n.f.* கெஞ்சுதல், பரிவோடு வினாவுதல், பரிந்துரை, சிபாரிசு.

**شفاعت کرنا** (shafā'at karnā) *v.* தொடர்புபடுத்து, நடுவராயிரு, ஒருவராயிருந்து இணக்குவி, இடையீட்டாளராகச் செயலாற்று.

**شفاف** (shaf-fāf) *adj.* தெள்ளத் தெளிந்த, மறைப்பற்ற, எளிதிற் புலப்படுகிற, தெள்ளத் தெளிவான.

**شفتالو** (shaf-tālū) *n.m.* பழவகை, கனிமரவகை.

**شفیع** (shafi') *n.m.* புரவலர், காப்பாளர்.

**شفیق** (sha-fiq) *adj.* உள்ளன்புள்ள, பாசமுடைய, பற்றார்வமிக்க, இரக்கங்காட்டுகிற, தயையுள்ள.

**شق** (shaq) *n.m.* திடீர்வெடிப் போசை, இடி ஓசை.

**شقی** (shaqi) *adj.* கொடுமையான, துன்புறுத்துகிற, துன்புறுத்தி மகிழ்ச்சியடைகிற, இரக்கமற்ற.

**شک** (shak) *n.m.* ஐயுறவு, ஐயப்பாட்டுநிலை, உறுதியின்மை, திண்ணமிலா நிலை.

**شکار** (shikār) *n.m.* வேட்டையாடுதல், வேட்டை.

**شکایت** (shikā-yat) *n.f.* முறையீடு, குறையீடு, குறை தெரிவிப்பு, குற்றச்சாட்டு.

**شکایت کرنا** (shikā-yat karnā) *v.* முறையிடு, குறை தெரிவி,

குற்றங் கூறு, மனக்குறை உணர்த்து.

**شکر** (shukr) *n.m.* நன்றி, நன்றி தெரிவிப்பு.

**شکرکرنا** (shukr karnā) *v.* நன்றி செலுத்து, நன்றி தெரிவி.

**شکر** (shak-kar) *n.f.* சர்க்கரை.

**شکست** (shikast) *n.f.* தோல்வி, வெற்றி பெறாமை.

**شکم** (shikam) *n.m.* வயிறு, வயிற்றறை.

**شکمی** (shikmi) *adj.* கீழ் நிலைப் பட்ட, கீழ்ப்படியான, துணை மையான, இரண்டாம் படியான.

**شکن** (shikan) *n.f.* சுருள்வு, சுருண்ட நிலை, மடிப்பு, மடிப்புக்கோடு, சுருக்கம்.

**شکیب** (shikeb) *n.f.* அருளிரக்கம், பொறுமை.

**شکیل** (shakil) *adj.* அழகான, செவ் விய தோற்றமுடைய, சிங்கார கவர்ச்சி வாய்ந்த.

**شلوار** (shalvār) *n.m.* காற்சட்டை, தளர் கால்சிராய்.

**شمع** (sham'a) *n.m.* விளக்கு, மெழுகுவத்தி.

**شنا** (shinā) *n.f.* நீச்சல், மிதப்பு.

**شناور** (shinā-var) *n.m.* நீந்துபவர்.

**شناخت** (shi-nākht) *n.f.* அடையாளமறிதல்.

**شوالا** (shi-vālā) *n.m.* கோயில்.

**شوب** (shob) *n.m.* துவைத்தல், கழுவுதல், ஆடை துவைப்பு.

**شور** (shor) *n.m.* அழுகை, அமளி.

**شوروغل** (shorogul) *n.m.* கூச்சல், முழக்கம், இரைச்சல், வெறுப் பான ஒலி.

**شوکت** (shau-kat) *n.f.* பகட்டார வாரம், ஆடம்பரம்.

**شوہر** (shau-har) *n.m.* கணவன்.

**شہرت** (shuhrat) *n.f.* உயர்வு, மேம் பாடு, சிறப்பு, புகழ்பெற்றிருத் தல், வதந்தி.

**شے** (shai) *n.f.* எண்ணத்தக்கப் பொருள், உருப்படி.

**شیر** (sher) *n.m.* சிங்கம், புலி, வீரர், கதைத் தலைவன்.

**شیرنی** (sherni) *n.f.* பெண் சிங்கம், பெண் புலி, வீர அணங்கு, கதைத் தலைவி.

**شیطان** (shai-tān) *n.m.* பிசாசு, தீய ஆவி.

## ص

**صابون** (sābūn) *n.m.* சோப்பு, சவர்க்காரக்கட்டி, சவர்க்காரம்.

**صاحب** (sāhib) *n.m.* திருவாளர், ஐயா, தலைவர், நற்குடியாளர்.

**صاحبہ** (sāhiba) *n.f.* முதல்வி, தலைவி, குடும்பத்தலைவி.

**صادر** (sādir) *adj.* வழங்கப்பட்ட, கொடுக்கப்பட்ட.

**صادق** (sādiq) *adj.* உண்மையான, அறிவுக்குப் பொருத்தமான, நன்றியுணர்வுடைய.

**صادق آنا** (sādiq-ānā) *v.* ஒரு மனப்படு, உடன்படு, ஒப்புக் கொள்.

**صاف** (sāf) *adj.* தூய, பரிசுத்தமான, நேர்வழி (மரபான.

**صافی** (sāfi) *n.f.* துடைப்பான், துடைப்பத் தூரிகை, தூசி துடைக்கும் துணி,

**صانع** (sāne') *n.m.* கலை வினைஞர், படைப்பவர்.

**صباحت** (sabāhat) *n.f.* அழகு, நேர்த்தி, நய நாகரிகம்.

**صبر** (sabar) *n.f.* விடாமுயற்சி, பொறுமை, இடையறா ஊக்கம்.

**صبرکرنا** (sabar karnā) *v.* தாங்கு, பொறு, துன்பத்தை ஏற்றமைவுறு, பணிவுடன் மேற்கொள்ளு.

**صبوری** (saburi) *n.f.* பொறுமை, பொறுத்துக் கொள்ளும் தன்மை.

**صحت** (sihat) *n.f.* உடல் நலம், உடல் நிலை, ஆரோக்கியம், நோயற்ற நிலை.

**صحت مند** (sihat mand) *adj.* உடல் நல முடைய, நலமார்ந்த.

**صحن** (sahn) *n.m.* வீட்டோடு சேர்ந்த முற்றம், சுற்றுக்கட்டு, வெளியிடம்.

**صدا** (sadā) *n.f.* கூச்சல், இரைச்சல், வெறுப்பான ஒலி.

**صدارت** (sadā-rat) *n.f.* தலைவர் பதவி.

**صداقت** (sadā-qat) *n.f.* நேர்மை, உண்மை, கண்ணியம்.

**صدف** (sadaf) *n.f.* முத்து, கிளிஞ்சற் சிப்பி.

**صدمہ** (sadma) *n.m.* அதிர்ச்சி, வன் தாக்கு, திடீர் அடி.

**صدیق** (sid-diq) *adj.* உள்ளார்ந்த, மனமார்ந்த, நேர்மை வாய்ந்த, உண்மையான, பாசாங்கற்ற.

**صراحی** (surāhi) *n.f.* மூடியுடைய கைப்பிடியில்லாத கிண்ணம்.

**صراط** (sirāt) *n.f.* நேரடியான சாலை.

**صرف** (sirf) *adj.* தூய, பரிசுத்தமான adv. மட்டும், தான், ஒரு வழியாக.

**صرف** (sarf) *n.m.* செலவுத் தொகை, செலவழிவு, செலவினம்.

**صرف کرنا** (sarf karnā) *v.* செலவிடு, பொருள்கள் வகையில் பயன்படுத்தி தீர், ஈடுபடுத்திச் செலவழி.

**صریح** (sarih) *adj.* வெளிப்படையான, தெளிவான.

**صف** (saf) *n.f.* வரிசை.

**صفات** (sifāt) *n.f.* நல்ல பாங்கு, நல்ல பாணி.

**صفاتی** (sifāti) *adj.* செயற்கையான, முயன்று பெற்ற, மனிதனால் செய்யப்பட்ட, போலியான.

**صفیل** (safil) *n.f.* அரணமைத்தல், வலுப்படுத்தல்.

**صلا** (salā) *n.f.* அழைப்பிதழ், அழைப்புத்தாள்.

**صلاحیت** (salāhi-yat) *n.f.* தூய்மை, புனிதத்தன்மை, கற்புடைமை.

**صلادینےوالا** (salah dene valā) *n.m.* ஆலோசகர், உறுபொருள் உரைப்போர், சமயபோதகர், சமய சொற்பொழிவாளர்.

**صم** (sum) *adj.* செவிடான, காது மந்தமான, கேட்க விருப்பமில்லாத, கவனிக்காத.

**صناعت** (sinā'at) *n.f.* தொழில், வாழ்க்கைத் தொழில், வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட பணித்துறை.

**صندوق** (san-dūq) *n.m.* பெட்டி, தனி அறை கூடம், தங்கு மனை.

**صورت** (sūrat) *n.f.* முகம், முகத்தோற்றம், முகமாறுபாடு, முக பாவம்.

**صیاد** (sai-yād) *n.m.* வேடன், வேட்டையாடுபவன்.

**صیانت** (siyā-nat) *n.f.* பாதுகாப்பு, ஆதரவு.

**صیغه** (sighah) *n.m.* கூறு, துறை, இலாகா.

**صیف** (saif) *n.f.* கோடைக்காலம், மே மாதம் முதல் ஜூலை மாதம் வரையுள்ள முது வேனிற் பருவம்.

## ض

**ضابطگی** (zāb-tagi) *n.f.* ஒழுங்கு, முறைமை.

**ضابطه** (zābi-tah) *n.m.* சட்டம், சட்டத்தொகுதி, சட்டக் கட்டுப்பாடு, *adj.* முறைப்பட்ட, விதிக்கு இணக்கமான, சொல்லொழுங்குடைய.

**ضامن** (zāmin) *n.m.* பிணையம், பிணைப்பொருள்.

**ضبط** (zabt) *n.m.* கட்டுப்பாடு, கட்டுப்பாட்டு ஒழுங்கு, கண்டிப்பு, ஒழுங்குமுறை.

**ضبط کرنا** (zabt karnā) *v.* அடக்கு, கட்டுப்படுத்து, இயக்கு, ஆதிக்கம் செலுத்து, அடக்கிவை.

**ضحا** (zuhā) *n.m.* காலைச் சிற்றுண்டி நேரம்.

**ضخامت** (zakhā-mat) *n.f.* பேருருவம், பிரிவுத் தொகுதி, பல

ஏடுகளடங்கிய முழுக் கட்டட அடங்கலேடு.

**ضد** (zid) *n.f.* அடம், பிடி வாதம், மூர்க்கத்தனம், விடாப்பிடியாக இருக்கும் இயல்பு.

**ضد کرنا** (zid-karnā) *v.* விடாது வற்புறுத்து, விடாப்பிடியாயிரு, விடாது தொடர்.

**ضر** (zar) *n.m.* இழப்பீடு, மதிப் பிழப்பு.

**ضرب** (zarb) *n.f.* பெருக்கல், ஓர் எண்ணை மற்றோர் எண்ணால் பெருக்கும் கணக்கியல் முறை.

**ضرر** (zarar) *n.m.* இழப்பு, நட் டம், இழந்த பொருள்.

**ضرور** (zarūr) *adj.* இன்றியமையாத, அவசியமான, கட்டாயத் தேவை யான, தவிர்க்க முடியாத, தீராது வேண்டப்படுகிற *adv.* கட்டாய மாக, உறுதியாக, ஐயமற.

**ضرورت** (zarū-rat) *n.f.* இன்றியமை யாத கூறு, கட்டாயத்தேவை.

**ضروری** (zarūri) *adj.* தேவைப் படுகிற, சூழ்நிலைகளிடையே தேவைப்படுகிற.

**ضرورتاً** (zarū-ratan) *adv.* தவிர்க்க முடியாதபடி, கட்டாயமாக, இன்றியமையாநிலையில்.

**ضمانت** (zamā-nat) *n.f.* பாதுகாப்பு, பிணையம்.

**ضمانت دینا** (zamā-nat denā) *v.* பிணையம் ஏற்படுத்திக்கொடு, பிணையம் அளி, பிணையம் தருவி.

**ضیاء** (ziyā) *n.f.* மினுக்கும் ஒளி.

**ضیافت** (ziyā-fat) *n.f.* விருந்து, பொது விருந்து, கூடியிருந்து உண்ணும் நிறைவள உணவு, விருந்து தூப்பாடு, விழா விருந்து.

**ضیافت کرنا** (ziyā-fat karnā) *v.* விருந்து செய், விருந்தளி, விருந்து நடத்து.

## ط

**طاب** (tāb) *adj.* மனதுக்குகந்த, பிடித்தமான, ஒத்த, ஒத்துக் கொள்கிற.

**طاس** (tās) *n.m.* குழிவான கிண் ணம்.

**طاعت** (tā'at) *n.f.* கீழ்படிவு, அடக்க ஒடுக்கம், ஆணைக் கடங்கி நடத்தல்.

**طاق** (tāq) *n.m.* சன்னல், மேல் வளைவு சுவரில் படுக்கை யாகப் பொருத்தப்பட்ட அல மாறி (அ) பரண்.

**طاقت** (tāqat) *n.f.* வல்லமை, பேருடலாற்றல், மனஆற்றல், வலிமை, மனத்திண்மை, துணி வாற்றல்.

**طاقت ور** (tāqat-var) *adj.* வல் லமை மிக்க, உடலாற்றல் சான்ற, துணிவாற்றல் வாய்ந்த, திரண்ட, பருத்த, செறிவு மிக்க, ஊக்க மிக்க.

**طالب** (tālib) *n.m.* மனுதாரர், பணிக்கு மனுச்செய்பவர், தேர்வு நாடுபவர்.

**طالح** (tāleh) *adj.* பழிசேர்ந்த, பழிபாவத்துக்கஞ்சாத, கடுமை வாய்ந்த, ஒழுக்கக்கேடான, அநீதியான.

**طاؤس** (tāūs) *n.m.* மயில்.

**طائر** (tā'ir) *n.m.* பறவை, குருவி.

**طبابت** (tabā-bat) *n.f.* மருத்துவத் தொழில்.

**طبعی** (taba'i) *adj.* இயற்கைசார்ந்த, இயற்கையைப் பின்பற்றிய.

**طبق** (tabaq) *n.m.* தட்டு, தாம்பாளம்.

**طبل** (tabal) *n.m.* முரசு.

**طبیب** (tabib) *n.m.* மருத்துவர், நோய் தீர்ப்பவர்.

**طپش** (tapish) *n.f.* அமைதியின்மை, மனஉலைவு, கடுந்துன்பம், உடல் நலமின்மை.

**طراوت** (tarā-vat) *n.f.* பசுமை, சுறுசுறுப்பு.

**طرب** (tarab) *n.f.* களிப்பு, பெருமகிழ்வு.

**طرف** (taraf) *n.f.* பக்கம், திசை.

**طریق** (tariq) *n.m.* வழக்கம், மரபு, முறை, வழி, பாணி.

**طعام** (ta'ām) *n.m.* உணவு.

**طفل** (tifl) *n.m.* குழந்தை, சிறுவன், சிறுமி.

**طل** (tall) *n.f.* பனித்திவலை, பனித்துளி.

**طلاق** (talāq) *n.f.* சட்டப்படியான மணவிலக்கு, விவாகரத்து.

**طلاق دینا** (talāq denā) *v.* திருமண விலக்கு செய், மண விலக்குச் செய்து பிரி.

**طلب** (talab) *n.f.* கோரிக்கை, உரிமைக் கோரிக்கை, வேண்டுகோள்.

**طلب کرنا** (talab karnā) *v.* வேண்டு, உரிமைகோரு, உரிமையுடன் கேள், வற்புறுத்திக்கேள்.

**طلسم** (tilism) *n.m.* மாயவித்தை, மந்திரம், வியத்தகு விளைவுகளைத் தோற்றுவிக்கும் ஆற்றல்.

**طمانچہ** (tamān-cha) *n.m.* அறை, உள்ளங்கை அடி.

**طمنچہ** (taman-cha) *n.m.* கைத்துப்பாக்கி.

**طنبو** (tanbū) *n.m.* கூடாரம், தற்காலிகக் களமேடை.

**طوالت** (tavā-lat) *n.f.* நீட்டம், நீட்டிப்பு, தொடர்ச்சி.

**طور** (taur) *n.m,* முறைமை, ஒழுங்கு, நிகழ்முறை.

**طوطا** (totā) *n.m.* கிளி.

**طوفان** (tū-fān) *n.m.* புயல், மழை கலந்த சூறாவளி, சூறாவளி, பொங்கி வழிந் தோடும் நீர்.

**طول** (tūl) *n.m.* நிரைகோடு, நீளம், நீளப்பாங்கு.

**طويل** (tavil) *adj.* நீளமான, நெடிய, நெட்டையான.

**طيار** (tai-yār) *adj.* உடனடியாகப் பயன்படுத்தத்தக்க, ஆயத்த மான, செயல் தகுதி நிலையில் உள்ள.

**طيارى** (tai-yāri) *n.f.* ஆயத்தநிலை, தயாரானநிலை, முன்னேற்பாடு.

**طيش** (taish) *n.m.* கோபம், சீற்றம், சினம்.

## ظ

**ظالم** (zālim) *n.m.* கொடுங்கோலன், தன்னாணவக்காரர், அடக்கு முறையாளர்.

**ظاهر** (zāhir) *adj.* தெளிவான, ஐய மற்ற, தெளிவாகத் தெரிகிற, தெளிவாக உணரப்படத்தக்க.

**ظرافت** (zarā-fat) *n.f.* பண்பட்டத் தன்மை, நற்பண்பு, நல்லார்வம்.

**ظرف** (zarf) *n.m.* பாத்திரம், குவளை.

**ظريف** (zarif) *adj.* வேடிக்கையான, களிப்புள்ள, விளையாட்டான, மகிழ்வுறத்தக்க, நகைச்சுவை யுள்ள.

**ظفر** (zafar) *n.m.* வெற்றி, வெற்றிச்சிறப்பு, வெற்றி அணி வகுப்பு.

**ظلم** (zulm) *n.m.* நேர்மைக் கேடு, அநீதி, முறையற்ற செயல், உரிமைப்பறிப்பு, தீங்கிழைப்பு.

**ظهر** (zohr) *n.m.* நண்பகல்.

**ظهير** (zahir) *n.m.* தோழன், உட னிருப்பவன், நண்பன், கூட் டாளி.

## ع

**عابد** ('ābid) *n.m.* வழிபடுபவர், போற்றுபவர்.

**عابر** ('ābir) *n.m.* பயணர், பயணி, பிரயாணஞ் செய்பவர்.

**عاج** ('āj) *n.m.* தந்தம்.

**عاجز** ('ājiz) *adj.* இயலாத, ஏலாத.

**عادت** ('ādat) *n.f.* பழக்கம், மனப் பாங்கு, வளரும் வகை (அ) முறை.

**عادل** ('ādil) *adj.* நடத்தை வகை யில் நேர்மையான, முறைதவ றாத, நேரிய, உரிமை வகையில் நியாயமான, அளவு வகையில் சரியான.

**عارض** ('āriz) *n.m.* இடைஞ்சல், இடையூறு, தடங்கல், தடை.

**عارف** ('ārif) *n.m.* முனிவர், துறவி, பக்தர்.

**عاری** ('āri) *adj.* உடையற்ற, பார் வைக்குத் தெரிகிற.

**عاریت** ('āriyat) *n.f.* கொடுக்கும் கடன் தொகை, கடனுதவித் தொகை, இரவல், கடன் கொடுப்பு.

**عازم** ('āzim) *adj.* உறுதிகொண்ட, நெஞ்சுரங்கொண்ட, பின்வாங் காத, தயக்கமற்ற.

**عاصم** ('āsim) *adj.* புனித, புனித மான, திருநிலையுடைய.

**عاصی** ('āsi) *adj.* குற்ற இயல் புள்ள, குற்றத் தொடர்பான, குற்றத் தண்டனைக்குரிய.

**عافیت** ('āfiyat) *n.f.* தீங்கின்மை, இடரிலாநிலை, எளிமை நிலை, தடைகாப்பு நிலை.

**عاق** ('āq) *adj.* பிடிவாதமுடைய, அடம் பிடிக்கிற, மூர்க்கத்தன மிக்க, வளைந்து கொடுக்காத.

**عاقبت** ('āqibat) *n.f.* ஊகம், ஊகித்தல், அனுமானம், கருத் தளவை, முடிவாகப் பெற்ற பொருள், முடிவு.

**عاقل** ('āqil) *adj.* செயலறிவுத்திறம் வாய்ந்த, செயல் நுட்பமறிந்த, விவேகமுடைய, யூகமுடைய.

**عالم** ('ālim) *n.m.* புலவர், கற்றறி வாளர், அறிஞர்.

**عالم** ('ālam) *n.m.* உலகம், உலகு, நாடு.

**عبادت** ('ibādat) *n.f.* வழிபாடு, வணக்கம், பூசனை, இறை யருள் வேண்டுதல், வேண்டு கோள், முறையீடு, விண்ணப் பம்.

**عبادت کرنا** ('ibādat karnā) *v.* வழி படு, தொழு, வணங்கு, பூசித் துப் போற்று.

**عجالت** ('ajālat) *n.f.* விரைவு, பர பரப்பு, அவசரம், பதற்றம்.

**عجب** ('ajab) *adj.* அறிய ஆர்வ முள்ள, அரிய, அரும் பொரு ளான, அபூர்வமான, அடிக் கடி நிகழாத.

**عجز** ('ajz) *n.m.* பணிவமைதி வாய்ந்த, வளைந்து கொடுக் கும் பாங்குள்ள, இணங்கிப் போகிற.

**عجلت** ('ujlat) *n.m.* விரைவு, வேகம், வேக விகிதம்.

**عدالت** ('adālat) *n.f.* சட்டத்துறை, நீதிமன்ற நடவடிக்கைத் துறை.

**عدد** ('adad) *n.m.* எண்ணிக்கை.

**عذاب** ('azāb) *n.m.* சித்திரவதை, கடுந்துயரம், படுவேதனை.

**عذر** ('uzr) *n.m.* மறுப்பு, எதிருரை, சாக்குப்போக்கு.

**عذرا** ('azrā) *n.f.* கன்னி.

**عرض** ('arz) *n.f.* கோரிக்கை, வேண்டுகோள், முறையீடு.

**عرض کرنا** ('arz karnā) *v.*

வேண்டு, கோரு, வேண்டு கோள் செய், முறையிடு, வேண் டிக்கொள்.

عرضی ('arzi) *n.f.* விண்ணப்பத் துக்குரிய செய்தித் தொகுதி.

عرضی دینا ('arzi denā) *v.* வேண்டு கோள் விடு, விண்ணப்பஞ் செய்து கொள், மனுச்செய்.

عرف ('urf) *n.m.* புனைபெயர், மறு பெயர்.

عرفی ('urfi) *adj.* நன்கு அறிமுக மான, நெருங்கிய நட்புடைய, நன்றாகத் தெரிந்த.

عرق ('araq) *n.m.* ரசம், சாறு.

عروس ('arūs) *n.m.* புதுமணப் பெண்.

عرس ('urs) *n.m.* திருமணம், திரு மண நிகழ்ச்சி, திருமணவிருந்து.

عز ('azz) *n.m.* புகழ், கீர்த்தி, சிறப்பு, மேம்பாடு, மிகுநலம், முதன்மை நிலை.

عزا ('azā) *n.f.* புலம்பல், ஒப்பாரி, துயருறுதல், இழவுக்கொண் டாட்டம்.

عزت ('izzat) *n.f.* கண்ணியம், மதிப்பு, நன்மதிப்பு, தகுதி, புகழ், பண்பொழுக்கம், நற் பெயர்.

عزل ('azl) *n.m.* அலுவலகப் பதவி நீக்கம், வேலை நீக்கம்.

عزلت ('uzlat) *n.f.* பணிஓய்வு, வேலையை விட்டு விலகுதல்.

عزم ('azm) *n.m.* தீவிர முயற்சி, தன் முனைப்பாற்றல், தீவிர விருப்பாற்றல், உறுதிசெய்தல், தீர்மானித்தல், முடிவு செய்யப் படுதல், உறுதி, தீர்மானம்.

عزیز ('aziz) *adj.* மிகவும் நேசிக் கிற, அருமையான, அன்புள்ள, மதிப்பு மிக்க.

عسکر ('askar) *n.m.* படை.

عشا ('ashā) *n.m.* இரவுணவு, இரவுச் சாப்பாடு.

عشرت ('ishrat) *n.m.* மன மகிழ்ச்சி, இன்பம், புலன் களுக்கு ஏற்படும் மகிழ்ச்சி.

عصب ('asab) *n.m.* நரம்பு, தசை, சாதாரணமாக மாமி சம் எனப்படுவது.

عطش ('atash) *n.f.* தாகம், நீர் வேட்கை.

عطف ('atf) *n.m.* இரக்கம், அருட் குணம், அன்புச் செயல்.

عطیه ('atiya) *n.m.* பரிசு, அன் பளிப்பு, மான்யம்.

عفریت ('ifrit) *n.m.* அரக்கர், பேயு ருவம், தீயஆவி.

عفو ('afū) *n.m.* மன்னிப்பு, மன்னிக்கும் மனநிலை, பிழை பொறுத்தல்.

عفوکرنا ('afū karnā) *v.* மன்னித்து விடு, குற்றத்தைப் பொருட் படுத்தாது விடு, தண்டிக்காது விட்டு விடு.

**عفوست** ('afūsat) *n.f.* மலச்சிக்கல்.

**عفونت** ('afūnat) *n.f.* கவிச்சி, அரு வருப்பான முடை நாற்றம்.

**عقاب** ('uqāb) *n.m.* கழுகு.

**عقب** ('aqab) *adv.* பின்னர், பின்பு, பிற்பாடு, பிறகு.

**عقرب** ('aqrab) *n.m.* தேள்.

**عقل** ('aql) *n.f.* மெய்யறிவு, பகுத் தறிவு, முன்மதி, விவேகம், மதி நலம்.

**علاج** ('ilāj) *n.m.* மருத்துவப் பண்டுவம், நோய் நீக்க வகை.

**علاقه** ('ilāqah) *n.m.* வட்டம், அதி கார எல்லை, மண்டலம், வட் டாரத் தொகுதி, நகர் வட்டம்.

**علامت** ('alāmat) *n.f.* குறி, அடை யாளம், நினைவுக்குறி, சான் றுக் குறிப்பு.

**علت** ('illat) *n.f.* கெட்ட நடத்தை, தவறானநடத்தை, உடல் நல மின்மை, நோய் நிலை, நலங் குன்றிய நிலை.

**علتی** ('illati) *adj.* குறைபாடான, குற்றமுள்ள, நலங்குன்றிய.

**علم** ('ilm) *n.m.* அறிவு.

**علوفه** ('alūfa) *n.m.* ஊதியம், சம் பளம், ஓய்வுகால ஊதியம், முன்னேற்பாடாக ஒதுக்கப் பட்ட தொகை.

**علوی** ('ulvi) *adj.* வானுலகத்துக் குரிய.

**علیحدگی** ('alā-hidagi) *n.f.* பிரித் தல், பிரிவு, பிரிவினை, கூட் டுப்பிரிதல்.

**علیم** ('alim) *adj.* மெய்யறி வார்ந்த, விவேகமுடைய, அறிவுக் கூர் மையுடைய.

**عم** ('amm) *n.m.* தாயுடன் பிறந்த ஆண்.

**عماد** ('imād) *n.m.* தூண், தூடி, ஆதாரக்கல்.

**عمر** ('umr) *n.f.* வாழ்நாள், ஆயுள், வயது.

**عمق** ('umuq) *n.m.* ஆழஅளவு, ஆழம், ஆழமாயிருத்தல்.

**عمل** ('amal) *n.m.* செயல், மெய்ந் நிகழ்ச்சி, வழக்க மானச்செயல், பழக்கம், வாழ்க்கைத் தொழில் நடவடிக்கை, செயற்பாடு, விளைவு, விளைபயன்.

**عمل کرنا** ('amal karnā) *v.* செய், செயல்புரி, பின் தொடர், பின் பற்று.

**عمود** ('amūd) *n.m.* செங்குத்துக் கோடு.

**عمودی** ('amūdi) *adj.* செங்குத் தான, நிலைக்குத்தான, சாய் வற்ற.

**عموم** ('umūm) *adj.* பொதுப் படையான, அடிக்கடிநிகழ்கிற, எல்லோருக்குமுரிய, வழக்க மான, பொதுமுறையான.

**عموماً** ('umū-man) *adv.* பெரும் பாலும், பரவலாக, பொதுப்

படையாக, பொது நிலையில், பொது விதியாக, மொத்தத்தில்.

**عمیق** ('amiq) *adj.* ஆழமிக்க, மதிப்பிட்டுரைக்க முடியாத ஆழமுடைய, மிகத்தாழ்வாக உள்ள.

**عندلیب** ('anda-lib) *n.f.* இன்னிசைப் பறவை வகை.

**عنقریب** ('anqa-rib) *adv.* விரைவில், காலதாமதமின்றி, குறுகிய காலத்தில், சீக்கிரமாக, குறிப்பிட்ட காலத்துக்கு முந்தியே, முன்னதாகவே.

**عودی** ('ūdi) *adj.* வானீல வண்ணமார்ந்த.

**عورت** ('aurat) *n.f.* மனைவி, இல்லத்தலைவி, தலைமகள், தலைவி.

**عید** ('id) *n.f.* இஸ்லாமியர்களின் விழா நாள் அல்லது விழா.

**عینک** ('ainak) *n.f.* கண்ணாடி, மூக்குக் கண்ணாடி.

## غ

**غار** (ghār) *n.m.* குகை, உள்துளை, உட்புழை, அடி நிலக்குகை, நிலக்குடைவு.

**غارت** (ghārat) *n.f.* கொள்ளை, சூறை.

**غارت کرنا** (ghārat karnā) *v.* வீணாக்கு, பாழடி, வீணாகச் செலவுசெய், வீணழிவு செய்.

**غازی** (ghāzi) *n.m.* வெல்பவர், வெற்றியாளர்.

**غافل** (ghāfil) *n.m.* உன்னிப்பாயிராமை, கவனமின்மை.

**غاور** (ghā-vir) *adj.* சிந்தனையார்ந்த, சிந்திக்கிற, முன் கருதலுடன் பார்க்கிற, மதியுள்ள.

**غائب** (ghā'ib) *adj.* காட்சியிலிருந்து மறைந்து போகிற, பார்க்க இயலாத, புலனாகாத.

**غایت** (ghā-yat) *adj.* மிகுந்த, மிகவும் பெரிய அளவினதான, உச்ச அளவான, உச்ச நிலையான.

**غبی** (ghabi) *adj.* ஊக்கமற்ற, சுறுசுறுப்பற்ற, சோம்பிய, தூங்கி வழிகிற, அறிவாற்றல் குறைந்த, எழுச்சியற்ற.

**غذا** (ghizā) *n.f.* உணவு, உணவுப் பொருள், வழக்க உணவு, பேணி வளர்ப்பு, ஊட்டி வளர்ப்பு, ஊட்டம்.

**غرانا** (ghur-rānā) *v.* முழங்கு, உறுமு, சீறிப்பேசு.

**غربی** (gharbi) *adj.* மேற்கில் வாழ்கிற, மேற்கிலிருந்து வருகிற, மேற்கில் அமைந்துள்ள.

**غرض** (gha-raz) *n.f.* இலக்கு, குறி, நோக்கம், குறிக்கோள், தன்னலம்.

**غرور** (ghu-rūr) *n.m.* செருக்கு, இறுமாப்பு, தற்பெருமை, அகம்பாவம், பெறுமை.

**غریب** (gharib) *adj.* வறிய, ஏழ்மை யான, அடக்க வொடுக்கமான, பணிவான, கீழ்ப்படிதலுள்ள, எதிர்ப்பற்ற தன்மையில் ஏற்றுக் கொள்கிற, வளமற்ற.

**غریزی** (gharizi) *adj.* இயற்கை சார்ந்த, இயல்பாக உண்டான, இயற்கையைப் பின்பற்றிய, இயற்கையால் வழங்கப்பட்ட

**غصه** (ghus-sah) *n.m.* கோபம், சீற் றம், குமுறல், உணர்ச்சி வேகம்.

**غصے** (ghusse) *adj.* கோபமான, சீற்றமுள்ள, கடுஞ்சினங் கொண்ட.

**غضب** (gha-zab) *n.m.* பேரிடர், விழுமம், இடுக்கண்.

**غفیر** (ghafir) *adj.* பல, பல அடங்கிய, மிகப்பல, பலரை உட்கொண்ட, பல்வேறுபட்ட, தனித்தனி பல்வேறான.

**غلام** (ghu-lām) *n.m.* அடிமை.

**غلط** (gha-lat) *adj.* தவறான, பிழை பாடான, முறை பிறழ்வான, முறை கேடான.

**غلطی** (gha-lati) *n.f.* தவறு, குற்றம், தப்பெண்ணம்.

**غلطی کرنا** (gha-lati karnā) *v.* வழுவு, தவறு செய், பிழைபடு, நேர்மை தவறு, பாவம் செய்.

**غلیظ** (gha-liz) *adj.* அழுக்கடைந்த, மாசுற்ற, கீழ்த்தரமான, தாழ் வான, மட்டமான, துப்புரவற்ற, இழிந்த உணர்ச்சி சார்ந்த.

**غماز** (gham-māz) *n.m.* புறங் கூறுபவர்.

**غمازی** (gham-māzi) *n.f.* புறங் கூறுதல்.

**غمی** (ghami) *n.f.* மனத் துயரம், கவலை, வருத்தம்.

**غنا** (ghanā) *n.f.* பொருள் வளம், செல்வம், நிறைவு, மிகுதி.

**غنودگی** (ghunū-dagi) *n.f.* அரைத் தூக்கம், மந்தமான நிலை.

**غنی** (ghani) *adj.* செல்வச் சிறப் புடைய.

**غور** (ghaur) *n.m.* எண்ண அலை, தியானம், நினைவு, சிந்தனை, சிந்தனைதரும் விளக்கம்.

**غورکرنا** (ghaur karnā) *v.* நினை, ஆழ்ந்துநினை, சிந்தனை செய், திரும்பவும் நினைத்துப்பார், எண்ணு, எண்ணிக்கொண்டிரு.

**غیب** (ghaib) *adj.* மறைந்துள்ள, காணமுடியாதபடி, மிகச்சிறி தான.

**غیبت** (ghai-bat) *n.f.* மறைவு, மறைவாகப் பின்வாங்குதல், ஓடிமறைதல், கண்ணுக்குத் தெரியாமற் போதல்.

**غیرمعمولی** (ghair-ma'mūli) *adj.* பொதுப்படையாயிராத, வழக் கத்திற்கு மாறான.

## ف

فاتح (fātih) *n.m.* வெற்றியாளர், வெல்பவர். *adj.* வாகைசூடிய, வெற்றி ஆரவாரத்துடன் கூடிய, வெற்றிப் புகழ் வாய்ந்த.

فاتحه (fā-tihah) *n.f.* அருளாளர் (அ) புனிதர்களுக்கான படையல் (அ) காணிக்கை.

فاخر (fā-khir) *n.m.* வீண் தற்புகழ்ச்சியுடையவர்.

فارس (fāris) *n.m.* குதிரை வீரர், குதிரையைத்திறமையாகக் கையாளுபவர்.

فارسی (fārsi) *n.f.* பெர்சியமொழி.

فاش (fāsh) *adj.* திறந்த, மூடாக்கு அகற்றப்பட்ட, திறந்து காட்டப்பட்ட, காப்பற்ற.

فاصله (fāsi-lah) *n.m.* இடைவெளி, இடைநேரம்.

فاعل (fā'il) *n.m.* இயக்குபவர், நடத்துபவர்.

فال (fāl) *n.m.* முன்னறிவித்தல், வருவதுரைத்தல், முன்னறிவு, முன்னறிதிறம், முன்னறிகுறி.

فالتو (fāltū) *adj.* தனிமிகையான, மிகைப்படியான, இயல்பான வகையைவிடப் பேரளவான.

فانی (fāni) *adj.* அழிந்து போகிற, விரைவில் அழுகிக் கெட்டு விடுகிற.

فائده (fā'ida) *n.m.* பேறு, ஆதாயம், இலாபம், பயன், நன்மை.

فائق (fā'iq) *adj.* மேம்பட்ட, மேல் தகுதியுடைய, உயர் தரமான, உயரிடஞ் சார்ந்த, பண்புயர்ந்த.

فتح (fatah) *n.f.* வெற்றி.

فتور (futūr) *n.m.* ஊனம், குறைபாடு, ஊறுபாடு, உருக்குறை.

فجر (fajr) *n.f.* காலை, காலை நேரம், முற்பகல்.

فحش (fohsh) *adj.* நாணமில்லாத, நடைநயமற்ற, மரியாதையற்ற, கேவலமான, இழிவான, அருவருப்பான.

فدائی (fidā'i) *adj.* வல்லமை வாய்ந்த, வல்லமையான, வீரதீரமான.

فراخ (fa-rākh) *adj.* விரிவான, பரந்தகன்ற, பரவலான, பெரிய, மிகுதியான, நாலா பக்கமும் பரவுகிற.

فراخی (fa-rākhi) *n.f.* வளமை, வாழ்வுவளம், நற்பேறு .

فرار (farār) *n.m.* தப்பியோடு தல், தப்பிப் பிழைத்தல், மறைந்தோடுதல், ஓடிப் போதல்.

فراست (firāsat) *n.f.* அறிவுநுட்பம், மதிநலம், புத்திசாலித்தனம்.

فراغت (farā-ghat) *n.f.* ஓய்வு, செயலோய்வு, உழைப்பு, நிறுத்தம், அமைதியான நிலை.

فرجام (farjām) *n.m.* முடிவு, தீர் மானம்.

فرح (farah) *n.m.* இன்பம், இன்ப நுகர்வு, மனமகிழ்ச்சி.

فرحان (farhān) *adj.* மகிழ்ச்சி நிரம் பிய, கிளர்ச்சி வாய்ந்த, களிப் புடைய, கவலையற்ற.

فرد (fard) *n.f.* தனி மனிதன், தனி ஒருவர் *adj.* ஒன்றான, ஒற்றை யான, இணைந்த, பிறரல்லாத, தன்னேரில்லாத.

فردوس (fir-daus) *n.m.* சுவர்க்கம், பேரின்ப இடம், விண்ணுலகு.

فرزند (far-zand) *n.m.* மகன், புதல் வன், குழந்தை.

فرس (faras) *n.m.* குதிரை, ஆண் குதிரை.

فرسوده (far-sūdah) *adj.* அழுகிய, பதனிழந்த, கெடுதலான.

فرض (farz) *n.m.* கடமை, கடமைப் பொறுப்பு, கடமையுணர்ச்சி, நம்பிக்கை.

فرط (fart) *n.f.* போதிய அளவு, போதிய செல்வம், போதிய வளம், நிறைவு மனப்பான்மை.

فرفر (far-far) *adv.* தயங்காமல், வேகமாக, அடுத்தடுத்து விரை வாக.

فرقت (far-qat) *n.f.* ஒற்றுமை இன்மை, பிரிவு, வேற்றுமை.

فرمان (far-mān) *n.m.* ஆணை, அதிகாரம், ஆதிக்கம், கட் டளை.

فرمانا (far-mānā) *v.* அறிவுறுத்து, அறிவூட்டு, கற்பி, கற்றுக்கொடு, உணர்த்து, கட்டளையிடு.

فرو (firo) *adv.* கீழே, மேலிருந்து கீழாக, கீழ்த்தளத்தில், தாழ் வாக, கீழ் நிலையில்.

فروكرنا (firo karnā) *v.* அடக்கு முறைசெய், கீழடக்கிவை, நசுக்கு, மட்டுப்படுத்து.

فروش (frosh) *n.m.* விற்பவர்.

فريق (fariq) *n.m.* கூட்டத்தார், கட்சி, நோக்கம் - கொள்கை முதலியவற்றில் ஒன்று பட்ட குழுவினர்.

فساد (fasād) *n.m.* போர், யுத்தம், சண்டை, சச்சரவு, பூசல், நட்பு முறிவு, எதிர்பாராக் கிளர்ச்சி, அமைதி குலைவு, போரின் திடீர்த் தொடக்கம்.

فسادى (fa-sādi) *adj.* சண்டை பிடிக்கிற, ஆட்சி எதிர்ப்பான.

فسان (fa-sān) *n.f.* சாணைக்கல், சாணை பிடிக்கும் கல்.

فسخ (faskh) *n.m.* கடமை தவ றுகை, சட்டம் - ஒப்பந்தம் உடன்படிக்கை - வாக்குறுதி ஆகியவற்றுக்கு எதிராக நடத் தல்.

**فصاد** (fas-sād) *n.m.* அறுவை மருத்துவர், அறுவை மருத்துவ வல்லுநர்.

**فصيح** (fasih) *adj.* சொல்திற மிக்க, நாநலம் வாய்ந்த.

**فصيل** (fasil) *n.f.* அரண்காப்பு மதில், காப்புக் கூட கோபுரம்.

**فضل** (fazl) *n.m.* பண்பு, சிறப்பு, நயநேர்த்தி, மேம்பாடு, மிகு நலம், முதன்மை நிலை.

**فضيحت** (fazi-khat) *n.f.* இகழ், தயவிழப்பு, வெட்கக்கேடு.

**فطرت** (fitrat) *n.f.* மெய்யறிவு, முன் மதி, விவேகம், அறிவு நுட்பம்.

**فطرتى** (fitrati) *adj.* திறமையுடைய, அறிவார்ந்த.

**فقر** (faqr) *n.m.* வறுமை, ஏழ்மை, இன்மை, பஞ்சம், பற்றாக்குறை.

**فقير** (faqir) *n.m.* மருத்துவம் செய்பவர், ஏழை, பிச்சைக்காரர்.

**فلاح** (fa-lāh) *n.f.* இன்னலம், நலன், பயன், அனுகூலம், ஆதரவு, அன்புச் செயல்.

**فلاكت** (falā-kat) *n.f.* வாய்ப்புக் கேடு, இன்னல், இடையூறு, இடர்ப்பாடு.

**فلان** (fulān) *adj.* அதே வகையான, அதே அளவான, அவ்வகைப் பட்ட, அத்தகைய, அந்த அளவான, அப்படிப்பட்ட, அவ்வியல்புடைய, அவ்வளவு பெரிதான, இம்மாதிரியான.

**فلفل** (fil-fil) *n.f.* காய்ந்த மிளகு.

**فلك** (falak) *n.m.* ஆகாயம், வானம், வானுலகு, இன்ப உலகம்.

**فنا** (fanā) *n.f.* அழித்தல், அழிவு, கேடு, பாழ், பொருட் சிதைவு, பொருளழிவு.

**فوت** (faut) *n.f.* சாதல், மாள்வு, சாவு, இறப்பு, உயிரற்ற நிலை.

**فوتى** (fauti) *adj.* மாண்ட, உயிர் வாழ்வு முடிந்து போன, உயிரற்ற, பட்டுப் போன, சாவு நிலை ஒத்த, உயிர்ப்பற்ற, செயலற்ற.

**فوراً** (fau-ran) *adv.* உடனே.

**فوق** (fauq) *n.m.* முன்மதிப்பீடு, விருப்பத்தேர்வு, முன்னுரிமை, விருப்பச் சார்பு.

**فوقيت** (fau-qiyat) *n.f.* மேம்பாடு, உயர்வு.

**فياض** (fai-yāz) *adj.* பெருந்தகைக்குரிய, பெருந்தன்மை வாய்ந்த, பெரும் போக்கான, குறுகிய நோக்கமற்ற, தாராள மனப்பான்மையுடைய, பரந்த கொள்கையுடைய.

**فياضى** (fai-yāzi) *n.f.* பெருந்தகமை, உயர்குணமுடமை, தாராள மனப்பான்மை.

**فيصله** (fai-sala) *n.m.* அறுதிச் செய்தல், அறுதியீடு, உறுதிப்பாடு, முடிவு, தீர்வு, முறை மன்றத் தீர்ப்பு, விதிக்கப்பட்ட

தண்டனை, கடவுள் சீற்றத்தின் அடையாளமெனக் கருதப்படும் பொல்லாங்கு, திறனாய்வு முடிவு, மதிப்பீடு, கருத்து.

فیصلہکرنا (fai-sala karnā) *v.* அறுதிசெய், தீர்வுசெய், முடிவு செய், முடிவுக்குக் கொண்டுவா, உறுதிசெய், உறுதிப்படுத்து, ஒத்து முடிவுசெய், கடன்தீர், கணக்குத் தீர், தொல்லை தவிர்த்தொழி, கொல்லு, ஒழித்து கட்டு.

فیل (fil) *n.m.* யானை.

## ق

قابلیت (qābliyat) *n.f.* தகுதி நிலை, திறமை.

قادر (qādir) *adj.* ஆற்றல் வாய்ந்த, மிகப்பெரிய, சிந்தனை வகையில் அறிவுக்குப் பொருத்தமான, மருந்து முதலிய வகையில் ஆற்றல் மிக்க.

قاسم (qāsim) *n.m.* பகிர்ந்து கொடுப்பவர், பிரித்துக் கொடுப்பவர்.

قاصد (qāsid) *n.m.* தூதர், தூதறிவிப்பாளர்.

قاضی (qāzi) *n.m.* நீதிபதி, இஸ்லாமியர்களின் அமைதி காப்பு நடுவர் (அ) குற்றவியல் நடுவர்.

قامت (qāmat) *n.f.* உயர்த்தி, ஆண் வகையில் உடலுயர்வளவு.

قانون (qānūn) *n.m.* சட்டம், சட்டக் கட்டுப்பாடு, சட்ட முறைமை, சட்ட நடை முறை, பொதுநீதி, வழக்கு முறை, விதிமுறை வாசகம்.

قانونبنانا (qānūn banānā) *v.* சட்டமியற்று.

قانوندان (qānūn-dān) *n.m.* வழக்குரைஞர், வாக்கறிஞர், சட்ட அறிஞர்.

قائم (qā'im) *adj.* நீடித்திருக்கிற, நிலைத்த, நிலைபேறுள்ள, நீடித்து உழைக்கக்கூடிய.

قائمکرنا (qā'im karnā) *v.* நிலை நாட்டு, உறுதிப்படுத்து, நிலை பேறுடைய தாக்கு, நிறுவு, சட்டப்படி அமை.

قبر (qabr) *n.f.* கல்லறை, சமாதி, கல்லறைக் கிடங்கு.

قبض (qabz) *n.f.* மலச்சிக்கல்.

قبل (qabl) *adj.* முந்திய, முன் நிகழ்ந்த.

قبول (qa-būl) *n.m.* ஒப்புக் கொள்ளுதல்.

قتل (qatl) *n.m.* மாக்கொலை, படுகொலை, திட்டமிட்ட கொடுங் கொலை, மனமார்ந்த ஆட் கொலை.

قتلکرنا (qatl karnā) *v.* மனிதத் தன்மையற்றுக் கொடுங் கொலை செய், வன்மத்தோடு ஆட்கொலை செய்.

قحط (qahat) *n.m.* பஞ்சம், வறட்சி, குறைபாடு, உணவு பஞ்சம், பசி, பட்டினி.

**قدح** (qadah) *n.m.* குவளை, கண்ணாடிக் குவளை, கிண்ணம்.

**قدرت** (qudrat) *n.f.* இயற்கை, இயற்கைநிலை, தெய்வத் தன்மை, பூசிக்கத்தக்கவர்.

**قدم** (qadam) *n.m.* காலடி, காலடித் தொலைவு.

**قديم** (qadim) *adj.* பண்டைய, தொன்மையான.

**قرابادين** (qarā-bādin) *n.f.* மாற்று மருந்து, முறிவு.

**قرابت** (qarā-bat) *n.f.* உறவு, சுற்றம்.

**قرابتی** (qarā-bati) *n.f.* குடும்பக் குழு, இனஉறவு, இன உறவினர் குழாம், ஒரே குடும்பத்தினர்.

**قرار** (qarār) *n.m.* நீடமைதி, சாந்தி, உலைவின்மை.

**قرآن** (qurān) *n.m.* இஸ்லாமியர் திருமறை.

**قربان** (qur-bān) *n.m.* பலி, உயிர்ப் பலி, பலியீடு.

**قرض** (qarz) *n.m.* கடன், கடனுதவித் தொகை.

**قرض‌دار** (qarz-dār) *n.m.* கடன் வாங்குபவர், கடன் பட்டவர்.

**قسم** (qism) *n.f.* வகை, மாதிரி, பண்பு.

**قصائی** (qasā'i) *n.m.* இறைச்சிக் கடைக்காரன், *adj.* இரக்கமற்ற, கொடிய, மன்னிக்குங் குணமற்ற.

**قصه** (qissa) *n.m.* கதை, விளக்கம்.

**قطار** (qa-tār) *n.f.* வரிசை, இரயில் வண்டி, தொடர் ஊர்தி.

**قطر** (qutr) *n.m.* வட்டத்தின் குறுக்களவு, விட்டம்.

**قطره** (qatra) *n.m.* துளி.

**قفس** (qafas) *n.m.* சிறைப்படுத்துதல் (அ) சிறைக்கு அனுப்புதல், சிறையில் இருக்கும் நிலை.

**قفل** (qufl) *n.m.* பூட்டு, பூட்டு விசைத்தாழ்.

**قفل‌توڑنا** (qufl-toṛnā) *v.* பூட்டு, தாழிடு, வீடு முதலியவற்றின் கதவை மூடிப் பூட்டிடு.

**قلابه** (qul-lābh) *n.m.* கொக்கி.

**قلانچ** (qu-lānch) *n.f.* குதிப்பு, துள்ளல், தாவல், தாண்டுதல், திடீர் ஏற்றம்.

**قلت** (qil-lat) *n.f.* பற்றாக்குறை, அருமைப்பாடு.

**قلق** (qalaq) *n.m.* துயரம், கவலை, ஆழ்ந்த மனத்துன்பம்.

**قلقل** (qul-qul) *n.f.* களகள வென்னும் நீர் பாயுமொலி.

**قلی** (quli) *n.m.* சுமைக்காரன், சுமையாள்.

**قليل** (qalil) *adj.* சிறு அளவான, கொஞ்சமான, சிறிதும் போதா

நிலையான, தேவைக்குப்பற்றாத, குறைபாடான.

**قمیض** (qamiz) *n.f.* மேலங்கி, தளர் உட்சட்டை, உட்சொக்காய்.

**قند** (qand) *n.m.* சர்க்கரை, கற்கண்டு.

**قندیل** (qan-dil) *n.f.* மெழுகுத்திரி, விளக்கு, கூண்டு விளக்கு,

**قوت** (qūt) *n.f.* உணவு.

**قوت** (qūt) *n.m.* வலிமை, ஆற்றல், உறுதி, உடலாற்றல், உடலுறுதி.

**قول** (qaul) *n.m.* இசைவு, இணக்கம், உறுதிமொழி, ஒப்புதல், வாக்குறுதி, வாக்களித்த செய்தி.

**قول دینا** (qaul denā) *v.* உறுதிமொழி கூறு, வாக்களி, வாய்ப்புவள நம்பிக்கையூட்டு.

**قیاس** (qa-yās) *n.m.* பாவித்தல், பாவிப்பு, கருதுதல், எண்ணம், கருத்து.

**قیامت** (qiyā-mat) *n.f.* பேரிடர், இடுக்கண்.

**قید** (qaid) *n.f.* சிறைவைப்பு.

**قیر** (qir) *n.m.* தூக்கி எறிவு.

**قیف** (qif) *n.f.* புகைவாயில்.

**قے** (qai) *n.f.* வாந்தியெடுத்தல், கக்கல்.

**قےکرنا** (qaikarnā) *v.* வாந்தியெடு, கக்கு, ஒக்களி.

**قیمت** (qi-mat) *n.f.* விலை, மதிப்பு.

# ک

**کابر** (kā-bir) *adj.* பெரிய, பதவியில் உயர்ந்த, மேம்பட்ட, சிறந்த, உயர்வான, மாண்புமிக்க, குறிப்பிடத் தக்க பண்புயர்வுடைய.

**کاتنا** (kātnā) *v.* ஆள்பொருள் வகைகளில் விரைவாக சுற்றி சுழலச் செய்.

**کاٹ** (kāṭ) *n.f.* வெட்டு, கத்தரிப்பு, பிளவு, பிரிவு, கத்திக்குத்து வெட்டுக்காயம், துண்டிப்பு.

**کاٹنا** (kāṭnā) *v.* வெட்டு, அறு, கத்தரி, பிரிவினை செய், பகு, பிளவுப்படுத்து, அரி, அறுவடை செய், கழி, குறை.

**کاج** (kāj) *n.m.* காரியம், விவகாரம், அலுவல், வேலை.

**کاذب** (kāzib) *n.m.* பொய் பேசும் பழக்கமுடையவர். *adj.* பொய்யான, தவறான, ஆதாரமற்ற, நாணயமில்லாத, ஏமாற்றுகிற, உண்மையல்லாத, நேர்மையற்ற.

**کاست** (kāst) *n.f.* ஊறுபாடு, மதிப்பிழப்பு, இழப்பீடு, இழப்பின் மதிப்பு.

**کاشف** (kā-shif) *n.m.* துப்பறிபவர், மறை நுணுக்கம் கண்டு பிடிப்பவர்.

**كاغذ** (kā-ghaz) *n.m.* தாள், தாள் துண்டு, பத்திரிகை.

**كاغذات** (kā-ghazāt) *n.m.* ஆவணம், பத்திரம், ஆதாரமூலம், ஆதாரச் சான்று.

**كافر** (kāfir) *n.m.* சமய நம்பிக்கை யற்றவர்.

**كافور** (kāfūr) *n.m.* கற்பூரம், சூடம்.

**كافورہوجانا** (kāfūr hojānā) *v.* மறைந்துபோ, கண்ணுக்குத் தெரியாமற்போய் விடு, ஆவி யாய் மாற்று, ஆவியாய் மாறு, மறைவுறு.

**كافی** (kāfi) *adj.* போதிய, ஒத்த, தகுதியான.

**كاگ** (kāg) *n.m.* காகம்.

**كالا** (kālā) *adj.* இருண்ட, தெளி வற்ற, கறுத்த, கறுவிய.

**كامل** (kāmil) *adj.* கைதேர்ந்த, பல முறை செய்து பழக்க மேறிய, திறமைவாய்ந்த, முழுநிறை வான, குறைபாடற்ற.

**كان** (kān) *n.m.* காது, புறச்செவி, செவிப்புலம்.

**كانپنا** (kānpnā) *v.* நடுங்கு, அஞ்சி நடுங்கு, பதற்றங்கொள், உதறல் கொள்.

**كانچ** (kānch) *n.f.* கண்ணாடி, கண் ணாடித்துண்டு.

**كاندھا** (kān-dhā) *n.m.* தோள், தோட்பட்டை.

**كاوش** (kā-vish) *n.f.* மனக்காழ்ப்பு, பகைமை எண்ணம், வன்மம், ஆராய்ச்சி, மெய்த்தேர்வு, புத் தாய்வு.

**كائنات** (kāe'nāt) *n.f.* விண்ணகம், பிரபஞ்சம், இயலுலகு, உலகம், படைப்பு.

**كب** (kab) *adv.* எப்பொழுது, எந் நேரத்தில்.

**كبت** (kabit) *n.m.* கவிதை, செய் யுள், ஹிந்தி செய்யுள்.

**كبر** (kibr) *n.m.* பேராற்றல், பெரும்பதவி, மேதகைமை, உயர்நிலை, வீறார்ந்த தன்மை, புகழ், பெருஞ் சிறப்பு.

**كبھی** (kabhi) *adv.* ஒரு வேளை, அபூர்வமாக, அரிதாக.

**كبير** (kabir) *adj.* மேம்பட்ட, மேல் தகுதியுடைய, பதவியில் மேம் பட்ட, மூத்த, வயதில் மேம் பட்ட.

**كپاس** (ka-pās) *n.f.* பஞ்சு, பருத்தி நூல், பருத்தி ஆடை.

**كپٹ** (ka-paṭ) *n.m.* சூழ்ச்சி, வஞ்சகச் செயல், வஞ்சகம், ஏய்ப்பு, சூது, ஏமாற்று.

**كپٹی** (ka-paṭi) *n.m.* மோசடி, சூது, வஞ்சிப்பவர், ஏமாற்று கின்றவர், மோசம் செய்பவர். *adj.* பொய்யான, தவறான, ஆதாரமற்ற, நாணயமில்லாத, ஏமாற்றுகின்ற, நேர்மையற்ற.

کپڑا (kapṛā) *n.m.* துணி, ஆடை, உடை, பணியுடை.

کپڑاپہننا (kapṛā pehennā) *v.* உடு, உடுத்து, நேர்த்தியான ஆடை அணி.

کتا (kuttā) *n.m.* நாய், காட்டுநாய், வேட்டைநாய், ஆண்நாய்.

کتاب (kitāb) *n.f.* புத்தகம்.

کترانا (kat-rānā) *v.* சிறுகு, குறுகு, சுருங்கு, மறைந்து நழுவு, ஒளிந்தோடு.

کترنا (ka-tarnā) *v.* கத்தரி, கத்திரியால் வெட்டு, துண்டு படுத்து, ஒழுங்கு பட கத்தரி.

کترنا (ku-tarnā) *v.* பல்லால் கடி, பல்லால் கொந்து, பிடிவாதமாக விடாமல் கடி.

کتنا (kitnā) *adv.* எவ்வளவு.

کچا (kach-chā) *adj.* பழுக்காத, காயான, முதிராத, சமைக்கப் படாத, பச்சையான, அனுபவ மற்ற.

کچلنا (ku-chalnā) *v.* நொறுக்கு, குத்து, இடி, சிறு துகளாக்கு.

کحل (kohl) *n.m.* அஞ்சனக்கல்.

کد (kad) *n.m.* குகை, தனிமையறை.

کدو (kaddū) *n.m.* பூசணிக்காய்.

کذاب (kaz-zāb) *n.m.* பொய்யர், வழக்கமாகப் பொய்பேசுகிறவர்.

کراہنا (ka-rāhnā) *v.* ஏங்கு, தேம்பு, முனகு, அழு தாற்று, புலம்பு, பொருமு.

کرایہ (kirā-yah) *n.m.* வாடகை, பயணச் செலவு.

کرایہ دار (kirā-yah dār) *n.m.* வாடகை கொடுத்து குடியிருப்பவர்.

کرکرا (kir-kirā) *adj.* அழிந்த, கெட்ட.

کرکرا (kur-kurā) *adj.* எளிதில் உடையக்கூடிய, எளிதில் நொறுங்கத்தக்க.

کرم (karam) *n.m.* அன்புச்செயல், அறச்செயல் விருப்பம், இரக்க மனப்பான்மை, பெருந்தகமை, உயர்குணமுடமை, தாளார மனப்பான்மை.

کرنا (karnā) *v.* செய், செயல்புரி, வேலைசெய், திட்டமிடு.

کروانا (kar-vānā) *v.* செய்வதற்குக் காரணமாக இரு, செயல்புரிவதற்குக் காரணமாக இரு.

کریدنا (ku-rednā) *v.* சுரண்டு, நகங்கொண்டு பிறாண்டு, கீறு, கீறல்போடு.

کڑکنا (ka-ṛaknā) *v.* முறிவொலி செய், சடசடவென்று ஒலிசெய், படபடவென்று வெடி, இடி, இடி முழக்கமிடு, பெரு முழக்கஞ்செய்.

کڑوا (kaṛ-vā) *adj.* கசப்பான, துன்பந்தருகிற, வெறுப்பூட்டுகிற.

کڑھی (kaṛhi) *n.f.* குழம்பு, கூட்டு வகை.

کسان (kisān) *n.m.* உழவர், பண்ணைக் குடியானவர்.

کسب (kasab) *n.m.* வாழ்க்கைத் தொழில், வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட பணித் துறை.

کسب کرنا (kasab karnā) *v.* சம்பாதி, ஈட்டு, தொழில் செய்து பொருள் சம்பாதி.

کستوری (kas-tūri) *n.f.* கத்தூரி, கத்தூரி மணமுள்ள செடி வகை.

کسک (kasak) *n.f.* வேதனை, மனத் துன்பம், மனத்துயர்.

کسنا (kasnā) *v.* இறுக்கு, மேலும் இறுக்கமாக்கு, கட்டு, கட்டி இணை, இறுகப்பற்று.

کشادگی (kushā-dagi) *n.f.* விரிவு, விரிவடைந்த நிலை.

کشاف (kush-shāf) *n.m.* கண்டு பிடிப்பவர், முன் அறியப்படாததை அறிந்து காட்டுபவர்.

کشت (kisht) *n.m.* தடை, தடுத்து நிறுத்தும் பொருள், விதைக்கப் பட்ட நிலம்.

کشتی (kishti) *n.f.* படகு.

کف (kaf) *n.f.* உமிழ்நீர், நுரை, வாய் நுரை.

کلام (kalām) *n.m.* பேச்சு, உரையாடல்.

کل (kul) *n.m.* வழிமரபு, மரபு வழி, கால்வழி. *adj.* முழுமையான, சிதைவுபடா, குறைவற்ற, நிறைவான.

کل (kal) *n.m.* நேற்று, நாளை.

کلپانا (kal-pānā) *v.* எரிச்சலூட்டு, தொல்லை கொடு, நச்சரிப்பு செய், அல்லற்படுத்து, இடுக்கண்படுத்து.

کلفت (kul-fat) *n.f.* பேரிடர், நோவு, வேதனை, இன்னல்.

کلیجی (kaleji) *n.f.* கல்லீரல், விலங்குகளின் கல்லீரல்.

کمانا (ka-mānā) *v.* சம்பாதி, ஈட்டு, ஆதாயம் பெறு, உழைத்துப் பொருள் சம்பாதி.

کمک (ku-mak) *n.m.* உதவி, உறுதுணை, ஒத்தாசை.

کملانا (kum-lānā) *v.* வாட்டு, வதக்கு, வதங்கவை.

کمی (kami) *n.f.* குறைபாடு, குறைவு.

کناری (ki-nāri) *n.f.* பக்கம், ஓரம், எல்லை, நாட்டின் எல்லை, வார் இழை, சரிகை.

کنج (kunj) *n.m.* மூலை, இடுக்கு, கோடிவீடு.

کنجوس (kan-jūs) *n.m.* கஞ்சன், பேராசை உடையவன்.

گندا (gandā) *adj.* புனிதமற்ற, பொல்லாங்கு நாடுகிற, தீங் கான, படுகேடான, புனித நிலை திரிந்த.

کندذہن (kund zehan) *adj.* ஊக்க மற்ற, எழுச்சியற்ற, மடத்தன மான, முட்டாள்தனமான.

کنوارا (kun-vārā) *n.m.* திரு மண மாகாத ஆடவர்.

کنواں (kunvān) *n.m.* கேணி, கிணறு.

کنول (kanval) *n.m.* தாமரை, இரு தயம்.

کواڑ (kivāṛ) *n.m.* கதவு, வாயில், நுழைவழி.

کوٹنا (kūṭnā) *v.* பொடியாக்கு, அரை, தூளாக்கு, இடி.

کوچ (kūch) *n.m.* புறப்பாடு, அணி வகுப்பு.

کودنا (kūdnā) *v.* குதி, துள்ளு, பாய், தாண்டு, துள்ளிச்செல்.

کور (kor) *n.m.* எல்லைக்கோடி யடுத்தபகுதி, ஒதுக்கி விடப் பட்ட ஓரப்பகுதி.

کوسا (kosā) *n.m.* வசை மொழி, சாபம், சாப விளைவு.

کوسنا (kosnā) *v.* பழிப்புக்கு ஆட் படும்படி வேண்டுதல் செய், மீளாப்பழிக்கு உரிமைப்படுத்து, பழிப்பின் வேதனைக்குட் படுத்து.

کوفت (koft) *n.f.* துயரம், கவலை, ஆழ்ந்த மனத் துன்பம்.

کوکنا (kūknā) *v.* அலறு, அழு, திடீர்க்கூச்சலிடு, அச்சக் கூக் குரலிடு, வேதனைக் கூக்குரல் எழுப்பு.

کولی (kauli) *n.f.* தழுவல், ஆர்வ அணைப்பு.

کونا (konā) *n.m* இடுக்கு, மூலை, கோணம், முனைப்பான கூம்பு.

کونچی (kūnchi) *n.f.* தூரிகை, வண்ணந்தீட்டும் கோல்.

کھاد (khād) *n.f.* எரு, நில உரம், மக்கிப்போன எரு, நிலவளச் சத்து.

کھاج (khāj) *n.f.* சிரங்கு, நமைச்சல், தோலில் அரிப் புக்காணும் தொற்றுநோய் வகை.

کھار (khār) *n.m.* சாம்பலுப்பு, மர உப்பு, காரப்பொருள், காடித் தன்மையை எதிர்நின்று சமப் படுத்தும் பொருள்.

کہاں (ka-hān) *adv.* எங்கு, எவ் விடத்திற்கு.

کھان (khān) *n.f.* சுரங்கம், உலோ கம் கனிப்பொருள் முதலிய வற்றுக்காக அகழப்படும் குழி, கற்சுரங்கம், கட்டிடக் கற்கள் எடுப்பதற்காகத் தோண்டிய தொடுகுழி.

کھانا (khānā) *n.m.* புசித்தல், சாப் பிடுதல், அவதியுறு, இழப்புக்கு

ஆளாகு. *v.* சாப்பிடு, தின், உண், நுகர்.

کهانسنا (khāns-nā) *v.* இருமு.

کهانسی (khān-si) *n.f.* இருமல், இருமல் நோய்.

کهانی (kahāni) *n.f.* நிகழ்ச்சி, கதை, பழைய கதை, செய்தி, விளக்கம்.

رامکهانی (rām-kahāni) *n.f.* வாழ்க்கை வரலாறு, வாழ்க்கை வரலாற்று இலக்கியம்.

کهپانا (kha-pānā) *v.* முடித்துவிடு, முடிவுக்குக் கொண்டுவா, முடிவுறு, செய்துமுடி, பயன்படுத்திக் கழி, செலவழித்துத் தீர்.

کهپت (kha-pat) *n.f.* அழிவு, செலவழிவு, பயன்படுத்தித்தீர்த்தல்.

کهٹی (khaṭ-ṭi) *n.f.* பணப்பை, பணம் வைப்பதற்கான தோற்பை.

کهٹپٹ (khaṭ-paṭ) *n.f.* சண்டை, சச் சரவு, பூசல், உரத்து வாதாடல்.

کهٹپٹی (khaṭ-paṭi) *n.f.* சண்டை, சச்சரவு, பூசல், நட்புமுறிவு, மன வேறுபாடு.

کهٹکا (khaṭ-kā) *n.m.* இடர், துன்ப நெருக்கடி, ஐயுறவு, அரைகுறை நம்பிக்கை.

کهٹکنا (kha-ṭaknā) *v.* குத்தும் உணர்ச்சி உண்டாக்கு.

کهجانا (khi-jānā) *v.* துயரளி, சினமூட்டு, எரிச்சற்படுத்து, தொல்லைகொடு, நச்சரிப்புச் செய்.

کهجانا (khu-jānā) *v.* சொறி, சொறிந்துவிடு.

کهچنا (khich-nā) *v.* இழு, இழுத்துச்செல், கட்டியிழு, பிடுங்கு, பறி.

کهدانا (khu-dānā) *v.* அகழ், தோண்டு, குத்து, கிண்டு, குடை.

کهسکانا (khis-kānā) *v.* அசை, நிலைபெயர், பெயர்த்து அகற்றிவை, வேறிடத்துக்கு மாற்று, மறைவாக எடு, வஞ்சகமாகக் கவர்.

کهسکجانا (khisak jānā) *v.* சறுக்கு, வழுகு, நழுவு, கால் இடறப்பெறு, நழுவிச் செல், தப்பிமறை.

کهلنا (khilnā) *v.* மலர்ச்சியுறு, தழை, முழு அழகுடன் பொலிவுறு.

کهلنا (khulnā) *v.* திறந்து விடு, திற, ஒன்றாகச்சேர், ஒன்றாக்கு, ஒற்றுமைப்படுத்து, கூட்டி இணைவி, ஒளிர், சுடர்வீசு, விளக்கு, துளங்கு.

کهنگالنا (khan-gālnā) *v.* கழுவு, அலம்பு, கழுவிக் கறைநீக்கு.

کهولنا (khaul-nā) *v.* கொதி, குமுறியெழு, சினங்கொள்.

کهونا (khonā) *v.* வீணாக்கு, பாழடி, வீணாகச் செலவுசெய், இழ, இழக்கப் பெறு.

**کھیڑا** (kheṛā) *n.m.* கிராமம், நாட்டுப்புறப்பகுதி.

**کھیل** (khel) *n.m.* விளையாட்டு, வேடிக்கை, கேளிக்கை, நகையாட்டம், போட்டி விளையாட்டு.

**کیفیت** (kaifiyat) *n.f.* பண்பு, குணம், நன்னிலை, தகுதி, நிலை, சூழ்நிலை.

**کیوں** (kyūn) *adv.* ஏன், எதனால், எக்காரணங் கொண்டு.

## گ

**گابھن** (gā-bhin) *adj.* சூலுண்ட, கருவுற்ற, ஆக்க வளமுடைய, மகப்பேறளிக்கிற, இனப் பெருக்க வளமுள்ள.

**گاجنا** (gājnā) *v.* முழங்கு, முழங்கித் தெரிவி.

**گارا** (gārā) *n.m.* சேறு, சகதி, ஈரக் குழைவான மண்.

**گاڑنا** (gāṛnā) *v.* புதை, மண்ணி லிட்டு மூடு, உள்ளிட்டுமூடு.

**گاڑی** (gāṛi) *n.f.* வண்டி, பிரயாண வண்டி, விசை வண்டி, மின் னூர்திவண்டி, புகைத் தொடர் வண்டி.

**گاڑیبان** (gāṛi-bān) *n.m.* ஓட்டுபவர், வண்டியோட்டி.

**گالی** (gāli) *n.m.* வைதல், வசவு, சீற்றமிக்க சொல்லடி.

**گانا** (gānā) *v.* பாடு, இன்னிசை யெழுப்பு, வாய்ப் பாட்டிசை.

**گتی** (gati) *n.m.* நிலைமை, நன் னிலை, தகுதி, தரம், படிநிலை, நிலைமாற்றம்.

**گچ** (gach) *n.m.* காரை, சுண்ணாம் பும் மணலுங் கலந்த சாந்து.

**گدگد** (gad-gad) *adj.* இன்பமான, மகிழ்ச்சியான.

**گدلا** (gadlā) *adj.* சேறு போன்ற, சேறு நிறைந்த, அழுக்கடைந்த.

**گذارش** (guzā-rish) *n.f.* முறையீடு, கோரிக்கை, வேண்டு கோள், மனு.

**گذرنا** (guzar-nā) *v.* சா, இற, அழிவுறு.

**گر** (gur) *n.m.* வாய்ப்பாடு, சுருக்க விதிமுறை.

**گراری** (ga-rāri) *n.f.* உருளை, கருவியாகப் பயன்படும் சாத னம்.

**گرج** (garj) *n.f.* இடியோசை, பேரொலி.

**گرجنا** (garj-nā) *v.* இடி, இடி யொலி முழங்கு, பெரு முழக் கஞ்செய், உரக்க அடித்துச் சூளுரை.

**گرجا** (girjā) *n.m.* கிறித்தவத் திருக் கோயில், வழிபாட்டு மனை.

**گردا** (girdā) *n.m.* வட்டம், வட்டச் சுற்றுவரை.

گردان (gar-dān) *n.f.* சுற்றுகை, சுழற்சி, ஒரு தடவை சுற்றுஞ் சுற்று.

گرمی (garmi) *n.f.* சூடு, வெப்பம், பொறுக்க முடியாவெப்பம், வெப்ப உணர்ச்சி.

گرنا (girnā) *v.* விழு, தவறிக் கீழே இடப்பெறு, கீழ் நோக்கி வீழ் வுறு, கீழே வீழ்வுறு.

گره (graha) *n.f.* முடிச்சு, சிக்கல், கட்டு.

گریان (gir-yān) *adj.* அழுகிற.

گریز (gurez) *n.f.* விலகல், வெறுப்பு, பிழைபாடு.

گڑگڑانا (giṛ-giṛānā) *v.* அக்கறை யுடன் வேண்டு, உள்ளார்வத் துடன் மனு செய்.

گڑہا (gaṛhā) *n.m.* குழி, தோண் டிய பள்ளம்.

گڑیا (guṛ-yā) *n.f.* பொம்மை, கைப்பாவை, மனித உருவப் பொம்மை.

گزیر (guzir) *n.f.* தீர்வு, பரிகாரம்.

گفتار (guf-tār) *n.f.* உரையாடல், பேச்சு, சொற் பொழிவு.

گلنا (galnā) *v.* கரையச்செய், கரை, உருகு, உருகச்செய்.

گلی (gali) *n.f.* தெரு, வீதி, சந்து, இடைவழி.

گنّا (gannā) *n.m.* கரும்பு.

گناه (gunā) *n.m.* குற்றம், குறை, குறைபாடு, கறை, குற்றப்பழி, குற்றப்பொறுப்பு, குற்றத் தன்மை.

گناه کرنا (gunā karnā) *v.* பாவ மிழை, பொல்லாங் கிழை, தீங்கிற்காளாக்கு, நன்றிக்கேடு செய்.

گنجا (chandrā) *n.m.* வழுக்கைத் தலையுடையவர்.

گننا (ginnā) *v.* எண்ணு, எண்ணிக் கையைக் கண்டறி, அளவைக் கண்டறி, மதிப்பிடு.

گندی (gandi) *adj.* அருவருக்கத் தக்க, புலன்களுக்கு வெறுப்புத் தருகிற, கடு வெறுப்பூட்டுகிற, துப்புரவு கெட்ட.

گنگنانا (gun-gunānā) *v.* முணு முணுப்பு, முணுமுணுப்புச் சொற்கள், முனங்கொலி, மந்த ஓசை.

گنوانا (gan-vānā) *v.* வீணாக்கு, பாழடி, வீணழிவு செய்.

گنی (guni) *adj.* திறமை கொண்ட, தனித்திறம் காட்டுகின்ற, தேர்ச் சித்திற மைக்குரிய.

گوبر (gobar) *n.m.* மாட்டுச்சாணம்.

گورا (gorā) *adj.* கண்ணுக்கினிய, அழகிய, வனப்புள்ள, வெண் ணிறமான.

گوشت (gosht) *n.m.* மாமிசம்.

**گوندھنا** (gūndh-nā) *v.* பிசை, மாப் பிசைந்து ரொட்டி சுடு.

**گھاس** (ghās) *n.f.* புல், புல் வகை, வைக்கோல்.

**گھبرانا** (ghab-rānā) *v.* மனதைக் குழப்பு, கலக்கு, அமைதி கலை.

**گھاٹا** (ghā-ṭā) *n.f.* முகில், பனிப் படலம், மங்கலான தன்மை.

**گھٹانا** (ghaṭā-nā) *v.* குறைத்துக் கொள், சுருக்கு, தாழ்த்து.

**گھٹنا** (ghaṭ-nā) *v.* குறை, குறை வாக்கு, குறைவுறு.

**گھٹیا** (ghaṭyā) *adj.* கீழ்த்தரமான, இழிந்த, மட்டமான, அற்ப மான, குறைவான.

**گھرانا** (gha-rānā) *n.m.* குடும்பத் தினர், குடும்ப அமைப்பு.

**گھرنی** (ghir-ni) *n.f.* வண்டிச் சக்கரம்.

**گھڑی** (ghaṛi) *n.f.* மணிப்பொறி, மணியடிக்கும் கடிகாரம்.

**گھسانا** (ghi-sānā) *v.* தேய், துடை, உரசித் தேய்.

**گھسنا** (ghus-nā) *v.* முண்டிக் கொண்டு செல், வலிந்து செல், புகு, நுழை, உட்செல், ஊடுருவு.

**گھسیڑنا** (ghu-seṛnā) *v.* நெக்கித் தள்ளு, திடுமென உந்தித் தள்ளு, புகுத்து, வலிந்து உட் செலுத்து.

**گھمانا** (ghu-mānā) *v.* வளை, வட்ட வடிவமாகச் சூழ்.

**گھن** (ghin) *n.f.* அருவருப்பு, கடு வெறுப்பு, வெறுப்பு, விருப் பின்மை.

**گھنگولنا** (ghan-golnā) *v.* கலந் திணை, சேர்த்திணை, ஒன் றாகக்கூட்டு, ஒன்று சேர்.

**گھورنا** (ghurnā) *v.* உத்து நோக்கு, ஊன்றிப்பார், பற்றார்வத்துடன் நோக்கு, விழித்து நெடுநேரம் நோக்கியிரு.

**گھولنا** (gholnā) *v.* கரை, கரையச் செய்.

**گھونٹ** (ghūnṭ) *n.m.* இழுப்பு, பாரம் இழுப்பு.

**گھیر** (gher) *n.m.* சுற்றடைப்பு, வேலியிடப்பட்ட நிலப்பகுதி.

**گھیرا** (gherā) *n.m.* சுற்றெல்லை, சுற்றி வளைப்பு.

**گیلا** (gilā) *adj.* நனைந்த, ஈரக்கசி வுடைய, ஈரமான, நீர்ஊற்றப் பட்ட, ஈரத்தோய்வுடைய.

## ل

**لا** (lā) *adv.* அப்படி அல்லாது, என்று கூற முடியாமல், அல் லாது, இன்றி, இல்லாது, இல்லவே இல்லை, கிடை யவே கிடையாது.

**لاثانی** (lā-sāni) *adj.* ஒப்பிலியான, தனக்குவமையில்லாத.

**لاجواب** (lā-javāb) *adj.* ஈடில்லாத, இணையற்ற.

**لاچار** (lā-chār) *adj.* வறிய, ஏழ்மையான, வளமற்ற, குறைபாடுடைய, போதாத.

**لادوا** (lā-davā) *adj.* சீர்படுத்த வியலாத, சரிபடுத்த முடியாத, குணப்படுத்த முடியாத.

**لازوال** (lā-zavāl) *adj.* நிலை பேறுடைய, சாசுவதமான.

**لات** (lāt) *n.f.* கால், விலங்கின் கால், மேசை நாற்காலி, இயந்திரங்கள் ஆகியவற்றின் கால்.

**لاٹھی** (lāṭhi) *n.f.* கம்பு, குச்சி, கழி, கைத்தடி, ஊன்று கோல், பிரம்பு.

**لادنا** (lādnā) *v.* சுமை ஏற்று, பாரமேற்று.

**لاد** (lād) *n.m.* சுமை, பளு.

**لاش** (lāsh) *n.f.* பிணம், உயிரற்ற மனித உடல்.

**لاگ** (lāg) *n.f.* பற்றாசை, பாசம், உள்ளன்பு, நேசம், விருப்பம், உறவு, சுற்றம், பகைமை, எதிர்ப்பு, வெறுப்பு, நட்புக் கேடு.

**لانا** (lānā) *v.* கொணர், எடுத்துக் கொண்டுவா, கணக்கேட்டில் மறுபக்கம் கொண்டு செல்.

**لایزال** (lāya-zāl) *adj.* எக்காலத்துமுள்ள.

**لبھانا** (lubhā-nā) *v.* மயக்கு, கவர்ச்சிசெய், வயப்படுத்து, சிக்கவை.

**لپ** (lap) *n.f.* கைப்பிடி, கைப்பிடியளவு, சிறிதளவு, சிற்றெண்ணிக்கை.

**لپائی** (lipā'i) *n.f.* பூசு, அப்பு, பிசைந்து பூசு.

**لپٹنا** (lipaṭ-nā) *v.* பற்றிகொள், விடாது ஒட்டிக்கொள், பற்றி உறுதியாயிரு.

**لت** (lat) *n.f.* தீயபழக்கம், கெட்ட நடத்தை.

**لتاڑنا** (latāṛ-nā) *v.* வசைகூறு, இகழ், அவமதி, மானபங்கஞ் செய்.

**لتھاڑنا** (lithāṛ-nā) பூசு, அப்பு, அழுக்காக்கு, தரையின் மேல் இழுத்து நனைத்து அழுக்காக்கு.

**لٹانا** (luṭā-nā) *v.* மிதமிஞ்சிச் செலவிடு, ஊதாரித்தனமாக செலவிடு.

**لٹک** (laṭak) *n.f.* இயலுந்திறம், நடக்கும் பாணி.

**لٹکانا** (laṭ-kānā) *v.* தொங்கவிடு, தளர்த்தியாக மாட்டிவை, அந்தரத்தில் நிறுத்து, ஆதாரமின்றி நிற்கவை.

**لٹو** (laṭ-ṭū) *n.m.* தூக்குநூல், தூக்கு நூற்குண்டு, பம்பரம்.

**لٹیرا** (luṭṭerā) *n.m.* கொள்ளைக்காரன்.

**لحاظ** (lihāz) *n.m.* மரியாதை, மதிப்பு, கண்ணியம்.

**لحد** (lahad) *n.f.* கல்லறை, புதை குழி.

**لخت** (lakht) *n.m.* துண்டு, கூறு, பகுதி.

**لرزه** (larza) *n.m.* நிலஅதிர்ச்சி, நிலநடுக்கம், பூகம்பம்.

**لڑکا** (laṛkā) *n.m.* இளைஞன், பையன், சிறுவன், மைந்தன்.

**لڑنا** (laṛnā) *v.* சச்சரவிடு, பூசலிடு, மனவேறுபாடு கொள், சண்டையிடு, நட்புறவு முறித்துக்கொள்.

**لڑھکنا** (luṛ-haknā) *v.* உருள், நிலைகுலைவி, திடங்குலைவி, வாட்டமுறு, ஏங்குறு.

**لڑی** (laṛi) *n.f.* இடையிணைப்புக் கருவி, இடையிணைப்புப் பொருள்.

**لسان** (las-sān) *adj.* வாயாடியான, மிகு பேச்சுப் பேசுகிற, பேச்சில் விருப்பமுடைய.

**لعل** (la'l) *n.m.* மாணிக்கம்.

**لعنت** (la'nat) *n.f.* வசை மொழி, பழிப்பாணை, சாபம்.

**لغت** (lu-ghat) *n.f.* சொற்களஞ்சியம், அகராதி.

**لغوی** (lugh-vi) *adj.* எழுத்து சார்ந்த, எழுத்தியல்பான, எழுத்தைப் பின்பற்றிய, சொல்லின் நேர் பொருள் சார்ந்த.

**لفافه** (lifā-fa) *n.m.* உறை, கடித உறை, அஞ்சல்உறை, புத்தகத்தின் புறஅட்டை.

**لفنگ** (la-fang) *n.m.* பொருத்த மற்ற பண்பு, சரியில்லாத இயல்பு.

**لقب** (la-qab) *n.m.* குடும்பப் பெயர், சிறப்புப்பெயர், பட்டப்பெயர்.

**لقمان** (luq-mān) *n.m.* மாந்திரிகன், மாயாவி.

**لقمه** (luqmah) *n.m.* சிறு வாயளவு, கவளம்.

**لکھانا** (likhā-nā) *v.* பதிவு செய்ய எழுதக் கூறுதல், ஒப்ப எழுதக் கூறு.

**لکھنا** (likh-nā) *v.* எழுது, கையெழுத்தாக எழுது.

**لکھنی** (likh-ni) *n.f.* பேனா, எழுது கோல்.

**لکیر** (lakir) *n.f.* கோடு, வரம்பு, எல்லைக் கோடு.

**لگانا** (lagā-nā) *v.* மேல்வை, இடு, பொருந்து.

**للچانا** (lal-chānā) *v.* மயக்கு, வயப் படுத்து, சிக்கவை, கவர்ச்சி யூட்டி இழு, ஆவலூட்டி ஏய், மயக்கி வசப்படுத்து.

**لنگڑا** (langṛ-ā) *adj.* நொண்டியான.

**لو** (lau) *n.f.* முனைத்தெழும் காதல், பற்றாசை.

**لو** (lū) *n.f.* அனல்காற்று.

لوبیا (lobi-yā) *n.m.* அவரை, மொச்சை கொட்டை, பருப்பு.

لوٹا (loṭā) *n.m.* தண்ணீர்க் குடம்.

لوٹانا (lau-ṭānā) *v.* திருப்பிச் செலுத்து, திருப்பி அனுப்பு, திருப்பிக் கொடு, திரும்பவும் எடுத்த இடத்தில் வை.

لوٹنا (lūṭ-nā) *v.* கொள்ளையிடு, சூறையாடு, திட்டமிட்டுப்பறி, பிறர் பொருளைக்கையாடு.

لوٹنا (loṭ-nā) *v.* புரளு, உருள், சுருள், சுருட்டு, உருட்டித் திரட்டு.

لوث (laus) *n.m.* மாசு, தூய்மைக் கேடு.

لوچن (lo-chan) *n.m.* கண்விழி, கண்.

لوک (lok) *n.m.* மனித உலகம், வாழுலகு.

لوگ (log) *n.m.* மக்கள், சமுதாயம், மக்கள் வகுப்பு.

لون (la-van) *n.m.* உப்பு.

لوہ-لوہا (loh-lohā) *n.m.* இரும்பு.

لہف (lahf) *n.m.* துயரம், கவலை.

لہسن (lah-san) *n.m.* வெள்ளைப் பூண்டு.

لہلہانا (lah-lahānā) *v.* வளங் கொழி, தழைத்தோங்கு, கிளர் வுறு, நடுங்கு, துடி, அதிர்வுறு.

لے (lae) *n.f.* விருப்பம், ஆசை, வேண்டுதல், ஆர்வவேட்கை, ஆர்வக் கோரிக்கை, பாணி, பாங்கு, மனப்பாங்கு.

لے (le) *prep.* இருந்து, இடத்தி லிருந்து, முதலாக, விட்டு, தொடங்கி, விலகி, புறப்பட்டு, இடத்திற்கு, நாடி, திசையில், நோக்கி, பக்கமாக, நேராக, எதிர்முகமாக, முன்னாக, மேம் பாடாக, வரை, வரையில், வரைக்கும்.

لیٹنا (leṭnā) *v.* படு, படுக்கை நிலைகொள், ஓய்வுகொள், துயி லமைதிகொள், இளைப்பாறு.

لیکھا (lekhā) *n.m.* கணக்கு, மதிப்பு, விவரமான அறிக்கை.

لین (len) *n.m.* பெறுதல், ஏற்றுக் கொள்ளுதல்.

لیہی (lehi) *n.f.* சாந்து, பசைமண், சீமைக்காரை, ஒட்டவைப்பதற் குப் பயன்படுத்தப்படும் பசைக் குழம்பு.

## م

ما (mā) *n.f.* தாய், அன்னை.

ما (mā) *pron.* நம்மை, நமக்கு, நம்மையே, எங்களை, எங்க ளையே.

مات (māt) *n.f.* தோல்வி, முடி வான தோல்வி.

ماتھا (māthā) *n.m.* நெற்றி.

ماجرا (mājrā) *n.m.* செய்தி, காரி யம், நிகழ்வு.

مار (mār) *n.f.* அடி, அடிப்பு.

مارڈالنا (mār-ḍālnā) *v.* கொல்லு, கொலை செய், உயிர்போக்கு.

مارنا (mār-nā) *v.* அடி, தண்டி, கொலை செய்.

ماڑی (māṛi) *n.f.* மாடி, மாடி முகப்பு.

ماس (mās) *n.m.* மாதம், மாதகாலம், மாதகால அளவு, இறைச்சி, புலாலுணவு.

ماش (māsh) *n.m.* உளுந்து.

ماکھن (mā-khan) *n.m.* வெண் ணெய்.

مالا (mālā) *n.m.* ரோசாத் தோட் டம், தலைமாலை, மலர்மாலை.

مالک (mālik) *n.m.* தலைவர், ஆண்டை, மேலாட்சியாளர், எசமான்.

مانجھنا (mānjh-nā) *v.* துப்புரவுப் படுத்து, கழுவித் தூய்மையாக்கு.

ماندگی (mān-dagi) *n.f.* சோர்வு, களைப்பு, அயர்ச்சி.

مانع (māne') *n.m.* தடுப்பவர், தடை செய்பவர், தடை செய்தல்.

مجبوری (majbūri) *n.m.* வகைக்கட் டாயம், நிர்ப்பந்தம்.

مجرمانه (mujri-mānah) *adj.* மூதா தையர், முன்னோர்.

مچھیرا (macharā) *n.m.* மீன் பிடிப் பவன், மீனவன்.

محفل (mehfil) *n.m.* ஒருங்கு கூடு தல், மக்கள் மன்றம்.

مد (mad) *n.f.* நீட்டுதல், பரப்புதல், விரிவுபடுத்தல், நீட்டிப்பு, அலையெழுந்து முன்னேறும் கடல் வெள்ளம்.

مدارات (mudā-rāt) *n.f.* விருந்தோம் பும் பண்பு.

مداری (ma-dāri) *n.m.* செப்படி வித்தைக்காரர், ஏமாற்றுக்காரர், எத்தர்.

مدام (mu-dām) *adv.* எக்காலங்களி லும், எப்போதும், என்றைக் கும், தொடர்ச்சியாக, இடை விடாது, எல்லா வழிகளிலும்.

مدامی (mu-dāmi) *adj.* நிலையான, நிலைபேறான, சாசுவதமான.

مدت (mud-dat) *n.f.* நீண்ட காலம், நெடுங்காலம்.

مدد (madad) *n.m.* உதவி, ஆதரவு, துணை, துணைஉதவி.

مددکرنا (madad karnā) *v.* உதவு, ஆதரவுவழங்கு, தேவையான வையை அளித்துதவு, அன் புடன் நோக்கு, ஆதரவு காட்டு, சாதகமாயிரு.

مدرا (mudrā) *n.f.* முத்திரை, இலச் சினை, ஆவணத்தின் மீதிடும் பொறிப்படையாளம்.

**مدرس** (mudar-ris) *n.m.* ஆசிரியர், பேராசிரியர், பல்கலைக் கழகப் பேராசிரியர்.

**مدرسه** (mad-rasa) *n.m.* கலைக் கழகம், பள்ளி, கல்லூரி.

**مدفن** (mad-fan) *n.m.* கல்லறை.

**مديد** (madid) *adj.* நீளமான, நெடிய, நெடுந்தொலைவான, நெட்டையான, உயரமிக்க.

**مذاق** (mazāq) *n.m.* கேலி, வேடிக்கைப்பேச்சு, விகடம்.

**مذكر** (muzak-kar) *adj.* ஆண்பாலுக்குறிய, ஊக்கமுடைய, வீறுமிக்க.

**مذموم** (maz-mūm) *adj.* வெறுக்கத்தக்க.

**مرا** (marā) *adj.* வாடிய, வதங்கிய, வற்றிச்சுருங்கிய, பொசுங்கிய, உயிரற்ற, மாண்ட, பட்டுப்போன.

**مراجعت** (murā-ja'at) *n.f.* போக்கிடம், புகலிடம், திரும்புகை, மீட்சி.

**مراعات** (murā'āt) *n.m.* மரியாதை, மதிப்பு, சிறப்பு, முக்கியத்துவம்.

**مرافعه** (murāfa'a) *n.m.* மேல் முறையீடு, வேண்டுகோள், உரிமை.

**مراقبه** (murā-qabah) *n.m.* தியானம்.

**مرثيه** (mar-siyah) *n.m.* இரங்கல் செய்தி.

**مرجانا** (mar-jānā) *v.* இற, அழிவுறு, பட்டுப்போ.

**مرجع** (marja) *n.m.* அடைக்கலம், புகலிடம், பாதுகாப்பிடம், இடர்காப்பிடம்.

**مرجهانا** (murj-hānā) *v.* வாடு, மெலிவுறு, ஏங்கு, வதங்கு, வாட்டமுறு.

**مرحوم** (mar-hūm) *adj.* இறந்து போன, அண்மையில் மாள்வுற்ற.

**مرسله** (mur-sila) *n.m.* அஞ்சல், அஞ்சல் அனுப்பி விடுதல்.

**مرسوم** (mar-sūm) *adj.* பழக்கமான, பயின்ற.

**مرضى** (marzi) *n.f.* விருப்பம், விருப்பாற்றல்.

**مرطوب** (mar-tūb) *adj.* ஈரம் நிறம்பிய, நனைந்த, ஈரமான, ஓதம் தோய்ந்த.

**مرغ** (murgh) *n.m.* பறவை, குருவி, கோழி, சேவற் கோழி.

**مرغزار** (margh-zār) *n.m.* பசும்புல் நிலம்.

**مرغى** (murghi) *n.f.* பெட்டைக் கோழி.

**مرگ** (mriga) *n.m.* மான்.

**مرمت** (maram-mat) *n.f.* சரிப்படுத்தல், பழுதுபார்த்தல்.

**مرمر** (mar-mar) *n.f.* சலவைக்கல், பளிங்குக்கல்.

مروڑنا (maroṛ-nā) *v.* திருக்கு, திருகு, பின்னிமுறுகு, பின்னி முறுக்கு.

مڑنا (muṛnā) *v.* திருப்பு, பின்செல்.

مزا (mazā) *n.m.* சுவை, நாச்சுவை, நாவுணர்வு, சுவையுணர்வு.

مزاحمت (muzā-hamat) *n.f.* தடை, தடங்கல், இடைஞ்சல், இடையூறு, வழியடைப்பு, எதிர்ப்பு.

مزرع (mazra') *n.m.* வயல், விளை நிலப்பரப்பு.

مزید (mazid) *adj.* எண்ணிக்கை யுடைய, விஞ்சி மிகையளவான, இன்னுங் கூடுதலான.

مس (mas) *n.m.* தொடுகை, தொடு செயல், தொடு நிலை.

مسافت (masā-fat) *n.f.* இடை வெளி.

مسافر (musā-fir) *n.m.* பயணர், பயணி, பிரயாணஞ் செய்பவர், வழிப்போக்கர்.

مستجاب (musta-jāb) *adj.* மனத்துக் குகந்த, பிடித்தமான, இணங்கு கிற, ஒத்துக்கொள்கிற, ஒத்த, இசைந்த.

مستحق (musta-hiq) *adj.* தக்க, தகுதியுடைய, வாய்ப்புக் கிசைந்த, ஏற்ற தறுவாய்க்குப் பொருத்தமான.

مستعمل (musta'mal) *adj.* பயன் படுத்திய பிறகு வாங்கப்பட்ட.

مستغنی (mus-taghni) *adj.* பிறிது சார்பற்ற, தற்சார் பான, பிறர் ஆதரவுசாராத.

مستقیم (mustaqim) *adj.* நேர்மை யான, சொல்லிலும் செய லிலும் உண்மையான.

مسجد (mas-jid) *n.m.* பள்ளி, இஸ்லாமியர் தொழுகையிடம், பள்ளிவாசல்.

مسجود (mas-jūd) *adj.* போற்று தற்குரிய, பூசனைக்குரிய.

مسدس (musad-das) *n.m.* ஆறு கைக்கட்டம், அறு கோணக் கட்டம்.

مسدود (mas-dūd) *adj.* கட்டுப் படுத்தப்பட்ட, அடைத்த.

مسرور (mas-rūr) *adj.* அக மகிழ் வுடைய.

مسکان (mus-kān) *n.f.* முறுவல், மென்சிரிப்பு, முகமலர்ச்சி, நகைமுகத் தோற்றம், புன்ன கைக் குறிப்பு.

مسکرانا (mus-kurānā) *v.* புன் முறு வல் செய், நகைமுகங் காட்டு.

مسکہ (maska) *n.m.* வெண்ணெய்.

مسلم (mus-lim) *n.m.* இஸ்லாமிய சமயத்தவர்.

مسلنا (masal-nā) *v.* பிழி, கசக்கு, பிசை, நொறுக்கு.

مسمار (mis-mār) *adj.* அழிந்த, சிதைந்த, பாழாகிய.

**مسموم** (mas-mūm) *adj.* நச்சுத் தன்மையான, நஞ்சுடைய, உயிர்போக்கும் தன்மையுடைய.

**مشابه** (mushā-beh) *adj.* ஒரு நிலைப்பட்ட, ஒரு வகைப்பட்ட, பண்பொத்த.

**مشاق** (mash-shāq) *adj.* பயிற்சி மூலமாக நன்கு திறமை பெற்றுள்ள.

**مشاقی** (mash-shāqi) *n.f.* பழக்கம், வழக்கமான செயல், நீடித்த பயிற்சி.

**مشاہرہ** (mashā-harah) *n.m.* மாத ஊதியம், சம்பளம்.

**مشتاق** (mush-tāq) *adj.* ஆவலுள்ள, மிகு விருப்பமுடைய, ஆர்வமிக்க, அடக்க முடியாத ஆர்வத்தால் தூண்டப்பட்ட.

**مشترک** (mush-tarik) *n.m.* கூட்டாளி, பங்காளி.

**مشتری** (mush-tari) *n.m.* வியாழக் கோள்.

**مشرح** (mushar-rah) *adj.* விளங்க வைக்கிற, விளக்கக்கருதுகிற.

**مشرقی** (mash-riqi) *adj.* கீழ்த்திசை உலகுக்குரிய, கிழக்குத்திசை நோக்கியிருக்கிற.

**مشق کرنا** (mashq karnā) *v.* பழக்கப்படுத்து, வழக்கமாகச் செய்து கொண்டிரு, பழக்கமாக்கு, பயிற்று.

**مشک** (mashk) *n.f.* குடி தண்ணீர் எடுத்துச் செல்லும் புட்டி.

**مشکل** (mush-kil) *n.f.* கடுமை, கடுமை வாய்ந்தது, தடங்கல், இடையூறு, துன்பம் *adj.* உறுதியான, கெட்டியான, கண்டிப்பான, எளிதாயிராத.

**مشکور** (mash-kūr) *adj.* நன்றியுள்ள, நன்றி தெரிவிக்க வேண்டிய.

**مشورہ** (mash-vara) *n.f.* அறிவுரை, ஆலோசனை, கருத்துரை, நல்லுறை.

**مصاحب** (musā-hib) *n.m.* நண்பன், தோழன், உடனிருப்பவன், கூட்டாளி.

**مصافحہ** (musā-faha) *n.m.* கைக் குலுக்கல்.

**مصالحہ** (musā-laha) *n.m.* சமரச இணக்கம், சமரச விட்டுக் கொடுப்பு.

**مضبوط** (mazbūt) *adj.* கெட்டியான, வலுவான, நீடித்த.

**مصنع** (musan-na') *adj.* செயற்கையான, பொய்யான, போலியான, மனிதனால் செய்யப்பட்ட

**مصنف** (musan-nif) *n.m.* எழுத்தாளர், ஆசிரியர்.

**مصنوعہ** (masnū'a) *adj.* செயற்கையான, போலியான, கற்பனையான,

**مضروب** (maz-rūb) *n.m.* பெருக்கப்படும் எண் *adj.* புண்பட்ட, காயம்பட்ட

مضطر (muz-tar) *adj.* அமைதியற்ற, ஓய்வுதராத, மனவுலைவுடைய.

مطبع (matba') *n.m.* அச்சகம், அச்சு அலுவலகம்.

مطلب (mat-lab) *n.m.* செயல் நோக்கம், குறிக்கொண்ட கருத்து.

مطلب برارى (matlab barāri) *n.f.* தன்னலம்.

مطلبى (mat-labi) *adj.* தன்பற்றார்ந்த, குறுகிய தன்னலமுடைய, தன்னலமே கருதுகின்ற.

مظفر (muzaf-far) *adj.* வெற்றியார்ந்த, வெற்றிக்குரிய, வெற்றிக்கு வழி வகுக்கிற, ஆள் வகையில் வெற்றி கண்ட.

معاف (mu'āf) *adj.* மன்னிக்கக் கூடிய.

معافى (mu'āfi) *n.f.* மன்னிப்பு, பாவமன்னிப்பு.

معالج (mu'ālij) *n.m.* மருத்துவர்.

معانقه (mu'ānaqa) *n.f.* அணைப்பு, தழுவல், ஆர்வ அணைப்பு, கழுத்தைச் சுற்றி இருகைகளாலும் பின்னுதல்.

معاون (mu'āvin) *n.m.* உதவுபவர்.

معاينه (mu'āyana) *n.m.* நுணுகிய கண்காணிப்பு, மேலாய்வு, கூராய்வு.

معتقد (mu'tāqid) *n.m.* மாணவர், சீடர், வழிநிற்பவர், கொள்கை பின்பற்றுபவர்.

معصوم (ma'sum) *adj.* சூழ்ச்சியற்ற, தீங்கற்ற.

معلم (mu'allim) *n.m.* கல்வி ஆசிரியர், போதனை செய்பவர், ஆசான், குரு.

معملى (ma'muli) *adj.* பொதுமுறையான, சாதாரணமாக, வழக்கமான, வாடிக்கையான.

مغربى (magh-ribi) *adj.* மேற்கில் அமைந்துள்ள, மேற்கிலிருந்து வருகிற, மேற்கில் வாழ்கிற.

مغرورى (magh-rūri) *n.f.* செருக்கு, திமிர், இறுமாப்பு, அகந்தை.

مفاجات (mafā-jāt) *adj.* திடீரென்ற, திடுநிகழ்வான, எதிர்பாரா நிகழ்வான, முன்னெச்சரிப்பற்ற, திடு விரைவான.

مفارقت (mufār-qat) *n.f.* பிரிதல், பிரிவு, பிரிவினை, கூட்டுப் பிரிதல்.

مفرح (mufar-rah) *adj.* குளிர்ச்சியான, கிளர்ச்சியூட்டுகிற, புதுவலுவுண்டாக்குகிற.

مفرد (muf-rad) *adj.* தனியான, ஒற்றையான, இரண்டற்ற, சோடி பெறாத, ஒண்டியான.

مقدار (miq-dār) *n.f.* அளவு, அளக்கப்படும் பண்பு.

مقدر (muqad-dar) *n.m.* விதி, ஊழ், விலக்க முடியா முடிவு, மாற்ற முடியா அமைவு.

مقدس (muqad-das) *adj.* புனித, கடவுளுக்கொத்த, சமய சார்பால் புனிதத்தன்மை பெற்ற, சமய சார்புடைய.

مقدم (muqad-dam) *adj.* எல்லாவற்றிற்கும் முற்பட்ட, முன்னணி முதன்மையான, மிக முக்கியமான, மிகச் சிறந்த.

مقدور (maq-dūr) *n.m.* ஆற்றல், செயல்நிலை, திறமை, வள ஆதாரம், வழிவகை.

مقروض (maq-rūz) *adj.* கடனாளியாயுள்ள, கடன்பட்டுள்ள, நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ள, கட்டுப்பாடுடைய.

مقصد (maqsad) *n.m.* உட்கோள், உட்கருத்து, உள்ளக்குறிப்பு, உள்எண்ணம், குறிக்கொண்ட செயல் முடிவு.

مقطر (muqat-tar) *adj.* வடித்திறக் கப்பட்ட.

مقفل (muqaf-fal) *adj.* பூட்டிய.

مقناطیس (miq-nātis) *n.m.* காந்தம், காந்தக்கல்.

مقوی دوا (maqavvi davā) *n.f.* நன் மருந்து, சத்துமருந்து.

مکالمه (mukāl-ma) *n.m.* உரையாடல், பேச்சு.

مکان (makkān) *n.m.* உறையுள், இருப்பிடம், வசிப்பிடம்.

مکتب (mak-tab) *n.m.* பள்ளி, கல்விசாலை.

مکر (makr) *n.m.* ஏய்ப்பு, மோசடி, சூது, எத்துமானம், ஏமாற்று, போலித்தோற்றம், பொய்ம்மை, சூழ்ச்சி, தந்திரம்.

مکرنا (mukar-nā) *v.* மறு, ஒப்புக் கொள்ள மறுத்துவிடு, மறுப் புத்தெரிவி, கொடுக்கமாட்டேனென்று கூறு,

مکڑی (makṛi) *n.f.* சிலந்தி, எட்டுக் காலி, சிலந்தியினத்தின் வகை.

ملاپ (mi-lāp) *n.f.* கூடுகை, சந்திப்பு, கூடுதல்.

ملاح (mal-lāh) *n.m.* பட கோட்டி, கடலோடி.

ملازم (mulā-zim) *n.m.* வேலையில் உள்ளவர், காசுக்கு வேலை செய்பவர்.

ملاقات (mulā-qāt) *n.f.* காண்பு, நேரிடைக்காட்சி.

ملاقاتی (mulā-qāti) *n.m.* அறிமுகமானவர், வகையாளர், பார்வையாளர்.

ملال (ma-lāl) *n.m.* மனக்குறை, வெறுப்பு, துயரம், வருத்தம்.

ملامت (malā-mat) *n.f.* பழிப்பு, கண்டனம், திட்டு, வசைப் பண்பு, பழிக்கூறு, அவதூறு, இகழ்ச்சி.

